இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு
ஆண்டறிக்கை 2024

SEC | SECURITIES AND EXCHANGE COMMISSION OF SRI LANKA

முன்னேற்றத்தின் வினையூக்கிகள்

உள்ளடக்கம்

மூலோபாய நெறிப்படுத்தல்.. 2

நிறைவேற்றுனர் மீளாய்வுகள்

தலைவரின் மீளாய்வு.. 4

பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு 8

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்...............................14

பணிப்பாளர்களும் உதவிப் பணிப்பாளர்களும்..............19

சிரேஷ்ட முகாமையாளர்கள்....................................... 20

முகாமையாளர்கள்... 21

நிகழ்வுக் காட்டிசியகம்..22

செயற்பாட்டு மீளாய்வு

மூலோபாய இலக்கு 1.. 26

மூலோபாய இலக்கு 2.. 44

மூலோபாய இலக்கு 3..62

மூலோபாய இலக்கு 4..66

மூலோபாய இலக்கு 5..69

மேலதிகத் தகவல்கள்.. 72

நிதியியல் அறிக்கைகள்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 78

நிதி நிலைமைக் கூற்று..83

நிதிச் செயற்திறன் கூற்று...84

தேறிய சொத்துக்களில் மாற்றங்களிலான கூற்று.........85

காசுப் பாய்ச்சல் கூற்று 86

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்............................87

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 103

நிதி நிலைமைக் கூற்று...107

நிதிச் செயற்திறன் கூற்று..108

தீர்வை நிதியத்தில் மாற்றங்களிலான கூற்று 109

காசுப் பாய்ச்சல் கூற்று 110

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்............................111

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 117

நிதி நிலைமைக் கூற்று..121

நிதிச் செயற்திறன் கூற்று..122

இழப்பீட்டு நிதியத்தில் மாற்றங்களிலான கூற்று..........123

காசுப் பாய்ச்சல் கூற்று 124

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்..........................125

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 131

நிதி நிலைமைக் கூற்று..135

நிதிச் செயற்திறன் கூற்று... 136

தேறிய சொத்துக்களில் மாற்றங்களிலான கூற்று........137

காசுப் பாய்ச்சல் கூற்று 138

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்......................... 139

குறிப்புகள்.. 143

பெருநிறுவனத் தகவல்கள் ....IBC

முன்னேற்றத்தின் வினையூக்கிகள் (Catalysts of Progress)

விரைவாக வளர்ச்சியடையும் ஒரு நிதியியல் நிலத்தோற்றத்தில், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு (இ.பி.ப.ஆ.) முன்னேற்றத்தின் ஒரு வினையூக்கியாக செயலாற்றி முறைமைப்படுத்தல் தனிச்சிறப்பு, சந்தை நேர்கை மற்றும் நிலைபேறான வளர்ச்சியினை இயக்குகின்றது. முறைமைப்படுத்தல் தனிச்சிறப்பு, முதலீட்டாளர் பாதுகாப்பு, சந்தை அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப புத்தாக்கம் என்பவற்றிற்கான எமது கடப்பாடானது இலங்கையின் மூலதனச் சந்தை இயக்காற்றல், மீளெழுச்சி மற்றும் எதிர்காலத்திற்கு தயாராயிருத்தல் என்பவற்றை உறுதிசெய்கின்றது. கடந்த காலத்தின் மீது இ.பி.ப.ஆ. தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வெளித்தோன்றும் போக்குகள் மற்றும் புதிய நடைமுறைகளை தழுவியுள்ளது. சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் சீரமைப்பதன் மூலமும் பங்காளிகளுடன் ஈடுபடுவதன் மூலமும் நாம் நீண்டகால வெற்றிக்கு வலுவான, உள்ளடக்கமான மற்றும் முதன்மையான ஒரு சந்தை சூழலமைப்பினை தொடர்ச்சியாக வடிவமைக்கின்றோம். நாம் முன்னோக்கிப் பார்க்கும்போது, எமது முன்னிறுத்தமானது முதலீட்டாளர்களுக்கு வலுவளித்தல், தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல் மற்றும் நிலைபேறுடைமைக்கு துணையளித்தல் என்பவற்றில் காணப்படுகின்றது. முன்னோக்கிய ஒவ்வொரு அடியுடனும், முன்னேற்றத்திற்கான வினையூக்கியாக, நேர்மை, புத்தாக்கம் மற்றும் வளர்ச்சியில் செழிப்படையும் ஒரு மூலதனச் சந்தையினை கட்டியெழுப்புவதில் நாம் எமது பங்கினை மீளுறுதி செய்கின்றோம்.

மூலோபாய நெறிப்படுத்தல்

நிலைபேறுடைய பொருளாதார வளர்ச்சிக்கு துணையளிக்கும் ஒரு வலுவான, வெளிப்படையான மற்றும் மீளெழுச்சியான மூலதனச் சந்தையினை பேணுவதற்கு இ.பி.ப.ஆ. கடப்பாட்டுடன் உள்ளது. எமது மூலோபாய நெறிப்படுத்தலானது முறைமைப்படுத்தல் தனிச்சிறப்பு, முதலீட்டாளர் பாதுகாப்பு, சந்தை அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப புத்தாக்கம் என்பவற்றில் முன்னிறுத்தம் செய்கின்றது. மேலாக, புதிய கருவிகளை அறிமுகப்படுத்துவதற்கு, சந்தை உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கு மற்றும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் சீரமைப்பதற்காக இ.பி.ப.ஆ. சந்தை பங்காளிகளுடன் ஒருங்கிணைந்த இலங்கையின் மூலதனச் சந்தையானது போட்டித்தன்மையாகவும் உள்ளடக்கமானதாகவும் காணப்படுவதனை உறுதிசெய்கின்றது. இந்த ஆண்டறிக்கையானது எமது மூலோபாயத் திட்டத்தின் ஐந்து மூலோபாய கருப்பொருட்கள் ஒவ்வொன்றிலும் எமது முன்னேற்றத்தில் ஒரு இற்றைப்படுத்தலை வழங்குகின்றது.

தொலைநோக்கு

பிராந்தியத்தில் ஒரு அளவுகோல் மூலதனச் சந்தை முறைமைப்படுத்துபவர் நிலையினை அடைதல்

பணிநோக்கு

நியாயமான, செயற்திறனான, ஒழுங்கான மற்றும் வெளிப்படையான ஒரு மூலதனச் சந்தையினை ஊக்குவிப்பதற்கு, விருத்திசெய்வதற்கு மற்றும் பராமரிப்பதற்கு

மூலோபாயக் கருப்பொருள்

- ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலினை நிறுவிப் பராமரித்தல்
- முதலீட்டாளர் நலன்களைப் பாதுகாத்தல்
- மூலதனச் சந்தை அபிவிருத்தியினை வளர்த்தல்
- அறிவுபூர்வமான முதலீட்டு தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் மூலதனச் சந்தையில் ஆர்வத்தினை ஊக்குவித்தல்
- நிறுவன தனிச்சிறப்பினை மேம்படுத்துதல்

விழுமியங்கள்

- புத்தாக்கம், ஆக்கத்திறன் மற்றும் அபிவிருத்தி
- நேர்மை, தற்சார்பின்மை மற்றும் வெளிப்படைத்தன்மை
- பங்காளிகள் மற்றும் வாடிக்கையாளர் முன்னிறுத்தமான பொறுப்புக்கள்
- வினைத்திறன் மற்றும் நெகிழ்வுத்தன்மை
- செயற்திறன் மற்றும் தரமுடைய இயக்கம்

எமது சட்டரீதியான குறிக்கோள்கள்

- இ.பி.ப.ஆ. இனை நிறுவுவதற்கு;
- நியாயமான, செயற்திறனான, ஒழுங்கான மற்றும் வெளிப்படையான பிணையங்கள் சந்தையை உருவாக்குவதற்கு, பராமரிப்பதற்கு மற்றும் முறைமைப்படுத்துவதற்கு;
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களது நலன்களை பாதுகாப்பதற்கு மற்றும்
- பிணையங்கள் சந்தைகள் தொடர்பான சேவைகளை வழங்குவதில் உயர் தொழில்சார் நியமங்கள் பராமரிக்கப்படுவதனை உறுதிசெய்வதற்கு

நிறைவேற்றுனர் மீளாய்வுகள்

நுண்ணறிவின் வினையூக்கிகள்
(Catalysts of Insight)

இ.பி.ப.ஆ. இல் தலைமைத்துவமானது நுண்ணறிவு மற்றும் முன்னோக்கினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. முறைமைப்படுத்தல் முன்னுரிமைகள் மற்றும் தேசிய குறிக்கோள்களுடன் மூலோபாயத் தீர்மானங்களை சீரமைப்பதன் மூலம் நாம் மூலதனச் சந்தை முன்னேற்றத்தினை இயக்கி, முதலீட்டாளர் நம்பிக்கையினை மீளுறுதி செய்து நிலபேறுடைய, முன்னோக்கிய வளர்ச்சியினை உறுதிசெய்கின்றோம்.

தலைவரின் மீளாய்வு

இந்த பொருளாதார புதுப்பித்தல் சூழமைவில், மூலதனச் சந்தையினை பாதுகாக்கும் மற்றும் முன்னேற்றுவதற்கான இ.பி.ப.ஆ. இன் கடப்பாடானது, அதன் பாதுகாப்பாளர் மற்றும் செயல்படுத்துபவர் ஆகிய இரட்டிப்பு பங்களிப்பில் ஒரு கவனமான சமநிலையினை நாம் தொடர்ந்தும் பேணுவது, முன்னெப்போதும் போலன்றி மிகவும் பொருத்தமானதாகும்.

மீளாய்வாண்டிற்கான இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் (இ.பி.ப.ஆ.) ஆண்டறிக்கையினை முன்னிலைப்படுத்துவது எனது சிறப்புரிமையாகும். இந்தக் காலமானது எமது தேசத்திற்கும் அதன் மூலதனச் சந்தைகளுக்கும் ஒரு குறிப்பிடத்தக்க உருமாற்றலான மற்றும் மீளெழுச்சியான காலமாகும். இலங்கை அதன் வரலாற்றில் மிகவும் கடுமையான பொருளாதார சிக்கலிலிருந்து வெளியே வந்திருப்பதில் எவ்வித ஐயமுமில்லை. இது கூட்டான விடாமுயற்சி, மூலோபாயமான மறுசீரமைப்புகள் மற்றும் மீட்டலுக்கான ஒரு அசைக்கவியலாத கடப்பாட்டினூடாக ஆகும் என்பதுடன், எமது தேசமானது பலர் எதிர்பார்த்ததிலும் பார்க்க பாரிய வேகத்துடனும் பலத்துடனும் மீளெழுந்துள்ளது.

இந்த பொருளாதார புதுப்பித்தல் சூழமைவில், மூலதனச் சந்தையினை பாதுகாக்கும் மற்றும் முன்னேற்றுவதற்கான இ.பி.ப.ஆ. இன் கடப்பாடானது, அதன் பாதுகாப்பாளர் மற்றும் செயல்படுத்துபவர் ஆகிய இரட்டிப்பு பங்களிப்பில் ஒரு கவனமான சமநிலையினை நாம் தொடர்ந்தும் பேணுவது, முன்னெப்போதும் போலன்றி மிகவும் பொருத்தமானதாகும். மேலும், எமது அனைத்து முன்னெடுப்புகள் முழுவதும் காணப்பட்ட ஒருங்கிணைந்த கருப்பொருளாக, மூலதனச் சந்தையில் நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையினை பலப்படுத்துவதற்கான இயக்கியாகும். இந்த முன்னிறுத்தமானது அவசியமானதாகும், இது எமது நிதியியல் சூழலமைப்பின் ஆரோக்கியத்தினை பேணுவதற்கு மாத்திரமன்றி, நீண்டகால, உள்ளடக்கமான மற்றும் நிலைபேறுடைய பொருளாதார வளர்ச்சிக்கு துணையளிப்பதில் ஒரு அர்த்தமுள்ள பங்கினை மூலதனச் சந்தைகள் வகிப்பதனை உறுதிசெய்வதும் ஆகும்.

முதலீட்டாளர் நம்பிக்கையினை வளர்ப்பதற்கு சந்தை நேர்மையினை பலப்படுத்துதல்

முதலீட்டாளர் நலன்களை பாதுகாப்பதற்கு சந்தையின் நேர்மை அடிப்படையாக காணப்படுகின்றது. இவ்வாண்டின்போது,

> மேற்பார்வையினை மேம்படுத்தும் எமது தொடர்ச்சியான முயற்சிகளுக்கு சீரமைவாக, இ.பி.ப.ஆ. நஸ்டாக்கிடமிருந்து அதி நவீன சந்தை கண்காணிப்பு முறையினை கொள்வனவு செய்துள்ளது.

ஆணைக்குழுவின் கடுமையான புலனாய்வுகள் மற்றும் தீர்மானமான வலியுறுத்தல் நடவடிக்கைகள் மூலதனச் சந்தை முழுவதும் துர்நடத்தையினை தடுத்து பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கு வகித்தன. இந்த வழிமுறைகள் முதலீட்டாளர் நம்பிக்கையினை வலுவூட்டுவது மாத்திரமன்றி மூலதன உருவாக்கலுக்கு ஒரு பாதுகாப்பான, வெளிப்படையான மற்றும் நம்பிக்கையான இலக்காக இலங்கையின் நிலைப்பாட்டினை மேம்படுத்துவதற்கு கணிசமான பங்களிப்பு செய்கின்றது. ஒரு குறிப்பிடத்தக்க வலியுறுத்தல் விளைவாக, ஊழியர் சேமலாப நிதியத்தினால் மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 231 மில்லியனை மீளப்பெறுவதற்கு இ.பி.ப.ஆ. வசதியளித்தது. இது ஒரு பட்டியலிடப்பட்ட கம்பனியின் பங்குகளை உள்ளடக்கிய சந்தை கையாளுகை மற்றும் கூட்டுச்சதி, மற்றும் துர்நடத்தைக்கு உதவியமை தொடர்பாக கொழும்பு கோட்டை நீதவான நீதிமன்றத்தின் முன்னால் 2020 இல் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கு தொடர்பானதாகும். ஏப்ரல் 2024 இல் ஆணைக்குழுவானது, ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (ஊ.சே.நி.) ஏற்பட்ட இழப்பு, குறித்த தவறுதல்கள் இழைக்கப்பட்ட காலம், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஊ.சே.நி. இற்கு ஏற்பட்ட நட்டத்தை தீர்ப்பனவு செய்வதற்கு உடன்பட்டமை, இந்த வழக்குடன் இணைந்த ஏனைய நிலுவையிலுள்ள வழக்காடல்கள் மற்றும் முன்னைய குற்றத்தீர்ப்புகள் இல்லாமை என்பவற்றை கருத்திலெடுத்ததன் பின்னர் இத்தவறுகளை ஒத்திணங்குவதற்கு அனுமதித்தது. இத்தீர்மானமானது ஒரு முக்கியமான வலியுறுத்தல் சாதனையினை பிரதிநிதித்துவம் செய்வதுடன், முதலீட்டாளர் நலன்களை பாதுகாப்பதில் மற்றும் சந்தை நேர்மையினை பராமரிப்பதற்கான இ.பி.ப.ஆ. இன் கடப்பாட்டினை வலியுறுத்துகின்றது.

தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் சந்தை கண்காணிப்பு

எமது முறைமைப்படுத்தல் அணுகுமுறையின் ஒரு அவசியமான கூறாக சந்தை கண்காணிப்பு காணப்படுவதுடன், மூலதனச் சந்தையினுள்ளே சாத்தியமான பாதிப்புகளை கண்டுபிடித்து விளித்துரைப்பதற்கு ஒரு முக்கியமான முன்னெச்சரிக்கை பொறிமுறையாக செயற்படுகின்றது. ஒழுங்கற்ற வர்த்தகப் போக்குகள் மற்றும் சந்தை துர்நடத்தைக்கான அறிகுறிகளை ஆரம்பத்திலேயே இனங்காண்பதன் மூலம், சந்தை நேர்மையினை பாதுகாத்தல் மற்றும் முதலீட்டாளர் நம்பகத்தன்மையினை வலியுறுத்துவதில் வினைத்திறனான கண்காணிப்பானது ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது. மேற்பார்வையினை மேம்படுத்தும் எமது தொடர்ச்சியான முயற்சிகளுக்கு சீரமைவாக, இ.பி.ப.ஆ. நஸ்டாக்கிடமிருந்து அதி நவீன சந்தை கண்காணிப்பு முறையினை கொள்வனவு செய்துள்ளதுடன், இது 2025 இன் ஜுன் நடுப்பகுதியில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மேம்பட்ட முறைமையானது சந்தை கண்காணிப்பிற்கு செயற்கை நுண்ணறிவினை பயன்படுத்துவதுடன், மெய்நேர வர்த்தக நடவடிக்கையினை கண்காணிப்பதற்கு, முறைகேடுகளை கண்டுபிடிப்பதற்கான எமது ஆற்றலினை கணிசமானளவு அதிகரிப்பதுடன் அவசியமானபோது நேரகாலத்துடனான வலியுறுத்தல் நடவடிக்கையினை மேற்கொள்வதற்கும் வசதியளிக்கும். இலங்கையின் மூலதனச் சந்தையானது நியாயமாக, வெளிப்படைத்தன்மையாக, மற்றும் வெளிவருகின்ற சவால்களுக்கு மத்தியில் மீளெழுச்சியுடன் இருப்பதனை உறுதிசெய்வதற்கான எமது அசைக்கவியலாத கடப்பாட்டினை வலியுறுத்துகின்றது.

சந்தை மேற்பார்வையினை மேம்படுத்துவதற்காக சுப்டெக் புத்தாக்கத்தினை பயன்படுத்துதல்

நிதியியல் முறைமைகள் தொடர்ச்சியாக சிக்கலுடன் வளர்ச்சியடைவதனால், இந்த வளர்ந்துவரும் நிலத்தோற்றமானது மேற்பார்வை தொழில்நுட்பத்தின் (சுப்டெக்) அதிகரித்த பயன்பாட்டினை இயக்குகின்றது. இது மிகவும் வினைத்திறனான மற்றும் திறமையான சந்தை மேற்பார்வையினை இயலுமையாக்குகின்றது. உயர்வடையும் பருமனிலான கொடுக்கல் வாங்கல் மற்றும் இணக்கப்பாட்டு தரவுகள் தற்போது அதிநவீன பகுப்பாய்வினை வேண்டுவதுடன், இது நேரகாலத்துடனான மற்றும் துல்லியமான தீர்மானம் மேற்கொள்வதனை உறுதிசெய்கின்றது. இந்த தேவையினைச் சந்திக்கும் முகமாக நாம், தரவுப் பகுப்பாய்வு, செயற்கை நுண்ணறிவு மற்றும் தன்னியக்கம் போன்ற அதிநவீன தொழில்நுட்பங்களை ஒருங்கிணைக்கும் முகில் அடிப்படையிலான சுப்டெக் முறைமையில் முதலீடு செய்துள்ளோம். இந்த புத்தாக்கமான மேடையானது எமது மேற்பார்வை வினைத்திறனை மேம்படுத்துவது மாத்திரமன்றி, மேற்பார்வைக்கு இடர் அடிப்படையிலான அணுகுமுறைக்கும் துணையளிக்கின்றது. இது சந்தை பங்குபற்றுனர்களின் இடர் தோற்றுருவத்தினை மதிப்பிடுவதில் மிகவும் பயனுறுதியாக வளங்களை ஒதுக்கீடு செய்வதற்கும் அனுமதிக்கின்றது.

சந்தை அபிவிருத்தி மற்றும் பசுமை நிதியளிப்பினை மேம்படுத்துதல்

இவ்வாண்டின்போது இலங்கையின் மூலதனச் சந்தையினை விரிவாக்குவதில் மற்றும் ஆழமாக்குவதில் இ.பி.ப.ஆ. கணிசமான முன்னேற்றங்களை மேற்கொண்டது. ஒரு முக்கிய மைல்கல்லாக காணப்பட்டது நிலைபேறுடைய நிதியளிப்பினை ஊக்குவிக்கும் பசுமை மற்றும் நீல முறிகளுக்கான முறைமைப்படுத்தல் கட்டமைப்பின் அறிமுகம் ஆகும். இந்தப் பயணமானது இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், அத்தகைய இரண்டு கருவிகளின் வெற்றிகரமான பட்டியலிடலானது சூழல்ரீதியான பொறுப்பான முதலீட்டு தெரிவுகளுக்கான அதிகரிக்கும் முதலீட்டாளர் ஆர்வத்தினை வலியுறுத்துகின்றது.

மூலதன உருவாக்கத்திற்கு துணைபுரியும் மற்றும் பரந்தளவிலான முதலீட்டாளர் தளத்தினை கவருகின்ற முன்னெடுப்புகளான, நிரந்தர முறிகள், உட்கட்டமைப்பு முறிகள், உயர் விளைவு முறிகள், சுக்குக்கள், பங்கு கடன்பெறல் மற்றும் வழங்கல் மற்றும் முறைமைப்படுத்தப்பட்ட குறை விற்பனை என்பனவற்றின் அறிமுகத்துடன் நாம் கிடைக்கக்கூடிய கருவிகளில் வீச்செல்லையினை விரிவாக்கியுள்ளோம்.

சந்தை நுட்பங்களை மேலும் மேம்படுத்துவதற்கு பண்டங்கள் மூலாதாரங்கள் போன்ற கருவிகளை உள்ளடக்கும் பல் வகுப்பு மூலாதாரங்களது பரிவர்த்தனையினை நிறுவுவதற்கான பிரேரணைகளை நாம் மதிப்பிடுகின்றோம். இது சந்தையில் விலை கண்டுபிடிப்பு, திரவத்தன்மை, மற்றும் இடர் முகாமைத்துவ ஆற்றல்களை பலப்படுத்தும், மேலாக, நாம் சமூக முறிகள் மற்றும் நிலைபேறுடைமை இணைக்கப்பட்ட முறிகளுக்கான முறைமைப்படுத்தல் கட்டமைப்புகளை நிறைவுசெய்கின்றோம், இது ஒரு மீளெழுச்சியான, உள்ளடக்கமான

தலைவரின் மீளாய்வு

நிதியியல் குற்றத்தினை தடுத்தல் மற்றும் சர்வதேச முறைமைப்படுத்தல் நியமங்களுடன் சீரமைத்தல் என்பவற்றிற்கான எமது கடப்பாட்டினை வெளிக்காட்டும் விதமாக இ.பி.ப.ஆ. ஒரு தனிப்பயனாக்கப்பட்ட (AML/CFT) அலகினை நிறுவியது.

மற்றும் எதிர்காலத்திற்கு தயாரான மூலதனச் சந்தையினை விருத்திசெய்வதற்கான எமது கடப்பாட்டினை வலியுறுத்துகின்றது.

டிஜிட்டல் யுகத்தில் நிதியியல் அறிவினை பேணுதல்

டிஜிட்டல் ஈடுபாட்டினை பெருமமாக்குவதற்கும் எமது அணுகுதலை பரவலாக்குவதற்கும் நாம் எமது முதலீட்டாளர் கல்வி முன்னெடுப்புகளை மீள்நிலைப்படுத்தியுள்ளோம். பரந்தளவிலான டிஜிட்டல் மேடைகளை பயன்படுத்துவதன் மூலம், நாம் நிதியியல் கல்வியினை மிகவும் அணுகத்தக்கதாகவும், ஈடுபாடுடையதாகவும், பொருத்தமானதாகவும் மேற்கொண்டுள்ளோம், விசேடமாக இளம், தொழில்நுட்ப அறிவுத்திறனுடைய அவையினருக்காகும். ஏனெனில் இவர்களே எமது மூலதனச் சந்தையின் எதிர்கால வளர்ச்சிக்கு முக்கியமானவர்கள் ஆகும். ஆரம்ப வயதிலேயே நிதியியல் அறிவினை வளர்ப்பதன் முக்கியத்துவத்தினை இனங்கண்டு நாம் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையுடன் கூட்டிணைந்து 2023 இல் இலங்கையிலுள்ள 100 பாடசாலைகளில் மூலதனச் சந்தைச் சங்கங்களை ஆரம்பித்தோம். இந்த முன்னெடுப்பிற்கு நிரப்புக்கூறாக நாம் இந்த பாடசாலைகளிலுள்ள கல்வி கற்பிப்பவர்களிடையே நிதியியல் அறிவினை மேம்படுத்துவதற்காக ஆசிரியர் பயிற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளோம். எமது வெளிக்கள முயற்சிகளை “மூலதனச் சந்தை மாஸ்டர்ஸ்” என்று தலைப்பிட்ட ஒரு புதிர் போட்டியுடன் மேலும் வளப்படுத்தினோம். இப்போட்டியானது மூலதனச் சந்தைகளில் மாணவர்களது புரிந்துணர்வினை ஒரு ஊடாட்டமான மற்றும் ஊக்கமளிக்கும் விதத்தில் ஆழமாக்குவதற்காக வடிவமைக்கப்பட்டதாகும். இந்த குறிக்கோளினை மேலும் தொடர்வதில், நாம் 2024 இல் எமது உத்தியோகபூர்வமான லிங்கட்இன் தோற்றுருவத்தினை ஆரம்பிப்பதன் மூலம் எமது டிஜிட்டல் பிரசன்னத்தினை விரிவாக்கினோம். இது நிதியியல் சமூகத்தினுள் அறிவு பகிர்விற்கும் தொழில்சார் ஈடுபாட்டிற்குமான ஒரு பெறுமதியான மேடையினை உருவாக்கியுள்ளது. இந்த மூலோபாயமான முன்னெடுப்புகள் தகவலறிந்த, நம்பிக்கையான மற்றும் எதிர்காலத்திற்கு தயாரான முதலீட்டாளர் தளத்தினை கட்டியெழுப்பும் எமது அர்ப்பணிப்பினை வலியுறுத்துகின்றது.

AML/CFT கட்டமைப்புகளை பலப்படுத்துதல்

நிதியியல் குற்றத்தினை தடுத்தல் மற்றும் சர்வதேச முறைமைப்படுத்தல் நியமங்களுடன் சீரமைத்தல் என்பவற்றிற்கான எமது கடப்பாட்டினை வெளிக்காட்டும் விதமாக இ.பி.ப.ஆ. இவ்வாண்டின்போது ஒரு தனிப்பயனாக்கப்பட்ட பணம் தூய்மையாக்குதலுக்கு எதிர்ப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை தடைசெய்தலுக்கான (AML/CFT) ஒரு அலகினை நிறுவியது. இந்த அலகானது குறுக்குச் செயற்பாட்டு நிபுணத்துவத்தினை உள்ளடக்கியதுடன், இ.பி.ப.ஆ. இன் AML/CFT செயற்திட்டத்தினை அமுலாக்குவதற்காக நிறுவப்பட்டதுடன், 2026 இல் இலங்கையின் எதிர்வரும் தேசிய பரஸ்பர மதிப்பீட்டில் ஒரு மத்திய பங்கினை வகிக்கும். இ.பி.ப.ஆ. இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் நுண்ணறிவு அலகுடன் (நி.நு.அ.) நெருங்கிய பங்குடைமையினை வளர்த்துள்ளதுடன், இந்த தேறிய முன்னுரிமையில் ஒருங்கிணைந்த முயற்சிகளை உறுதிசெய்வதற்காகும். இவ்வாண்டின்போது. நி.நு.அ. இன் அதிகாரிகளுடன் சேர்ந்து கூட்டு பரிசீலனைகள் நடாத்தப்பட்டன. இவை 2006 இன் 06 ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் அதனுடனிணைந்த ஒழுங்குவிதிகளுடன் சந்தைப் பங்குபற்றுனர்களின் இணக்கப்பாட்டு மட்டத்தினை மதிப்பிடுவதற்காகும். துறையின் தயார்நிலைக்கு மேலும் துணையளிப்பதற்கு இ.பி.ப.ஆ. இன் பணியாளர்களுக்கு, பங்குத் தரகு நிறுவனங்களின் பி.நி.அ.கள் மற்றும் அவர்களது இணக்கப்பாட்டு அதிகாரிகளுக்கு ஒப்புதல் பரிசீலனை கருவியின் பயன்பாட்டில் ஒரு நேரடி செயல்விளக்கம் ஒழுங்குசெய்யப்பட்டது. இது தடைசெய்யும் கட்டமைப்புகளை பலப்படுத்துவதற்கு மற்றும் மூலதனச் சந்தையினுள் ஒரு இணக்கப்பாட்டு கலாச்சாரத்தினை ஊக்குவிப்பதற்கான ஒரு முன்முயற்சியான அணுகுமுறையினை பிரதிபலிக்கின்றது.

சர்வதேச ஈடுபாடு

பிராந்திய ஒருங்கிணைப்பு மற்றும் சந்தை அபிவிருத்தி நோக்கிய ஒரு முக்கிய படியாக இ.பி.ப.ஆ. மாலைதீவில் ஜுலை மாதத்தில் மாலைதீவு மூலதனச் சந்தை அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CMDA) ஒரு சிறப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (பு.ஒ.) கைச்சாத்திட்டது. இந்த பு.ஒ. ஆனது கொ.ப.ப. இல் மாலைதீவு கம்பனிகளின் இரண்டாந்தர பட்டியலிடலுக்கு வசதியளிப்பதுடன், முறைமைப்படுத்தல் மேற்பார்வை, கொள்திறன் கட்டியெழுப்புதல் மற்றும் இரண்டு முறைமைப்படுத்துபவர்களிடையே தகவல் பரிமாற்றம் என்பவற்றில் தொடர்ச்சியான ஒத்துழைப்பினை வளர்க்கும். சர்வதேச ஈடுபாட்டினை மேலும் பலப்படுத்தும் விதமாக இ.பி.ப.ஆ. ஜுன் மாதத்தில் சிற்றளவு முதலீட்டாளர்களில் ச.பி.ஆ.ஒ. குழு (குழு 8) கூட்டத்தினை விருந்தோம்பியது. இந்த நிகழ்வானது உலகளாவிய முறைமைப்படுத்துபவர்கள், கல்விமான்கள் மற்றும் துறைசார் நிபுணர்களிடையே முதலீட்டாளர் கல்வியினை மேம்படுத்துவதிலான திடமான முன்னிறுத்தத்துடன் செழிப்பான கலந்துரையாடல்களுக்கு வசதியளித்தது. இந்த கூட்டு முயற்சிகள், அதிகரிக்கும் ஒன்றோடொன்று இணைந்த உலகளாவிய சூழலில் சந்தை நேர்மையினை ஊக்குவித்தல், குறுக்கு எல்லை ஒத்துழைப்பு மற்றும் முதலீட்டாளர் பாதுகாப்பு என்பவற்றை ஊக்குவிப்பதில் இ.பி.ப.ஆ. இன் கடப்பாட்டினை வலியுறுத்துகின்றது.

எதிர்காலக் கண்ணோட்டம்

தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அர்த்தமுள்ளவிதத்தில் பங்களிப்பு செய்வதற்கான இலங்கையின் மூலதனச் சந்தையின் சாத்தியமானது இ.பி.ப.ஆ. இற்கான எமது தொலைநோக்கின் மையமாகக் காணப்படுகின்றது. வளர்ந்துவரும் வாய்ப்புக்கள் மற்றும் தொடர்ச்சியான சவால்களினால் வடிவமைக்கப்பட்ட ஒரு நிலத்தோற்றத்தினை நாம் சமாளிக்கும்போது எமது முன்னிறுத்தமானது பின்வருவனவற்றில் காணப்படுகின்றது. நன்கு முறைமைப்படுத்தப்பட்ட, வெளிப்படையான மற்றும் இயக்காற்றலான மூலதனச் சந்தையினை கட்டியெழுப்புவதிலாகும். இது முதலீட்டாளர்களைப் போன்று வழங்குனர்களிடையேயும் நம்பிக்கைக்கு ஊக்கமளிக்கின்றது. இ.பி.ப.ஆ. இல் எனது தலைமைத்துவமானது ஒரு சமநிலையான அணுகுதுறையில் ஊன்றியுள்ளது - வலுவான முறைமைப்படுத்தல் மேற்பார்வையினை உறுதிசெய்யும்வேளை சந்தை அபிவிருத்தியினையும் ஊக்குவிப்பதாகும்.

இலங்கை அதன் பொருளாதார மீட்புப் பாதையில் முன்னேறும்போது, நிலைபேறுடைய அபிவிருத்திக்கான அடித்தளமான மூலதன உருவாக்கத்தினை இயலுமையாக்குவதில் இ.பி.ப.ஆ. ஒரு முக்கிய பங்கினை வகிக்க உள்ளது. அரசாங்கத்தின் பரந்த பொருளாதார நிகழ்ச்சிநிரலுக்கு சீரமைவாக, நாம் ஒரு விரிவான, குறுங்கால, மத்தியகால

மற்றும் நீண்டகால குறிக்கோள்களை உருவரையும் உள்ளக சாலை வரைபடத்தினை உருவாக்கியுள்ளோம். இந்த மூலோபாய கட்டமைப்பானது 12 உயர் தாக்கமான முன்னெடுப்புகளைக் கொண்டுள்ளன. இவை கொ.ப.ப. இன் பரஸ்பரமற்றமயமாக்கல், கூட்டாண்மை கடன் மற்றும் கூட்டு முதலீட்டுத் திட்டச் சந்தைகளின் விரிவாக்கம், புதிய நிதியியல் கருவிகளின் அறிமுகம், மற்றும் பல் சொத்து வகுப்பு மூலாதாரப் பரிவர்த்தனையினை நிறுவுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. இந்த முயற்சிகள் முறைமைப்படுத்தலில் மறுசீரமைப்புகள், டிஜிட்டல் உருமாற்றம், இடர் முகாமைத்துவம் மற்றும் முதலீட்டாளர் கல்வி என்பவற்றால் பூர்த்தி செய்யப்படுவதுடன், இவை அனைத்தும் ஒரு துடிதுடிப்பான, உள்ளடக்கமான மற்றும் முன்னோக்கிப் பார்க்கும் மூலதனச் சந்தையினை கட்டியெழுப்புவதனை நோக்காகக் கொண்டதாகும்.

விரைவான தொழில்நுட்ப மேம்படுத்தல்களினால் வரையறை செய்யப்பட்ட யுகத்தில் டிஜிட்டல் சொத்துக்கள் மற்றும் உட்கட்டமைப்பினை ஒருங்கிணைத்தலானது எமது நிதியியல் சூழலமைப்பினை நவீனமாக்குவதற்கு அவசியமானதாக காணப்படுகின்றது. மூலதனச் சந்தைகளில் புத்தாக்கத்தினை தழுவுதல் வினைத்திறன் மற்றும் அணுகுதலை மேம்படுத்துவது மாத்திரமன்றி, முதலீடு மற்றும் வளர்ச்சிக்கான புதிய வழிகளை திறக்கின்றது. எமது இறுதி இலக்கானது நீண்டகால ஸ்திரத்தன்மையினை வளர்க்கும், எதிர்காலச் சந்ததிக்கு நிலைபேறுடைய செழிப்பினை உறுதிசெய்யும் ஒரு இயக்காற்றலான மற்றும் மீளெழுச்சியான சந்தையினை உருவாக்குவதாகும்.

முடிவுரை

இந்த சவால்மிக்க ஆனால் மாற்றலடையும் காலத்தின்போது எமது குறிக்கோள்களை அடைவதற்கு காரணியாயிருந்த அவர்களது கடப்பாடு மற்றும் நிபுணத்திற்கு நான் எனது சக ஆணைக்குழு அங்கத்தவர்கள், பணிப்பாளர் நாயகம், பிரதி பணிப்பாளர் நாயகம் மற்றும் இ.பி.ப.ஆ. இன் அர்ப்பணிப்புடைய பணியாட்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். நான் மான்புமிகு ஜனாதிபதி, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர், பிரதி அமைச்சர்கள் மற்றும் எமது சந்தை பங்குபற்றுனர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் அனைத்து பங்காளிகளுக்கும் ஒரு திடமான, மிகவும் மீளெழுச்சியான, உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மையான பிணையங்கள் சந்தையினை வடிவமைப்பதில், அவர்களது நம்பிக்கை மற்றும் ஈடுபாட்டிற்கு எனது நன்றியினைத் தெரிவிக்கின்றேன்.

இலங்கையின் பொருளாதார மீட்சியானது ஒரு எதிர்காலத்திற்கு தயாரான மூலதனச் சந்தையினை கட்டியெழுப்புவதற்கு ஒரு தனித்துவமான வாய்ப்பினை முன்னிலைப்படுத்துகின்றது ஒரு புத்தாக்கமான, வெளிப்படையான, மற்றும் உள்ளடக்கமான மற்றும் தொடரவிருக்கின்ற Gen Z, Gen Alpha, மற்றும் சந்ததிகளுடன் ஈடுபடக்கூடிய ஆற்றலுடைய ஒன்றாகும். கூட்டாக நாம் எமது சந்தையின் முழுமையான சாத்தியம் மற்றும் அனைத்து இலங்கையர்களும் நலனடையக்கூடிய நிலைபேறுடைய பொருளாதார வளர்ச்சியினை அடைவது நோக்கி தொடர்ச்சியாக தொழிற்படுவோம்.

சிரேஷ்ட பேராசிரியர். டி.பி.பி.எச். திசாபண்டார
தலைவர்

இலங்கை பிணையங்கள் மற்றும்
பரிவர்த்தனை ஆணைக்குழு

பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

நாம் தற்போது பாரம்பரிய முறைமைப்படுத்தல் மாதிரிக்கு சவால் விடுக்கும் விரைவான மாற்றத்தைக்கொண்ட ஒரு சூழலில் செயலாற்றுகின்றோம். விரைவான தொழில்நுட்ப அபிவிருத்தி, மாற்றமடையும் மக்கள் தொகை மற்றும் மாற்றமடையும் முதலீட்டாளர் மனப்போக்கு என்பவற்றால் இயக்கப்படும் இன்றைய மூலதனச் சந்தையானது ஒரு தசாப்தத்திற்கு முன்னர் காணப்பட்டதிலிருந்து மிகவும் வித்தியாசமாயுள்ளது.

2024 ஆம் ஆண்டில் இ.பி.ப.ஆ. இனால் பொறுப்பேற்கப்பட்ட பணியினை நான் மிகவும் பெருமையுடனும் திருப்தியுடனும் மீளாய்வு செய்கின்றேன்.

மீளெழுச்சியான ஆண்டு: சீரமைத்தல், வளர்ந்துவரும் மற்றும் செழிப்பானது

ஒரு தேசமாக நாம் முகங்கொடுத்த பொருளாதார சிக்கல்களிலிருந்து நாம் தொடர்ச்சியாக வெளிவரும்போது, அதனை மீளெழுச்சி, சீரமைத்தல் மற்றும் முன்னேற்றகரமான ஆண்டு எனக் குறிப்பிடலாம், விரைவான தொழில்நுட்ப மாற்றங்களினால் வளர்ந்து வருகின்ற ஒரு உலகளாவிய பொருளாதார நிலத்தோற்றத்தில் வளர்ச்சியடையும் முதலீட்டாளர் எதிர்பார்ப்புகள் மற்றும் உயர்வான தளம்பலுடைய சந்தைகளுடன் சேர்த்து உலகளாவிய பொருளாதார உறுதியின்மை என்பற்றுக்கு மத்தியில் மூலதனச் சந்தை முறைமைப்படுத்துபவராக எமது பங்கானது மிகவும் முக்கியமானதாகின்றது.

அறிக்கையிடும் காலப்பகுதின்போது, எமது சந்தைகள் ஒரு புறத்தில் நாம் கடந்துசென்ற பொருளாதார சிக்கல்களினாலும் மறுபுறத்தில் நிதிச் சந்தைகளில் ஏற்பட்ட கணிசமான முன்னேற்றங்களினாலும் செல்வாக்கு செலுத்தப்பட்டன. ஒப்பிடக்கூடிய உலகளாவிய சந்தைகள், வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள், சூழல், சமூக மற்றும் ஆளுகை சிந்தனைகள், முதலீட்டாளர் நடத்தைகள், எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைகள், மற்றும் பெருகிவரும் இயங்கலை மோசடி மற்றும் சந்தை கையாளுகைளுடன் முன்நிகழ்ந்திராக வேகத்தில் வளர்ச்சியடைகின்றன. இந்த பின்னணியிலேயே இ.பி.ப.ஆ. இந்த அனைத்து போக்குகளையும் கண்காணித்து எமது சந்தைக்கான சாத்தியமான தாக்கங்களை கருத்திலெடுத்து

எமது பொறுப்பாணையானது இரட்டிப்பு பொறுப்புக்களைச் சுற்றியுள்ளது: வலுவான முறைமைப்படுத்தலூடாக மூலதனச் சந்தைகளின் நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் ஸ்திரத்தன்மையினை உறுதிசெய்யும்வேளை நிலைபேறுடைய பொருளாதார வளர்ச்சியினை இயக்குவதற்கான சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புகளை மேம்படுத்துவதாகும். இந்த இரட்டிப்பு பொறுப்புக்கள் பரஸ்பரமாக பிரத்தியேகமானவை அல்ல, மாறாக, அவை திடமாக பின்னிப்பிணைந்துள்ளன.

எதிர்காலத்தை நோக்கும் எமது மூலோபாயத் திட்டங்களை அமுல்படுத்துகின்றது.

அதே நேரத்தில், பாரம்பரிய அதிகாரசபைகளில், நிறுவனங்களில் மற்றும் தகவல் வழிகள் ஆகியவற்றிலான நம்பிக்கை இழப்பு மற்றும் மிகவும் துண்டுதுண்டாக பிரிக்கப்பட்ட நிதியியல் மற்றும் ஊடக நிலத்தோற்றம் காணப்பட்டது என்பதை அறிந்துகொள்ளுதல் முக்கியமானதாகும். சிற்றளவு முதலீட்டாளர்கள் இயங்கலையில் வர்த்தகம் செய்வதுடன் சமூக ஊடகங்கள் உள்ளடங்கலான புதிய மூலங்களிலிருந்து ஆலோசனை மற்றும் தகவல்களில் தங்கியிருந்து செயலூக்கமான சந்தை பங்குபற்றுனர்களாக வந்துள்ளார்கள் - இவை நம்பகத்தன்மையாக இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம் ஆனால் நிச்சயமாக செல்வாக்கு செலுத்துகின்றன.

அதாவது, நாம் தற்போது பாரம்பரிய முறைமைப்படுத்தல் மாதிரிக்கு சவால் விடுக்கும் விரைவான மாற்றத்தைக்கொண்ட ஒரு சூழலில் செயலாற்றுகின்றோம். விரைவான தொழில்நுட்ப அபிவிருத்தி, மாற்றமடையும் மக்கள் தொகை மற்றும் மாற்றமடையும் முதலீட்டாளர் மனப்போக்கு என்பவற்றால் இயக்கப்படும் இன்றைய மூலதனச் சந்தையானது ஒரு தசாப்தத்திற்கு முன்னர் காணப்பட்டதிலிருந்து மிகவும் வித்தியாசமாயுள்ளது.

எமது பணிக்கு துணைபுரிவதற்காக, தரவினால் இயக்கப்படும் சூழலில் செழிப்படைவதற்கு எமது எதிர்கால பணியாட்களுக்கு தேவையான திறன்களை நாம் தொடர்ச்சியாக இனங்கண்டு கட்டியெழுப்புகின்றோம். நாம் எமது நிறுவனத்தினை நிதியியல் சந்தைகளிடையே முறைமைப்படுத்தலுக்காக பரந்த பொறுப்புக்கூறலுடன் சில வணிக அலகுகளை பிரதிபலிப்பதற்காக சீரமைத்துள்ளளோம்.

மேலும், இந்த சிக்கல்கள் அதிகளவில் துருவப்படுத்தப்படுவதுடன், நாம் முறைமைப்படுத்தும் சந்தையினை விருத்திசெய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடும்போது நாம் பாரியளவில் கூர்ந்தாய்வு செய்யப்படுகின்றோம். இ.பி.ப.ஆ. இன் பொறுப்பாணை, கட்டமைப்பு மற்றும் முறைமைப்படுத்தல் நிகழ்ச்சிநிரல் என்பனவும் இந்த புதிய அபிவிருத்திகளின் விளைவாக கணிசமானளவு மாற்றமடைந்துள்ளன.

எமது பொறுப்பாணையினை நிறைவேற்றுவதில் நாம் முன்னுரிமைகளை சமநிலைப்படுத்த வேண்டியுள்ளது – உதாரணமாக, முதலீட்டாளர்களை பாதுகாத்தல் மற்றும் மூலதன உருவாக்கத்தினை வளர்த்தல், சுயாதீனமாக செயலாற்றுதல் மற்றும் எமது முறைமைப்படுத்தல் பங்காளிகளுடன் பணிபுரிதல் மற்றும் வலுவான வலியுறுத்தலை பாரம்பரியக் கருவிகளுடன் விநியோகிக்கும் வேளை மாற்றீட்டு அணுகுமுறைகளுக்கும் ஏற்புத்திறமுடன் உள்ளோம்.

எமது பொறுப்பாணையானது இரட்டிப்பு பொறுப்புக்களைச் சுற்றியுள்ளது: வலுவான முறைமைப்படுத்தலூடாக மூலதனச் சந்தைகளின் நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் ஸ்திரத்தன்மையினை உறுதிசெய்யும்வேளை நிலைபேறுடைய பொருளாதார வளர்ச்சியினை இயக்குவதற்கான சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புகளை மேம்படுத்துவதாகும். இந்த இரட்டிப்பு பொறுப்புக்கள் பரஸ்பரமாக பிரத்தியேகமானவை அல்ல, மாறாக, அவை திடமாக பின்னிப்பிணைந்துள்ளன. நன்கு முறைமைப்படுத்தப்பட்ட ஒரு சந்தையானது முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் முறைமைசார் நம்பிக்கைக்கு மையமான மூலப்பொருளாகும்வேளை, ஒரு உள்ளடக்கமான சந்தையானது போட்டித்தன்மை, பொருத்தம் மற்றும் மீளெழுச்சியினை உறுதிசெய்கின்றது.

கடந்த வருடத்தின்போது, நாம் இந்த இரண்டு குறிக்கோள்களை பேணுவதில் முக்கியமான முன்னேற்றத்தினை அடைந்துள்ளோம். முறைமைப்படுத்தல் பகுதியில், நாம் பின்வருவனவற்றுக்காக அதிநவீன மற்றும் சிறந்த சந்தை கண்காணிப்பு முறைமையினை கொள்வனவு செய்தோம்: இவை எமது மெய்நேர கண்காணிப்பு நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கு, எமது மேற்பார்வை கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு, தீவிரமாக்கப்பட்ட வலியுறுத்தல் பொறிமுறைகள், உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களது வெளிப்படுத்தல் மற்றும் கூட்டாண்மை ஆளுகை கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கும் ஆகும். இந்த வழிமுறைகள் முறைசார் இடரினை தணிப்பதற்காக மாத்திரமன்றி முதலீட்டாளர் நம்பகத்தன்மை மற்றும் சந்தை ஒழுக்கத்தை இயக்குவதற்கும் ஆகும்.

ஒரே நேரத்தில் சந்தை திரவத்தன்மையினை ஆழமாக்குவதற்கும், வழங்குனருக்கான அணுகுதலை மேம்படுத்தவும், கருவிகளது பன்முகப்படுத்தலுக்கும், முதலீட்டாளர் பங்குபற்றுதலை விரிவாக்குவதற்கும் மற்றும் பங்காளிகளிடையே நிதியியல் உள்ளடக்கத்தினை பேணுவதற்காகவும் நாம் மூலதனச் சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புகளை விரைவுபடுத்தினோம். மீளாய்வாண்டின்போது, அவசியமற்ற தடைகளை குறைப்பதற்காக முறைமைப்படுத்தல் செயலாக்கம் மற்றும் செயன்முறையினை சீரமைத்தவேளை, சந்தையின் நேர்மை மற்றும் நம்பகத்தன்மையினை பாதுகாத்து முதலீட்டாளர் சமூகத்தையும் பாதுகாப்பதற்கு அவசியமான காப்பரண்களை பராமரித்தோம்.

நாம் தீர்மானம் மேற்கொள்ளும்போது அது சரியானதாய் இருத்தல் வேண்டும், சான்றுகள், திடமான நியாயப்பாடுகளில் ஊன்றியிருத்தல் வேண்டும், மற்றும் அதன் பொறுப்பாணையுடன் சீரமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என நான் கூறுவது வழக்கம், ஏனெனில் அதன் விளைவுகள் பாரதூரமாயிருக்கலாம். நிதியியல் சந்தைகளில் ஒரு தனியான ஒரு தவறுதலான அடியெடுப்பும் கூட அல்லது விரைவுபடுத்தப்பட்ட தீர்மானம் என்பன முதலீட்டாளர் நம்பிக்கையினை சீர்குலைக்கலாம், சந்தை நடத்தையினை திரிபுபடுத்தலாம் அல்லது முறைமைசார் உறுதியின்மையினை தூண்டலாம். பிணையங்கள் சந்தைகளின் அடித்தளமாக நம்பிக்கை உள்ளது என நாம் நம்புவதுடன், அதனை நாம் சந்தை பங்குபற்றுனர்களிடையே நிறுவுவதற்கு தவறினால், நாம் சந்தையினை அடுத்த கட்டத்திற்கு வளர்ப்பதற்கு இயலாமலிருக்கலாம்.

முறைமைப்படுத்தல் மற்றும் சந்தை அபிவிருத்தி முனைகளில் நன்கு சமநிலைப்படுத்தப்பட்ட ஒரு மூலதனச்

பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

நாம் தீர்மானம் மேற்கொள்ளும்போது அது சரியானதாய் இருத்தல் வேண்டும், சான்றுகள், திடமான நியாயப்பாடுகளில் ஊன்றியிருத்தல் வேண்டும், மற்றும் அதன் பொறுப்பாணையுடன் சீரமைக்கப்பட்டிருத்தல் வேண்டும், ஏனெனில் அதன் விளைவுகள் பாரதூரமாயிருக்கலாம்.

சந்தையினை வளர்ப்பதற்கு நாம் கடப்பாட்டுடன் உள்ளவேளை, சந்தையானது உள்ளடக்கமானதாகவும், விரைவூக்கமானதாகவும் எதிர்காலத்திற்கு தயாராயுள்ளதாகவும் உறுதிசெய்தல் வேண்டும். தரவினால், விவேகமான இடர் அடிப்படையிலான பொறிமுறைகளினால் மற்றும் நியாயமான மற்றும் நேர்மையினால் இயக்கப்படும் எமது அணுகுமுறையினை வளர்ப்பதனை நாம் தொடர்வோம். இவ்வாறு செய்வதில், முதலீட்டாளர்களுக்கு வலுவளிக்கும், மூலதன உருவாக்கத்தினை வளர்க்கும் ஒரு இயலுமையான சூழலினை உருவாக்குவதற்கு நாம் இலக்கு வைத்துள்ளதுடன், இது நிலைபேறுடைய பொருளாதார வளர்ச்சியினை இயக்கும்.

சவால்மிக்க சூழலில் மீளெழுச்சியடையும் நம்பிக்கை

2024 ஆம் ஆண்டானது, இலங்கையின் மூலதனச் சந்தையில் ஒரு குறிப்பிடத்தக்க மீளெழுச்சியினை குறித்ததுடன், பாரியபொருளாதார சவால்களுக்கு மத்தியில் குறிப்பிடத்தக்க மீளெழுச்சியினை வெளிக்காட்டியது. அனைத்து பங்கு விலைச் சுட்டியானது (அ.ப.வி.சு.) 49.7% ஆல் உயர்வடைந்து 15,945 புள்ளிகளை அடைந்தவேளை S&P SL20 சுட்டியானது கவர்ச்சிமிக்க வளர்ச்சியான 58.5% இனை பதிவுசெய்து 4,862 புள்ளிகளாக நிறைவடைந்தது. கடந்து மூன்று ஆண்டுகளாக இரண்டு விலைச் சுட்டிகளும் திடமான செயற்திறனை நிலைபேறாக்கியுள்ளதுடன், முன்னைய ஆண்டுகளின்போது நாட்டினால் முகங்கொடுக்கப்பட்ட தொடர்ச்சியான பொருளாதார கொந்தளிப்புக்கு மத்தியில் நிலைபேறுடைய முதலீட்டாளர் நம்பிக்கையினை பிரதிபலித்தது.

2024 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரமானது 5% ஆல் வளர்ச்சியடைந்தது, இது ஒரு குறிப்பிடத்தக்க மீளெழுச்சியாகும் என்பதுடன் சந்தை செயற்திறனை பெருக்கியுள்ளது. நாட்டினால் முகங்கொடுத்த பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில் 2022 இன் பொருளாதாரமானது 7.3% ஆல் சுருங்கியவேளை, 2023 இல் 2.3%ஆல் சுருக்கமடைந்தது. சர்வதேச நாணய நிதியம் (ச.நா. நி.) - இனால் துணையளிக்கப்பட்ட பொருளாதாரத் திட்டமானது இலங்கையின் பொருளாதாரத்திற்கு அணையினை வழங்கியதுடன், இது குறுகிய கால வரையறையினுள் பொருளாதாரம் மீண்டெழுவதற்கு துணைபுரிந்தது. ச.நா. நி. இனால் வழங்கப்பட்ட நம்பகமான கட்டமைப்பானது உறுதியான சீர்திருத்தங்களை உருவாக்கும் என எதிர்பார்ப்பதுடன், இது இலங்கை எஞ்சியுள்ள கடனை பயனுறுதியான விதத்தில் செலுத்துவதற்கு அனுமதிக்கும்.

ஒரு திடமான பொருளாதாரத்திற்கான இலங்கையின் பாதையானது தொடர்ச்சியான இறைவரி மற்றும் நாணயக் கொள்கைகளில் தங்கியுள்ளது. அளவிடப்பட்ட கொள்கைகள் குறுகிய மற்றும் நீண்ட காலத்தில் உள்ளடக்கமான வளர்ச்சியினை வழங்கும். கடன் நிலைபேறுடைமை ஒரு முக்கியமான தறுவாயில் காணப்படுகின்றது, இங்கு தவறான கொள்கைகளுக்கு இடமளிக்கவியலாது. முக்கியமான பொதுச் சேவைகளுக்கு நிதியளிப்பதற்கு வருவாய் தளத்தினை பராமரித்தல் முக்கியமான வேளை சனத்தொகையின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கும் துணையளிப்பதற்கு சமூக நலன் திட்டங்கள் இலக்குவைக்கப்பட்டுள்ளன. இதனை முற்றாகத் திறப்பதற்கு, இலங்கையின் நீண்டகால வளர்ச்சி சாத்தியம், மத்திய மற்றும் நீண்டகால வளாச்சிக்கு துணையளிக்கும் மூலதன உருவாக்கம் என்பவற்றுக்கு மூலதனச் சந்தையினூடாக வசதியளிக்கப்படல் வேண்டும்.

சந்தையின் மொத்த மூலதனவாக்கம் ரூபா 5.69 டிரில்லியனாகக் காணப்பட்டதுடன், இதற்கு மேம்பட்ட மனநிலை மற்றும் கவர்ச்சிகரமான பெறுமதியிடல்கள் அடித்தளமிட்டன. விலை உழைப்பு விகிதமானது பிராந்திய போட்டியாளர்களுடன் ஒப்பிடும்போது 8.9x மடங்காக கவர்ச்சிகரமாக காணப்பட்டதுடன், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சந்தையினுள் பிரவேசிப்பதற்கு கவர்ச்சிமிக்கதாய் காணப்பட்டது. பங்கிலாப விளைவு வீதமானது திடமான 3.6% ஆக காணப்பட்டதுடன், நீண்டகால முதலீட்டாளர்களுக்கு கவர்ச்சிகரமான விளைவினை வழங்குகின்றது.

எவ்வாறாயினும், உரித்துவ பட்டியலிடல்களு டான மூலதனத் திரட்டலானது ஒரு மத்திம மட்டங்களிலேயே காணப்பட்டது, ஆரம்ப பொது வழங்கல்களினூடாக ரூபா 2.8 பில்லியன் மாத்திரமே திரட்டப்பட்டது. இதற்கு எதிர்மாறாக, நடைமுறையிலுள்ள பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் ஒரு கவர்ச்சிகரமான விதத்தில் மூலதனச் சந்தையினை பயன்படுத்தி ரூபா 63 பில்லியனை உரிமை வழங்கல்களூடாக திரட்டின, இது கடந்த ஐந்து வருடங்களுடன் ஒப்பிடும்போது ஒரு கணிசமான முன்னேற்றமாகும். மேலும், முதன்மை கடன் சந்தையானது செயலூக்கமாக காணப்பட்டது, கடன் ஆ.பொ.வ. ளில் ரூபா 94.8 பில்லியனை பதிவுசெய்தன, இது வழங்குனர்களிடையே மிகவும் திடமான நிதியளித்தல் முன்னுரிமையாகக் காணப்பட்டது. பொருளாதார மீட்டலுடன் வட்டி வீதங்கள் குறைவடைவது அவதானிக்கப்பட்டச் சூழலில், முதன்மை கடன் வழங்கல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மூன்று மடங்குகள் உயர்வாகக் காணப்பட்டன.

இவ்வருடத்தில் மந்தமான வெளிநாட்டு முதலீட்டாளர் பங்குபற்றல் காணப்பட்டதுடன், இது கடந்த மூன்று வருடங்களில் அவதானிக்கப்பட்ட போக்கினை ஒத்திருந்தது. வெளிநாட்டு முதலீட்டாளர் பங்குபற்றலானது 10% ஆக காணப்பட்டதுடன், இது நாடுகளின் பரந்த பாரியபொருளாதார தளம்பல்களினால் பெருமளவில் செல்வாக்கு செலுத்தப்பட்டது. மேலும், தேறிய வெளிநாட்டு நடவடிக்கையானது ஒரு எதிர்மறையான வெளிப்பாய்ச்சலான ரூபா 10 பில்லியனை பதிவுசெய்ததுடன், இது முன்னைய ஆண்டில் காணப்பட்ட தேறிய உட்பாய்ச்சலான ரூபா 4 பில்லியனுக்கு எதிரானதாகும். இதன் மூலம் சர்வதேச முதலீட்டாளர்களினால் கடைப்பிடிக்கப்படும் எச்சரிக்கையான அணுகுமுறை எடுத்துக்காட்டப்படுகின்றது.

ஒட்டுமொத்தத்தில், சந்தையானது கவர்ச்சிகரமான செயற்திறன் அளவீடுகளை வெளிக்காட்டும்வேளை, முக்கிய குறிகாட்டிகள் பாரியபொருளாதார முனையில் மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மூலதனச் சந்தையில் முதலீட்டாளர் உணர்வினை தொடர்ச்சியாக வடிவமைக்கின்றது. நாம் முன்னோக்கிப் பார்க்கும்போது, பொருளாதார சீர்திருத்தங்களுக்கு துணையளிக்கும் ஒரு வலுவான கொள்கைக் கட்டமைப்பானது இந்த உத்வேகத்தினை நீடிப்பதற்கும் மூலதனச் சந்தையின் முழு சாத்தியத்தினையும் திறப்பதற்கும் முக்கியமானதாகும்.

மூலதனச் சந்தை மூலோபாயம் : அபிவிருத்தி மற்றும் முறைமைப்படுத்தலை ஒருங்கிணைத்தல்

இ.பி.ப.ஆ. 2025-2035 மூலதனச் சந்தை மூலோபாயத்தினை வெளியிட்டதுடன், இது இலங்கையின் மூலதனச் சந்தையின் நிலத்தோற்றத்தினை உருமாற்றுவதற்கு மற்றும் முதலீட்டாளர்களிடையே நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையினை கட்டியெழுப்புவதற்காக வடிவமைக்கப்பட்ட

ஒரு திடமான பொருளாதாரத்திற்கான இலங்கையின் பாதையானது தொடர்ச்சியான இறைவரி மற்றும் நாணயக் கொள்கைகளில் தங்கியுள்ளது. அளவிடப்பட்ட கொள்கைகள் குறுகிய மற்றும் நீண்ட காலத்தில் உள்ளடக்கமான வளர்ச்சியினை வழங்கும்.

முற்போக்கான அபிவிருத்தி மற்றும் முறைமைப்படுத்தல் வழிமுறைகளை உள்ளடக்குகின்றன. இது உள்ளூர் மூலதனச் சந்தையினை மேம்படுத்துவதற்காக இலக்கு வைக்கப்பட்ட பன்னிரண்டு முக்கிய மூலதனச் சந்தை சீர்திருத்தங்களை உள்ளடக்குகின்றது. இந்த பன்னிரண்டு முக்கிய சீர்திருத்தங்கள் ஒரு வலுவான, இயக்காற்றலான மற்றும் உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மையான மூலதனச் சந்தையினை பேணும் நோக்கினைக் கொண்டதாகும். சீர்திருத்தங்களை தீர்மானிப்பதில் மற்றும் அத்தகைய சீர்திருத்தங்களுக்கு முன்னுரிமையளிப்பதில், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை, பங்குத் தரகுச் சமூகம், யுனிட் ட்ரஸ்ட் துறை, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பலதரப்பு மற்றும் இருதரப்பு அபிவிருத்தி பங்காளிகள், இலங்கையின் பட்டய நிதியியில் பகுப்பாய்வாளர்கள் சங்கம் உள்ளடங்கலான மூலதனச் சந்தை பங்காளிகளிடமிருந்து கருத்துக்கள் திரட்டப்பட்டன.

உள்ளூர் நிதியியல் சூழலமைப்பின் அடித்தளத்தினை பலப்படுத்துவதற்கு இந்த பன்னிரண்டு சீர்திருத்தங்கள் முக்கியமானது என இ.பி.ப.ஆ. நம்புகின்றது. இந்த சீர்திருத்தங்கள் சந்தையினை நவீனமயப்படுத்துவதற்கு ஒரு தெளிவான வரைபடத்தினை வழங்குகின்றன. சீர்திருத்தங்கள் தொடருகின்ற மாற்றங்கள், வாய்ப்புக்கள் மற்றும் இடர்களுக்கு மத்தியில் எமது பொறுப்பாணையினை விநியோகிப்பதற்கு எமது வளங்கள் மற்றும் நிபணத்துவத்தினை திரட்டுவதற்கு துணைபுரியும். இது மூலோபாய குறிக்கோள்களை மையப்படுத்தியுள்ளதுடன், ஒவ்வொன்றும் இன்று நாம் எவ்வாறு முறைமைப்படுத்துகின்றோம் என்பதிலிருந்து சந்தைக்கு பதிலளிக்கக்கூடிய தெளிவான விளைவுகள் வரையான பல்வேறு மட்டத்திலான மாற்றங்களை அறிமுகப்படுத்துகின்றது. இந்த முறைமைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தியின் முக்கிய பிரிவுகளை விளித்துரைப்பதன் மூலம், இ.பி.ப.ஆ. மிகவும் செயற்திறனான, அணுகத்தக்க, உள்ளடக்கமான மூலதனச் சந்தையினை உருவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளது. இந்த சீர்திருத்தங்களுள் சில முன்னர் கலந்துரையாடப்பட்டவை ஆனால் முன்னைய முயற்சிகள் கைகூடவில்லை. இந்த மறுசீரமைப்பு முன்னெடுப்பானது இந்த சீர்திருத்தங்களை வெளிச்சத்திற்கு கொண்டுவரும் நோக்கினைக் கொண்டதுடன் குறிப்பிட்ட கால எல்லைகளினுள் அவை பயனுறுதியாக அமுல்படுத்தப்படுவதை உறுதிசெய்கின்றது.

தொழில்நுட்பங்கள் முதிர்வடையும்போது மற்றும் புதியவை வெளிவரும்போது நிதியியல் நிலத்தோற்றமானது மாற்றமடையும் என நாம் எதிர்பார்க்கின்றோம். புத்தாக்கத்தின் புதிய பிரிவுகள் பாரம்பரிய முறைமைப்படுத்தல் முறைகளை கோடிடும் பொறுப்புக்கூறல் கொள்கைகளுக்கு சவால்மிக்கதாகும்.

எமது இயக்காற்றலான தரவினால் இயக்கப்படும் சூழலில் முதலீட்டாளர்கள் மற்றும் எமது சந்தைகளின் நேர்மையினை பாதுகாப்பதற்கும் எவ்வாறு துர்நடத்தையினை தடுத்தல், சீர்குலைத்தல் மற்றும் தண்டித்தல் ஆகியவற்றிலும் நாம் தொடர்ச்சியாக முன்னேற்றமடைதல் வேண்டும். தொழில்நுட்பம் வளர்ச்சியடையும்போது முதலீட்டின் எதிர்காலத்திற்கான அதன் தாக்கங்களை புரிந்துகொள்வதில் நாம் விரைவாக நகர்ந்து அதனுடன் வேகத்தை வைத்திருக்க இயலுமையாயிருத்தல் வேண்டும். முன்னோக்கிப் பார்க்கும்போது நாம், மூலதனச் சந்தை நடவடிக்கைகளில் மாற்றமடையும் பொருளாதார நிலைமைகள் மற்றும் புவிசார் அரசியல் உறுதியின்மை என்பவற்றின் தாக்கத்தை கருத்திலெடுத்து எமது சந்தைக்கு இந்த சக்திகளின் தாக்கங்களை மதிப்பிடுவதற்கு நாம் தயாராயிருப்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

பன்முகப்படுத்தப்பட்ட சந்தை வழங்கல்களூடாக சந்தை வளர்ச்சியினை இயக்குதல்

அறிமுகப்படுத்தப்படுகின்ற புதிய நிதியியல் கருவிகள் மற்றும் சேவைகள், முறைமைப்படுத்தல் நியாயாதிக்கத்தின் பாரம்பரிய வழிகளில் காலூன்றியுள்ளன. டிஜிட்டல் மேடைகள் விளையாட்டு பொறிமுறைகள், பயனாளர் இடைமுகப்பு தொழில்நுட்பம் மற்றும் ஏனைய நடத்தை பொறிமுறைகளை அதிகமாக பயன்படுத்துகின்றன. இந்த முறைகள் எமது சந்தைகளில் செல்வாக்கு செலுத்தி அதிகப்படியான இடர்களை எடுப்பதற்கு முதலீட்டாளர்களை ஊக்கப்படுத்துகின்றது மற்றும் அவர்களது சொந்த அக்கறைகளுக்கு எதிராக செயலாற்றச் செய்கின்றன. டிஜிட்டல் ஈடுபாட்டு நுட்பமானது எது ஆலோசனையாகக் கருதப்படலாம் என்பதை மங்கலாக்கி முதலீட்டாளர் பாதுகாப்பு அக்கறைகளை எழுப்புகின்றன. தெளிவாக, முறைமைப்படுத்துபவர்கள் முதலீட்டாளர்களது நடத்தையினை புரிந்துகொள்வதற்கு புதிய வழிகளை கண்டு பயனுறுதியாக ஈடுபடல் வேண்டும்.

பல முதலீட்டாளர்கள், சிற்றளவு மற்றும் நிறுவன முதலீட்டாளர்கள் ஆகிய இருசாராரும் முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அதிகளவில் சூழல், சமூக, ஆளுகை (சூ.ச.ஆ.) காரணிகளினால் செல்வாக்கு செலுத்தப்படுகின்றார்கள், இது சூ.ச.ஆ. சிட்டையின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளதோ இல்லையோ ஆகும். அவர்கள் பொதுக் கம்பனிகள் காலநிலை மாற்றத்திற்கு எவ்வாறு பங்களிப்பு செய்கின்றன, அதற்கு தயாராகுதல் பற்றி பாரிய வெளிப்படுத்தலை வேண்டுகின்றார்கள். அவர்கள் இன்றைய சமூகம் மற்றும் சிறந்த தீர்மானங்களுக்கு இட்டுச்செல்வதனை சிறப்பாக பிரதிபலிக்கின்ற மிகவும் பன்முகமான சபை மற்றும் முகாமைத்துவக் குழுவினை கட்டியெழுப்புவதற்கு எவ்வாறு நடவடிக்கை எடுக்கின்றன என்பது பற்றியதாகும்.

இவ்வாண்டின்போது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் மற்றும் கொ.ப.ப. இன் ஒத்துழைப்புடன் ஒரு விரிவான பசுமை, சமூக, நிலைபேறுடைய (ப.ச.நி.) முறிகளது கட்டமைப்பானது சந்தைக்கு அறிமகப்படுத்தப்பட்டது. இந்தக் கட்டமைப்பானது பசுமை, சமூக மற்றும் நிலைபேறுடைமை இணைக்கப்பட்ட முறிகளது வழங்கலுக்கு துணைபுரிந்து தெளிவான பாதையினை வழங்குகின்றது. அதன் மூலம் உள்ளூர் மூலதனச் சந்தையானது உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் சீரமைக்கப்படுவது நோக்கி கணிசமாக முன்னேறியுள்ளது.

இந்த முன்னெடுப்பிற்கு சந்தையானது சாத்தியமாக பதிலளித்தமை ஊக்கமளிப்பதாய் இருந்ததுடன், DFCC வங்கி முன்னணி வகித்து முதலாவது பட்டியலிடப்பட்ட பசுமை முறியினை வழங்கியது. குறிப்பாக, இவ்வழங்கலுக்கு மிகையான பங்களிப்பு காணப்பட்டதுடன், இது நிலைபேறுடைய முதலீட்டு வாய்ப்புக்கள் நோக்கிய முதலீட்டாளர்களது திடமான ஆர்வத்தினை பிரதிபலிக்கின்றது. நிலைபேறுடைய முறிகள் வழங்குனர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் பலவகையான நன்மைகளை வழங்குகின்றன. இந்த கருவிகள் சாத்தியமான சூழல் மற்றும் சமூக விளைவுகளை உருவாக்கும்

பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

திட்டங்களுக்கு நீண்டகால நிதியினை திரட்டுவதற்கு துணைபுரிகின்றன, இதன் மூலம் நிலைபேறுடைய பொருளாதார வளர்ச்சியினை இயக்குவதில் மூலதனச் சந்தையின் பங்கானது வலியுறுத்தப்படுகின்றது.

பல்சொத்து வகுப்பு மூலாதாரங்கள் பரிவர்த்தனை மூலதனச் சந்தையினை ஆழமாக்குவதற்கும் பொருளாதார மீளெழுச்சிக்கும் ஒரு வினையூக்கியாக காணப்படும்

பல்சொத்து வகுப்பு மூலாதாரங்கள் பரிவர்த்தனையின் அறிமுகம் - எதிர்வுகள், தெரிவுகள் மற்றும் பண்டங்களை உள்ளடக்கிய இவை இலங்கையின் மூலதனச் சந்தையின் அடிச்சுவட்டினை விரிவாக்குவதில் ஒரு உருமாற்றமான மைல்கல்லினை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

இந்த முன்னெடுப்பிற்கு வசதியளிப்பதற்காக, இ.பி.ப.ஆ. ஒரு ஆர்வ வெளிப்பாட்டினை வழங்குவதன் மூலம் முன்முயற்சியான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது. இது முன்மொழியப்படும் பரிவர்த்தனையினை வடிவமைப்பதற்கு, நிறுவுவதற்கு மற்றும் செயலாற்றுவதற்கு தகைமை மற்றும் அனுபவமுடைய ஒரு பங்காளியை இனங்காண்பதற்காகும். பல்சொத்து வகுப்பு மூலாதாரப் பரிவர்த்தனையின் உருவாக்கலானது நாட்டிற்கு பரந்தளவிலான நன்மைகளை விளைவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அது வினைத்திறனான விலை கண்டுபிடிப்புக்கு, குறிப்பாக வேளாண்மை போன்ற துறைகளில், பல கருவிகளை வழங்குவதன் மூலம் சந்தையின் செயற்திறனை கணிசமானளவு மேம்படுத்தும். இந்த மேடையானது. உற்பத்தியாளர்கள் மற்றும் கொள்வனவாளர்களுக்கும் அவர்களது விலை இடரினை தணிப்பதற்கு வசதியளிப்பதுடன், சந்தை பங்குபற்றுனர்களுக்கு பாரியளவில் துணைபுரியும் வலுவான இடர் முகாமைத்துவப் பொறிமுறைகளை வழங்குவதுடன், இவை துறைகளிடையே நிதியியல் ஸ்திரத்தன்மையினை ஊக்குவிக்கும்.

பரிவர்த்தனையானது சந்தைக்கு புதிய நிதியியல் கருவிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் முதலீட்டாளர் பங்குபற்றலை மேலும் விரிவாக்குவதற்கு வசதியளிக்கும். ஒரு பண்டம் அடிப்படையிலான பரிவர்த்தனையானது உள்ளூர் வணிகங்களுக்கும் விவசாயிகளுக்கும் அவர்களது உற்பத்தியினை ஒரு கட்டமைக்கப்பட்ட நன்கு முறைமைப்படுத்தப்பட்ட சூழலில் வர்த்தகம் செய்வதற்கான வாய்ப்பினை வழங்குவதுடன், இது நலன்களை எய்துவதற்கு வசதியளிக்கும். எதிர்வுகள் மற்றும் தெரிவுகளது அறிமுகமானது மூலதன ஒதுக்கத்தினை மேம்படுத்துவதற்கு வசதியளிப்பதுடன், முதலீட்டுத் தேக்க பன்முகப்படுத்தலுக்கும் ஒரு வழியினை வழங்கி, மிகவும் மீளெழுச்சியான மற்றும் துடிதுடிப்பான மூலதனச் சந்தை சூழலமைப்பிற்கு பங்களிப்பு செய்யும்.

மேலும், முன்மொழியப்பட்ட பல்சொத்து வகுப்பு மூலாதாரப் பரிவர்த்தனையானது, கொள்கை அமைப்பாளர்கள், சந்தை பங்குபற்றுனர்கள் மற்றும் முறைமைப்படுத்துபவர்களுக்கு தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உதவும்வேளை வழங்குனர்களது ஒட்டுமொத்த ஆளுகை நியமங்களையும் மேம்படுத்துகின்றது. இது முதலீட்டாளர் நம்பகத்தன்மையினை மேம்படுத்துவதற்கும் வசதியளிக்கும். இப்பரிவர்த்தனையானது இலங்கையின் பொருளாதாரத்தினை உயர்த்துவதற்காக மாத்திரமன்றி உலகளாவிய நிதியியல் சூழலமைப்பினுள் இலங்கையின் ஒருக்கிணைப்பினை விரைவுபடுத்தும் ஒரு வினையூக்கியாகவும் செயலாற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மூலதனச் சந்தை அறிவு பொருளாதார அபிவிருத்தியின் ஒரு தூணாக

பங்காளிகளிடையே நிதியியல் அறிவினை ஆழமாக்குவதற்கும் முதலீட்டாளர் பங்குபற்றுதலை விரிவாக்குவதற்குமான இ.பி.ப.ஆ. இன் தொடர்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, இ.பி.ப.ஆ. கொ.ப.ப. உடன் கூட்டிணைந்து பரவலான வெளிக்கள திட்டங்களை தொடர்ச்சியாக அமுல்படுத்தியது. இவை ஒரு தொடரான கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான புதிர் போட்டிகள் என்பவற்றை உள்ளடக்குவதுடன், இது மூலதனச் சந்தையில் நடைமுறையிலுள்ள மற்றும் சாத்தியமான முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் நோக்கினைக் கொண்டன. மேலாக, இ.பி.ப.ஆ.-கொ.ப.ப. பிராந்திய கருத்துக்களங்கள் பொது மக்களுடன் ஈடுபடுவதற்கான ஒரு முக்கிய மேடையாக சேவையாற்றுவதுடன், சந்தையைப் பற்றிய அவர்களது விழிப்புணர்வு மட்டங்களையும் மேம்படுத்துகின்றது.

மாணவர்களிடையே நிதியியல் கல்வியினை போதிப்பதன் முக்கியத்துவத்தினை இனங்கண்டு இ.பி.ப.ஆ. இலங்கையின் தேசிய கல்வி நிறுவகத்துடன் கூட்டிணைந்து தரம் 6 முதல் 9 வரை நிதியியல் அறிவு முயற்சியாண்மை பாடத்தினுள் மூலதனச் சந்தையினை ஒருங்கிணைப்பதன் மூலம் மாணவர்களின் பாடத்திட்டத்தினை மறுசீரமைப்பதற்கு தொடங்கியுள்ளது.

எமது இயக்காற்றலான தரவினால் இயக்கப்படும் சூழலில் முதலீட்டாளர்கள் மற்றும் எமது சந்தைகளின் நேர்மையினை பாதுகாப்பதற்கும் எவ்வாறு துர்நடத்தையினை தடுத்தல், சீர்குலைத்தல் மற்றும் தண்டித்தல் ஆகியவற்றிலும் நாம் தொடர்ச்சியாக முன்னேற்றமடைதல் வேண்டும்.

இ.பி.ப.ஆ. சமீபத்தைய எதிர்காலத்தில் இந்த முன்னெடுப்பானது வெற்றியடையும் என்ற எதிர்பார்ப்புடன் உள்ளது.

மேலும், இ.பி.ப.ஆ, கல்வி அமைச்சு, கொ.ப.ப. உடன் இணைந்து நாட்டிலுள்ள பாடசாலைகளில் "மூலதனச் சந்தை கழகங்களை" நிறுவுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளன. இந்த முன்னெடுப்பானது சந்தை இயக்காற்றல் பற்றி மாணவர்களிடையே அடிப்படை புரிந்துணர்வினை வளர்க்கும் நோக்கினைக் கொண்டதாகும். இ.பி.ப.ஆ. மூலதனச் சந்தை அறிவினை வளர்ப்பதற்காக பல்கலைக்கழகங்களுடன் செயலூக்கமாக ஈடுபடும்வேளை நிதியியல்ரீதியில் ஆர்வமுள்ள சமூகத்தினை கட்டியெழுப்புவதற்கு ச.பி.ஆ.ஒ. உடன் தொடர்ச்சியாக ஒருங்கிணைகின்றது.

ஆழமான வெளிப்படுத்தல் மீளாய்வினூடாக சந்தை நேர்மையினை ஊக்குவித்தல்

இ.பி.ப.ஆ. ஒரு வெளிப்படுத்தல் அடிப்படையிலான முறைமைப்படுத்தல் கட்டமைப்பின் கீழ் செயலாற்றுகின்றது. இது சந்தைக்கு பொருண்மையான தகவல்களின் நேரகாலத்துடனான மற்றும் வெளிப்படையான பரப்புதலின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றது. இதன் மூலம் முதலீட்டாளர்கள் ஒரு தகவலறிந்த முதலீட்டுத் தீர்மானம் மேற்கொள்வதற்கு வசதியளிக்கும். இ.பி.ப.ஆ. மூலதனச் சந்தையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை நிலைநிறுத்துவதற்கு கடப்பாட்டுடன் உள்ளது. முறைமைப்படுத்தல் மேற்பார்வையின் ஒரு பாகமாக, இ.பி.ப.ஆ. நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள், கூட்டாண்மை ஆளுகை நியமங்கள் மற்றும் ஏனைய வெளிப்படுத்தல் கடப்பாடுகளுடன் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் இணக்கப்பாட்டினை சரிபார்ப்பதற்காக வழக்கமான மீளாய்வுகளை நடாத்துகின்றது. இந்த செயன்முறையானது இணக்கப்பாடின்மை அல்லது பொருண்மையான விடுபாடுகள் என்பவற்றின் நேரகாலத்துடனான எச்சரிக்கை குறிகாட்டிகளை கண்டுபிடிப்பதில் ஒரு

முக்கிய பங்கினை வகிப்பதுடன், இதன் மூலம் முதலீட்டாளர் நம்பகத்தன்மையினை பலப்படுத்தி சந்தையின் நேர்மையானது ஊக்குவிக்கப்படுகின்றது.

பட்டியலிடப்பட்ட கம்பனிகளிடமிருந்து விளக்கங்களை கோருவதற்கு மற்றும் வெளிப்படுத்தல் நடைமுறைகளுக்கு மேம்பாடுகளை பரிந்துரைப்பதற்கு இ.பி.ப.ஆ. சந்தை செயற்பாட்டாளருடன் ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் ஈடுபடுகின்றது, இதன் மூலம் முன்முயற்சியான முறைமைப்படுத்தல் கலாச்சாரத்தினை பேணுவதற்காகும். இ.பி.ப.ஆ. வெளிப்படுத்தல் அடிப்படையிலான முறைமைப்படுத்தலை மேம்படுத்தி சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் சீரமைப்பதற்காக தொடர்ச்சியாக முயற்சிப்பதுடன், இது அதன் குறிக்கோளான ஒரு நியாயமான, முறையான மற்றும் செயற்திறனான சந்தையினை பராமரிப்பதற்காகும். மீளாய்வாண்டின்போது, இ.பி.ப.ஆ. நூற்றுக்கும் அதிகமான ஆண்டறிக்கைகளை மீளாய்வு செய்து புதிய கடன் மற்றும் உரித்துவ வழங்கல்கள்கள் தொடர்பாக மீளாய்வுகளையும் பகுப்பாய்வுகளையும் மேற்கொண்டது.

சந்தையின் நேர்மையினை பாதுகாத்தல் : ஒரு மெய்நேர சந்தை கண்காணிப்பு முறைமையினை அமுல்படுத்துதல்

மீளாய்வாண்டின்போது, இ.பி.ப.ஆ. ஒரு அதிநவீன, மெய்நேர சந்தை கண்காணிப்பு முறைமையினை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் ஒரு பாரிய மைல்கல்லினை அடைந்துள்ளதுடன் அதன் முறைமைப்படுத்தல் மேற்பார்வை செயல்திறனில் ஒரு பாரிய மேம்படுத்தலையும் அடைந்துள்ளது. இந்த முறைமையானது வர்த்தக ஒழுங்கின்மையினை இனங்காண்பதற்கும், சந்தை கையாளுகையினை கண்டுபிடிப்பதற்கும் இயந்திரம் மூலமான பயிலல் தொழில்நுட்பங்களூடாக பகுப்பாய்வு ஆற்றல்களை மேம்படுத்துவதற்கும் வசதியளிக்கும். அது புதிய சந்தை அச்சுறுத்தல்களை விளித்துரைப்பதற்கு தொடர்ச்சியாக வளர்ச்சியடைவதுடன் மாற்றமடையும் வர்த்தகப் போக்குகளை இனங்காண்பதற்கும் முன்னேற்றமடையும்.

இ.பி.ப.ஆ. இவ்வருடத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளூடாக 147 சந்தர்ப்பங்களை இனங்கண்டதுடன், இவற்றுக்கு மேலதிக மதிப்பீடு தேவைப்பட்டதுடன், அவற்றை விளித்துரைப்பதற்கு பன்முகமான நடவடிக்கைகளை எடுத்தது. அத்தகைய சந்தர்ப்பங்களில், பதினொரு கண்காணிப்பு பரிந்துரைத்தல்கள் உருவாக்கப்பட்டன.

முன்முயற்சியான வலியுறுத்தலினூடாக நம்பிக்கையினை நிலைநிறுத்துதல்

சீரான மற்றும் வெளிப்படைத்தன்மையான வலியுறுத்தல் என்பது ஒரு நியாயமான மற்றும் முறையான சந்தையினை பராமரிப்பதற்கான ஒரு முக்கிய மூலப்பொருளாகும். தவறிழைப்பவர்களை பொறுப்புக்கூற வைப்பதன் மூலம், நாம் முறைமைப்படுத்தல் கட்டமைப்பில் நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையினை உட்புகுத்துவதற்கு முனைவதுடன் முதலீட்டாளர் நலனைப் பாதுகாக்கும் எமது கடப்பாட்டினையும் வலியுறுத்துகின்றது.

புலனாய்வு மற்றும் வலியுறுத்தல் என்பன இ.பி.ப.ஆ. இன் பொறுப்பாணையின் இதயமாக காணப்படுகின்றது. இவ்வருடம் முழுவதும், நாம் வலியுறுத்தலுக்கு ஒரு முன்முயற்சியான அணுகுமுறையினை கடைப்பிடித்ததுடன், முன்னதான கண்டுபிடிப்பு மற்றும் விரைவான தலையீட்டில் முன்னிறுத்தம் செய்தது. இடர்கள் அறியப்படாத பகுதிகளுக்கு உயர்வடைவதிலிருந்து தடுப்பதற்காக நாம் "முளையிலேயே சிக்கல்களை கிள்ளி எறிவதில்" திடமான நம்பிக்கை வைத்துள்ளதுடன், இதன் மூலம் மூலதனச் சந்தையின் நேர்மையினை பாதுகாக்கின்றோம். இவ்வாண்டின்போது, இ.பி.ப.ஆ. ஒரு கணிசமானளவு எண்ணிக்கையிலான புலனாய்வு விடயங்களை முடிவுறுத்தியதுடன், காரணங் காட்டல் அறிவித்தல்கள், எச்சரிக்கை கடிதங்கள் வழங்குதல் முதலானவை உள்ளடங்கலான பன்முகமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அத்துடன், இவ்வாண்டின்போது இ.பி.ப.ஆ. எட்டு சந்தர்ப்பங்களில் வழக்குகளை தாக்கல் செய்தது.

முன்னோக்கிப் பார்க்கும்போது, இ.பி.ப.ஆ. தவறிழைப்பவர்களுக்கு எதிராக திடமான தீர்மானங்களை தொடர்ந்தும் மேற்கொள்ளும். இது மீறுபவர்கள் பொருத்தமான சட்ட மற்றும் நிதியியல் விளைவுகளுக்கு முகங்கொடுப்பதனை உறுதிசெய்தல் மாத்திரமன்றி மேலும் சந்தை துர்நடத்தைகளை தடுப்பதற்கான தவிர்த்தல் வழிமுறைகளையும் அமுலாக்கும். அதிநவீன சந்தை கண்காணிப்பு முறைமையானது இது தொடர்பில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கும்.

பாராட்டுக் குறிப்பு

நிறுவனத்தின் இலக்குகளை அடைவதில் இ.பி.ப.ஆ. இன் முழு அணிக்கும் அவர்களது அயராத முயற்சிகள் மற்றும் அசைக்கவியலா கடப்பாட்டிற்கு நான் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இவர்களது கடின உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் தொழில்முறை என்பன ஆழமான பாராட்டுக்குரியவையாகும். எதிர்பார்பிற்கு மேலாகவும் அப்பாலும் சென்ற அவர்களது பங்களிப்பானது நிறுவனத்தின் பொறுப்பாணையினை அடைவதில் ஒரு மெய்யான வித்தியாசத்தினை மேற்கொண்டுள்ளது.

பயணத்தினை தாங்கிக்கொள்ளும்போது, நாம் பரிபூரணமாக எமது பொறுப்பாணையின் அனைத்து கூறுகளையும் தொடர்ந்தும் கருத்திலெடுத்து ஏதேனும் தீர்மானத்தில் அல்லது பரிந்துரையில் அவற்றின் முக்கியத்துவமானது சமநிலையில் காணப்படுவதனை உறுதிசெய்தல் வேண்டும். எதிர்வரும் ஆண்டுகளில் சரியான சமநிலையினை பெறுவதற்காக, நாம் ஒரு தெளிவான மூலோபாயத்துடன் முன்நோக்கி நகருதல் வேண்டும் என்பதுடன் இது எமது வளங்களில் நாம் எவ்வாறு சிறப்பாக முன்னிறுத்தம் செய்யலாம் என எம்மை வழிநடத்தும்.

இச்சந்தர்ப்பத்தில், எனது அணியின் சார்பில் வெளியேறிச் சென்ற தலைவர் திரு. சாலி மற்றும் ஆணைக்குழுவினருக்கு அவர்களது மதிப்புமிக்க வழிகாட்டுதல் மற்றும் தலைமைத்துவத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அவர்களது கடப்பாடு மற்றும் அர்ப்பணிப்பிற்கு நாம் மெய்யாகவே நன்றியாய் உள்ளோம். அதேசமயத்தில், புதிய ஆணைக்குழுவையும் புதிய தலைவர் சிரேஷ்ட பேராசிரியர், டி.பி.பி.எச். திசாபண்டார அவர்களையும் மனமார வரவேற்பதுடன், மூலதனச் சந்தையினை புதிய உச்சங்களுக்கு உயர்த்துவதற்கு தொடர்ச்சியான ஒத்துழைப்பு மற்றும் கடப்பாட்டினை எதிர்பார்க்கின்றோம். ஒரு துடிதுடிப்பான மற்றும் மீளெழுச்சியான மூலதனச் சந்தை சூழலமைப்பினை நாம் தொடர்ந்தும் உருவாக்குவதற்கு புதிய கண்ணோட்டங்கள் மற்றும் மூலோபாய திசையினை எதிர்பார்க்கின்றோம்.

சிந்தக்க மெண்டிஸ்
பணிப்பாளர் நாயகம்

இலங்கை பிணையங்கள் மற்றும்
பரிவர்த்தனை ஆணைக்குழு

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

பேராசிரியர். டி.பி.பி.எச்.திசாபண்டார

திரு. ஹேசன குருப்பு

திருமதி. கே.எம்.ஏ.என்.தவுலகல

திரு. லக்நாத் ஜயவிக்கிரம

திரு. டிலிப் சில்வா

திருமதி. அரவிந்தி டி சில்வா

திரு. நெரஞ்சித் கமகே

திரு. கபுகே அருண பெரேரா

திரு. அனில் குமார மீகஹாகே

கலாநிதி. ஹரீந்திர திசாபண்டார

தலைவர் - இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

கலாநிதி. ஹரீந்திர திசாபண்டார அவர்கள் நிதி, மூலதனச் சந்தைகள் மற்றும் பெருநிறுவன ஆளுகை போன்ற துறைகளில் ஒரு புகழ்பெற்ற கல்விமான், முறைமைப்படுத்துபவர் மற்றும் தொலைநோக்கான தலைவர் ஆவார். இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தற்போதைய தலைவராக, இவர் உயர் கல்வி, நிதியியல் முறைமைப்படுத்தல் மற்றும் பொதுக் கொள்கை போன்றவற்றில் மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான பன்முகமான அனுபவத்தைக் கொண்டு வருகின்றார். இ.பி.ப.ஆ. இற்கான இவரது பாரபத்தியமானது நிறுவன அபிவிருத்தி, நெறிமுறையான தலைமைத்துவம் மற்றும் மூலோபாயமான சீர்திருத்தம் என்பவற்றுக்கான வாழ்நாள் முழுவதுமான கடப்பாட்டினால் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இவரது முறைமைப்படுத்தல் பொறுப்புக்களுக்கு இணையாக கலாநிதி. திசாபண்டார அவர்கள் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் நிதி மற்றும் பெருநிறுவன ஆளுகையில் ஒரு சிரேஷ்ட பேராசிரியராகவும் சேவையாற்றுகின்றார். இவர் இப்பல்கலைக்கழகத்தில் பலதலைமுறை நிதியியல் தொழில்வல்லுனர்களை வழிகாட்டியுள்ளதுடன் கல்விசார் மற்றும் ஆளுகை சீர்திருத்தங்களுக்கு கணிசமானளவு பங்களிப்பு செய்துள்ளார். இவரது கல்விப் பாதையானது அதே பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்து புகழ்பெற்ற மொன்புகஹாகுசோ கல்வி உதவித்தொகையின் கீழ் ஜப்பானின் சுக்யோ பல்கலைக்கழகத்திலிருந்து நிதியியலில் தத்துவத்தின் முனைவர் பட்டத்துடன் உச்சமடைந்தது.

கலாநிதி. திசாபண்டார அவர்கள் பல்வேறு முக்கியமான தலைமைத்துவப் பதவிகளை வகித்தார். அவையாவன, இலங்கை நிதியியல் சங்கம் மற்றும் இலங்கையின் பெருநிறுவன ஆளுகை ஆய்வு நிறுவனத்தின் தலைவர், சீஜீஸ் வளாகத்தின் துணைவேந்தர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி, தேசிய பொருளாதார ஆணைக்குழுவின் பிரதி செயலாளர் நாயகம் (நிதியியல் அலுவல்கள்) என்பனவாகும். இவர் முன்னர் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் மூலதனச் சந்தைக் கல்வி மற்றும் பயிற்றுவித்தல் பிரிவின் பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றியதுடன், மல்ட்டி வைனான்ஸ் பிஎல்சி மற்றும் ஸ்டான்டர்ட் கிரடிட் வைனான்ஸ் லிமிட்டட் போன்ற நிதி நிறுவனங்களின் சபைகளுக்கு மூலோபாய நுண்ணறிவினை கொண்டு வந்துள்ளார்.

நிதியியல் முகாமைத்துவம், பெருநிறுவன ஆளுகை மற்றும் மூலதனச் சந்தை அபிவிருத்தி என்பவற்றில் ஒரு அதிகாரியான, கலாநிதி. திசாபண்டார அவர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியுடனான ஒப்படைவுகள் உள்ளடங்கலான தேசிய மற்றும் சர்வதேச ஆலோசனைத் திட்டங்களை வழிநடத்தியுள்ளார். கல்விக் கொள்கைக்கான இவரது பங்களிப்புகள் முக்கியமானவை என்பதுடன், COPE இனால் ஒப்படைக்கப்பட்ட பல்கலைக்கழக சீர்திருத்தங்களிலான தேசிய முன்னெடுப்புகள், AACSB அங்கீகாரம், மற்றும் உயர் கல்வியில் மூலோபாயத் திட்டமிடல் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

இ.பி.ப.ஆ. இல் இவரது சேவைக்காலத்தின்போது, இவர் சந்தை நவீனமயமாக்கல், முதலீட்டாளர் பாதுகாப்பு மற்றும் மனித மூலதன அபிவிருத்தி என்பவற்றில் முன்னிறுத்தம் செய்யப்பட்ட பாரிய சீர்திருத்தங்களை செயலாற்றினார். இவை தொழில்சார் தகைமைக் கட்டமைப்புகளின் அறிமுகம், விரிவான மூலதனச் சந்தை நிலத்தோற்றத்தினை ஆரம்பித்தல், மற்றும் முறைமைப்படுத்தல் உட்கட்டமைப்பின் டிஜிட்டல் மயமாக்கல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. முன்னோக்கிய பார்வையுடன் மற்றும் உள்ளடக்கமான அணுகுமுறையுடன் இவரது தலைமைத்துவமானது இலங்கையின் மூலதனச் சந்தை நிலத்தோற்றத்தினை தொடர்ந்தும் வடிவமைக்கின்றது.

ஒரு தொலைநோக்கான சிந்தனையாளர் மற்றும் கல்விமானாக, கலாநிதி. திசாபண்டார அவர்களது தத்துவமானது மீளெழுச்சியான, புத்தாக்கமான மற்றும் வளர்ந்துவரும் சவால்களுக்கு பதிலளிக்கக்கூடிய நிறுவனங்களை உருவாக்குதல் மையப்படுத்தியதாகும். இவர் கல்விசார் தனிச்சிறப்பு மற்றும் துறைசார் பொருந்துமை என்பவற்றை கொண்டுவருவதில் அனுபவமுடையவர் மற்றும் இவை முறைமைப்படுத்தல் மற்றும் கல்வி நிறுவனங்களது மூலோபாயத் திட்டங்கள் அளவிடக்கூடிய விளைவுளுக்கு மாற்றமடைவதை உறுதிசெய்யும்.

இவரது பங்களிப்பானது பல தேசிய விருதுகளுடன், இ.பி.ப.ஆ. இன் 25 ஆவது ஆண்டுவிழா அங்கீகார விருது, சில நிதி நிறுவனங்களுக்கு புத்துயிர் அளித்தமையில் அவரது பங்கிற்கு இலங்கை மத்திய வங்கியிடமிருந்து ஒரு விசேட பாராட்டு உள்ளடங்கலாக, அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் கற்பித்தல் மற்றும் ஆய்வு தனிச்சிறப்பிற்கான பன்மடங்கான பாராட்டுகளையும் உள்ளடக்குகின்றன.

கலாநிதி. திசாபண்டார அவர்கள் ஒரு மதிப்புமிக்க பொது அறிவாளி மற்றும் சிந்தனையுடைய தலைவரும் ஆவார். இவர் பல எண்ணிக்கையிலான பட்டமளிப்பு விழா உரைகள், சிறப்புரைகள் மற்றும் சர்வதேச கருத்துக்களங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் மூலதனச் சந்தை கருத்தரங்குகளில் சொற்பொழிவுகளையும் ஆற்றியுள்ளார் இவை நிதி, ஆளுகை, மற்றும் நிலைபேறுடைய பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றிலான சமகால சிக்கல்களை தொடர்ச்சியாக விளித்துரைத்தன. இவரது குரலானது எதிர்காலத்தில் இலங்கையில் நிதியியல் கல்வி மற்றும் நிதியியல் முறைமைப்படுத்தலை வடிவமைப்பதில் ஒரு வழிகாட்டியாக இருக்கும்.

திரு. ஹேசன குருப்பு

FCA, MBA (வங்கியியல் மற்றும் நிதி) PIM, MA (நிதியியல் பொருளாதாரம்) (கொழும்பு), B. Sc (கணக்கியல்) விசேட 1ஆம் வகுப்பு (ஸ்ரீ ஜயவர்தனபுர), ACMA இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தலைவர் மற்றும் டேவிட் பீரிஸ் குழுமக் கம்பனிகளின் குழும நிதிப் பணிப்பாளர் ஆவார். திரு. குருப்பு அவர்கள் தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் (தெ.க.ச.) தலைவராகவும் சேவையாற்றுகின்றார். இவர் தெ.க.ச. இன் பிரதித் தலைவராக 2023 இல் சேவையாற்றியதுடன், 2020/2021 வருடங்களில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் ஆளுகை குழுவின் தலைவராகவும் சேவையாற்றினார். இவர் வணிகத்தில் தெ.க.ச. தொழில்சார் கணக்காளர்கள் குழுவின் அங்கத்தவராகவும் மற்றும் சார்க் நாடுகளில் இறைவரி ஆட்சிமுறைகள் மற்றும் வணிகங்களின் ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகளை கற்பதற்கான குழுவின் அங்கத்தவராகவும் சேவையாற்றினார். திரு. குருப்பு அவர்கள் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் சபை அங்கத்தவராகவும் உள்ளார்.

திருமதி. கே.எம்.ஏ.என். தவுலகல

திருமதி. நெலுமனி தவுலகல அவர்கள் இலங்கை மத்திய வங்கியில் 32 வருடங்களுக்கு மேலாக அனுபவத்தினைக் கொண்ட சிரேஷ்ட பிரதி ஆளுநர் ஆவார். இவர் வங்கியியல் அல்லாத நிறுவனங்களின் மேற்பார்வை மற்றும் முறைமைப்படுத்தல், பாரியவிவேகமான கண்காணிப்பு, நிதி, சர்வதேச செயற்பாடுகள், இடர் முகாமைத்துவம், பிராந்திய அபிவிருத்தி மற்றும் மனித வள திணைக்களம் போன்ற பிரிவுகளில் பதிவிகளை வகித்துள்ளார்.

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

மேலும், திருமதி. தவுலகல அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை சபையின் அங்கத்தவராகவும், இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு கண்காணிப்பு சபையின் தலைவராகவும் சேவையாற்றுகின்றார்.

திருமதி. தவுலகல அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் எசெக்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து நிதியியல் மற்றும் வணிகப் பொருளாதாரத்தில் முதுமானி விஞ்ஞானப் பட்டத்தை வைத்துள்ளதுடன், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் ஐக்கிய இராச்சியத்தில் முகாமைத்துவ கணக்காளர்கள் பட்டய நிருவகத்தின் சமூக அங்கத்தவரும் ஆவார்.

திரு. லக்நாத் ஜயவிக்கிரம

திரு. லக்நாத் ஜயவிக்கிரம அவர்கள் 2022 இலிருந்து இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் ஆளுகைச் சபையின் அங்கத்தவர் ஆவார். இவர் தகைமையின் பின்னரான 22 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் உலகளாவிய கணக்கீட்டு நிறுவனமான பிரைஸ்வோட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ் இலங்கை, தென் ஆபிரிக்கா மற்றும் கிழக்காசியா இல் பத்துவருடங்களுக்கும் அதிகமாக சேவையாற்றியுள்ளார். இதன் பின்னர், இந்தோனேஷியா, மலேஷியா, சிங்கப்பூர் மற்றும் இந்தியா உள்ளடங்கலான நாடுகளில் வரி மற்றும் முறைமைப்படுத்தல் விடயங்களில் சிங்கப்பூரினை தளமாகக் கொண்ட ஒரு கூட்டு நிறுவனத்தில் இணைந்தார். இவர் ஒரு சுயாதீன தொழில்நடத்துநராக ஆரம்பிப்பதற்கு முன்னர் இலங்கையில் ஒரு முன்னணி சட்ட நிறுவனத்தில் ஒரு பங்காளியாக அனுமதிக்கப்பட்டார். இவரது தொழில்பயிற்சியானது நிதி, வரி, சட்டச் சேவைகள் மற்றும் தடயவியல் கணக்கீடு போன்ற பிரிவுகளை உள்ளடக்குகின்றது.

இவர் இலங்கையின் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், SLTC ஆய்வுப் பல்கலைக்கழகம், பட்டய வரிவிதிப்பு நிருவகம் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் ஆகியவற்றில் நிதி, வரி மற்றும் சட்டப் பாடங்களில் ஒரு வந்துபோகும் விரிவுரையாளராகவும் சேவையாற்றியுள்ளார். உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் நடாத்தப்பட்ட பல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் ஒரு வளவாளரும் ஆவார். திரு. ஜயவிக்கிரம அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து இளமானி விஞ்ஞான (கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்) விசேட பட்டத்தையும் இலங்கையின் திறந்த பல்கலைக்கழகத்திலிருந்து இளமானி சட்டப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் மற்றும் இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்கள் நிருவகம் ஆகியவற்றின் ஒரு சமூக அங்கத்தவர் ஆவார். மேலும், இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கறிஞரும் ஆவார்.

இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் வரிவிதிப்பு கல்லூரியின் தற்போதைய தலைவர் என்பதுடன் 2022-2023 காலப்பகுதியில் அதன் வணிகக் கல்லூரியின் தலைவராகவும் இருந்தார். தற்போது, இவர் தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் நொடிப்புநிலை குழுவின் ஒரு அங்கத்தவரும் ஆவார்.

தற்போது இவர், சியபத்த பைனான்ஸ் பி.எல்.சி. இன் ஒரு சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளராகவும், அதன் சபை கணக்காய்வு குழுவின் தலைவராகவும் பல்வேறு சபைக் குழுக்களின் அங்கத்தவராகவும் உள்ளார்.

திரு. டிலிப் சில்வா

இலங்கை கணக்காளர்கள் சேவையின் விசேட தரத்திலான ஒரு சிரேஷ்ட அதிகாரியான திரு. டிலிப் சில்வா அவர்கள் திறைசேரிக்கான பிரதி செயலாளர் பதவிக்காக கடமையினை 28 ஒக்டோபர் 2024 இல் பொறுப்பேற்றார். பிராந்திய நிர்வாகத்தில் ஒரு கணக்காளராக பரவலான அனுபவத்துடன் இவர் திறைசேரியின் பல்வேறு திணைக்களங்களில் பல பதவிகளை வகித்ததுடன் அரசாங்கச் சேவையில் அண்ணளவாக 34 வருடங்கள் சேவையினைக் கொண்டுள்ளார்.

திரு. சில்வா அவர்கள் இலங்கை கணக்காளர்கள் சேவையில் 1992 இல் இணைந்து, நிதி அமைச்சுடன் இணைந்த அரச கணக்குகள் திணைக்களம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம், முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் மற்றும் இலங்கை சுங்கம் போன்ற பல பாரிய திணைக்களங்களின் நிதியியல் துறைக்கான பிரதிநிதியாக அவரது கடமைகளை ஆற்றியுள்ளார். இவர் திறைசேரி செயற்பாடுகளின் பணிப்பாளர் நாயகமாக 11.11.2020 முதல் 27.10.2024 வரை நியமிக்கப்பட்டதுடன், திறைசேரியின் பிரதிச் செயலாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் குறித்த பதவியில் அவரது கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றினார்.

திரு. சில்வா அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து 1991 இல் பொது நிர்வாகத்தில் கௌரவப் பட்டத்தையும், 2011 இல் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திடமிருந்து பொது திட்டமிடலில் ஒரு டிப்ளோமாவினையும் 2016 இல் அதே நிறுவனத்திலிருந்து பொது முகாமைத்துவம் மற்றும் திட்ட முகாமைத்துவத்தில் பட்டப்படிப்பின் பின்னரான ஒரு பட்டத்தையும் பெற்றுள்ளார். திரு. சில்வா அவர்கள் பொது நிதியியல் மற்றும் கணக்கீட்டு பட்டய நிறுவனம் (இலண்டன்) மற்றும் இலங்கையின் கணக்கீட்டு தொழில்நுட்பர் சங்கம் போன்ற பிரசித்திபெற்ற தொழில்சார் அங்கங்களின் ஒரு அங்கத்தவரும் ஆவார். இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்துடன் ஒரு சான்றளிக்கப்பட்ட வணிகக் கணக்காளராகப் பதிவுசெய்துள்ளார்.

இவரது தொழில் வாழ்க்கை முழுவதும், இவர் கணக்கியல், நிதியியல் முகாமைத்துவம், பொது கடன் முகாமைத்துவம் மற்றும் திறைசேரி காசுப் பாய்ச்சல் செயற்பாடுகளில் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களிலிருந்து விரிவான வெளிநாட்டு பயிற்சியினைப் பெற்றுள்ளார்.

திரு. சில்வா அவர்கள் அபிவிருத்தி லொத்தர் சபை, தேசிய லொத்தர் சபை, தேசிய விஞ்ஞான நிறுவனம், இலங்கையின் திறந்த பல்கலைக்கழகத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மற்றும் தேசிய புத்தாக்க முகவர் உள்ளடங்கலாள பல சட்டரீதியான அங்கங்களில் ஒரு சபை அங்கத்தவராக திறைசேரியினை பிரதிநிதித்துவம் செய்துள்ளார். மேலும், பாதுகாப்பு அமைச்சு, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு போன்ற பாரிய அமைச்சுக்களின் கொள்முதல் குழுக்களில் திறைசேரியின் பிரதிநிதியாகவும் சேவையாற்றியுள்ளார். தற்போது, இவர் இலங்கை ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி (SMIB), இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு (IRCSL) மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு (SEC), ஸ்ரீ லங்கா ரெலிகொம் ஆகியவற்றின் சபை அங்கத்தவராக திறைசேரியினை பிரதிநிதித்துவம் செய்வதுடன், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆளுகைச் சபையில் ஒரு அங்கத்தவராகவும் சேவையாற்றுகின்றார்.

திருமதி. அரவிந்தி டி சில்வா

கம்பனிகள் பதிவாளர் நாயகம் (பதில்) மற்றும் வர்த்தம், வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் பிரதான நிதியியல் அதிகாரி.

திருமதி. அரவிந்தி டி சில்வா அவர்கள் இலங்கை கணக்கீட்டுச் சேவையின் ஒரு விசேட தரத்திலான அதிகாரி என்பதுடன், தற்போது வர்த்தம், வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் பிரதான நிதியியல் அதிகாரியாக மற்றும் கம்பனிகள் பதிவாளர் நாயகமாக சேவையாற்றுகின்றார்.

இவர் இலங்கை கணக்கீட்டுச் சேவையில் 1995 இல் இணைந்து வெளிவிவகார அலுவல்கள் அமைச்சு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, பொதுச் சேவைகள் ஆணைக்குழு, கலாச்சார அலுவல்கள் அமைச்சு மற்றும் கைத்தொழில் அமைச்சு போன்ற முக்கியமாக அமைச்சுகளில் பணிபுரிந்துள்ளார்.

இவர் அவரது முதலாவது பட்டதாரி தகைமையினை கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து இளமானி வர்த்தகத்தில் இரண்டாம் வகுப்பு பிரிவுச் சித்தியுடன் பெற்றுள்ளார்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து பொது நிர்வாகத்தில் அவரது முதுமானி பட்டத்தையும் களனிய பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியலில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவர் இலங்கையின் பட்டய பொது நிதியியல் கணக்காளர்கள் நிறுவனத்தின் ஒரு அங்கத்தவரும் ஆவார்.

நிரஞ்சித் கமகே

நிரஞ்சித் கமகே அவர்கள் புடவைகள், ஆடைகள், நுகர்வுப் பொருட்கள் மற்றும் சக்தி உருவாக்கல் உள்ளடங்கலான பன்முகமான துறைகளில் 25 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்ட ஒரு புகழ் பெற்ற நிதியியல் மற்றும் செயற்பாட்டு தலைவர் ஆவார். இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் ஒரு சமூக அங்கத்தவராக, இவர் நிதியியல் மூலோபாயம், செலவுச் சிக்கனப்படுத்தல், உற்பத்திச் செயற்பாடுகள் மற்றும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு என்பவற்றில் பரவலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

இவரது தொழில்வாழ்க்கை முழுவதும், திரு. கமகே அவர்கள் பன்னாட்டு மற்றும் உள்ளூர் கம்பனிகளில் முக்கிய தலைமைப் பதவிகளை வகித்து நிதியியல் மூலோபாயங்களையும் செயற்பாட்டு வினைத்திறன்களையும் வெற்றிகரமாக இயக்கியுள்ளார். பாரிய அளவிலான உற்பத்தித் திட்டங்கள், இணைப்புகள் மற்றும் கையகப்படுத்தலில் விரிவான மதிப்பாராய்வு, ERP அமுலாக்கல்கள் மற்றும் செங்குத்து ஒருங்கிணைப்பு முன்னெடுப்புகள் போன்றவற்றுக்கு இவரது பங்களிப்பு காரணியாயிருந்துள்ளன. அவரது செயல்திறமை, தனியார்துறை மற்றும் அரசதுறை நிறுவனங்களில் திறைசேரி முகாமைத்துவம், பாதீடு, வரி இணக்கப்பாடு மற்றும் பங்காளிகள் ஈடுபாடு என்பவற்றையும் உள்ளடக்குகின்றன.

திரு. கமகே அவர்கள் பல்தேசிய உற்பத்திக் கம்பனிகளுக்கு வெளிநாட்டு நிதியளிப்பு, செயற்பாடுகள், வழங்கல் சங்கிலி செயற்பாடுகள் மற்றும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு என்பற்றுக்கு தலைமை தாங்கி முகாமைப்படுத்தும் முக்கிய பங்கினை வகித்துள்ளார். பாரிய நான்கு கணக்கீட்டு கம்பனிகளின் இரண்டில் இவரது சேவையானது நிதியியில் ஆளுகை, கணக்காய்வு மற்றும் ஆலோசனைச் சேவைகள் என்பவற்றில் இவரது நிபணத்துவத்தினை மேலும் மேம்படுத்தியுள்ளது. மேலாக, பன்முகமான சர்வதேச சந்தைகளில் ஸ்மாட் தொழிற்சாலை அமுலாக்கல்கள், லீன் சிக்ஸ் சிக்மா முறைகள் மற்றும் உலகளாவிய வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் என்பவற்றுக்கு தலைமை தாங்கியுள்ளார்.

இவர் இலங்கையின் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து பொது முகாமைத்துவத்தில் ஒரு முதுமானி விஞ்ஞானப் பட்டத்தையும், மொரட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து ஆடை மற்றும் புடவை முகாமைத்துவத்தில் பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமா பட்டத்தையும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் (விசேடம்) இளமானி விஞ்ஞானப் பட்டத்தையும் கொண்டுள்ளார். இவர் TQMQ குளோபல் இன்டர்நெஷனல் இந்தியாவிலிருந்து லீன் சிக்ஸ் சிக்மாவில் சான்றளிக்கப்பட்ட கருப்பு பட்டியினைப் பெற்றுள்ளார்.

திரு. கப்புகே அருண பெரேரா

திரு. அருண பெரேரா அவர்கள் இலங்கையின் CFA சங்கத்தின் உடனடி கடந்தகால தலைவர் மற்றும் அனலிட்டிக்கல் இன்ஸ்ட்ருமன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டின் குழும பிரதம நிதியியல் அதிகாரியாவார். இவர் நிதியியல் பகுப்பாய்வு, கூட்டாண்மை நிதியளித்தல் மற்றும் பெறுமதியிடல் முகாமைத்துவம் என்பவற்றில், பிரதானமாக இலங்கையிலுள்ள பாரிய கம்பனிகளில் 25 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் 2017 முதல் 2023 வரை PwC ஸ்ரீலங்காவில் கூட்டாண்மை நிதியளித்தல் மற்றும் பெறுமதியிடல் ஆலோசனைக்கு பொறுப்பான பணிப்பாளர் ஆவார். இவர் மூடீஸ் அனலிட்டிக்ஸ் நொலேஜ் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டட், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் இலங்கை எர்ன்ஸ்ட் அன் யங் உள்ளடங்கலான பலதரப்பட்ட நிறுவனங்களில் பணியாற்றியுள்ளார். இவர் அபான்ஸ் வைனான்ஸ் பிஎல்சி இலும் ஒரு சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளராக சேவையாற்றியுள்ளார். இவர் அமெரிக்காவின் CFA நிறுவனத்தின் ஒரு CFA பட்டயம் பெற்றுள்ளார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் லெஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு முதுமானி பட்டத்தையும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து இளமானி விஞ்ஞானம் (கணக்கியல்) பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் ஒரு இணை அங்கத்தவரும் ஆவார்.

திரு. அனில் குமார மீகஹாகே

திரு. அனில் குமார மீகஹாகே அவர்கள் காப்புறுதி, தொலைதொடர்பு, நுகர்வுப் பொருட்கள், ஊடகம் மற்றும் விருந்தோம்பல் உள்ளடங்கலான பல்வேறு துறைகளில் 30 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்ட ஒரு பண்பட்ட கூட்டாண்மைத் தலைவராவார்.

திரு. மீகஹாகே அவர்கள் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சபைப் பணிப்பாளராகவும், கென்வில் ஹோல்டிங்ஸ், சினோலங்கா ஹோட்டல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் ஹெலன்கோ ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றின் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். இவர் இலங்கையின் தொலைதொடர்பு முறைமைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஒரு அங்கத்தவரும் ஆவார்.

இவர் EAP ஹோல்டிங்ஸ் இன் சிரேஷ்ட துணைத் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் EBC தொலைக்காட்சி / வானொலி மற்றும் EAP வில்ம்ஸ் இன் பணிப்பாளரும் ஆவார். 2013 முதல் 2018 வரை இவர் ஸ்வர்ணவாஹினி, ஸ்ச்ரீ எவ்எம், ஈ எவ்எம் மற்றும் ரேன எவ்எம் ஆகியவற்றின் பணிப்பாளர் /பி.றி.ஆ. ஆக ஊடகத் துறையினை வழிநடத்தினார்.

இவரது தொழில்வாழ்வின் ஆரம்பத்தில், இவர் இலங்கையின் சம்சுங் மொபைல் ஸ்ரீலங்காவின் நாட்டிற்கான தலைவராக சேவையாற்றியதுடன், இவர் விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் உற்பத்தி விநியோகம் என்பவற்றை இயக்குவதற்கு பொறுப்பாய் இருந்தார். சம்சுங் ஸ்ரீலங்கா செனல் விநியோக வலையமைப்பினை நிறுவுவதிலும் நாடுபூராவும் ஸ்மார்ட் கடை

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

கோட்பாட்டினை அறிமுகப்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றினார்.

இவர் ஹேமாஸ் கொன்சூமர் குட்ஸ் ஸ்ரீ லங்காவில் விற்பனை மற்றும் சர்வதேச வணிகத்திற்கு பொறுப்பான பணிப்பாளர் பதவியினையும் வகித்ததுடன், ரூபா 10 பில்லியனுக்கும் அதிகமான புரள்வினை மேற்பார்வை செய்தார். அத்துடன் இவர் விற்பனைச் செயற்பாடுகள், விநியோகம், வாடிக்கையாளர் சந்தைப்படுத்தல் மற்றும் சர்வதேச வணிகச் செயற்பாடுகளையும் வழிநடத்தினார்.

இதற்கு முன்னர் இவர், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் ஆயுள் மற்றும் பொது வணிகம் ஆகிய இரண்டிற்கும் பொது முகாமையாளராக தலைமை வகித்தார். இவர் 2008/2010 காலப்பகுதியின்போது ஒரு புத்தாக்கமான கருவித் தேக்கத்தினை அறிமுகப்படுத்தியதன் மூலம் ஆயுள் மற்றும் பொது வணிகத்தில் கம்பனியின் சந்தை முன்னணி நிலைக்கு வழிநடத்தினார்.

இவரது நிறுவனப் பயணமானது 1988 இல் யுனிலீவர் ஸ்ரீ லங்காவில் ஆரம்பித்து, இங்கு இவர் விற்பனை நிர்வாக முகாமையாளர், பிராந்திய விற்பனை முகாமையாளர் மற்றும் இல்லங்கள் மற்றும் தனிப்பட்ட பராமரிப்பிற்கான வர்த்தகப் பிரிவு முகாமையாளர் போன்ற முக்கிய பதவிகளை வகித்து பதவியுயர்வுகளைப் பெற்றார். இவர் யுனிலீவர் வியட்நாமிலும் தொழில் புரிந்தபின்னர் இலங்கை திரும்பி செனல் அபிவிருத்தி, சந்தைப்படுத்தல், மருந்தகம் மற்றும் அழகுசாதன செனல் மூலோபாயம் என்பவற்றை வழிநடத்தி யுனிலீவரில் 20 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினை திரட்டியுள்ளார்.

இவர் ஐக்கிய இராச்சியத்தின் பட்டயச் சந்தைப்படுத்தல் நிறுவனத்திடமிருந்து ஒரு முதுமானி பட்டத்தையும் சந்தைப்படுத்தலில் பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமாவினையும் (DipM MCIM) பெற்றுள்ளார். இவர் கேம்பிரிட்ஜ் முகாமையாளர்கள் சங்கத்தின் சமூக அங்கத்தவர் என்பதுடன், வாடிக்கையாளர் சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவத்தில் 18 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

பணிப்பாளர்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர்கள்

சிந்தக்க மென்டிஸ்
பணிப்பாளர் நாயகம்

துஷார ஜயரத்ன
பிரதிப் பணிப்பாளர் நாயகம்

நிரோஷர் கொடிகார
பணிப்பாளர் - நிதி மற்றும் நிர்வாகம்

மனுாரி வீரசிங்க
பணிப்பாளர் - கூட்டாண்மை அலுவல்கள்

ரியாஷ் பாரி
பணிப்பாளர் - புலனாய்வுகள் மற்றும் வலியுறுத்தல்

ரிஷ்தா ஷரூக் ஹிசாக்
பணிப்பாளர் - சட்டம்

சுனெத் பெரேரா
பதிலாள் பணிப்பாளர் - மேற்பார்வை

மதுகயனி பலபிட்டிய
உதவிப் பணிப்பாளர் - சட்டம் மற்றும் வலியுறுத்தல்

டி எம் ஜி பிரியந்த
உதவிப் பணிப்பாளர் - புலனாய்வு

ஷர்மிளா பண்டித்தரத்ன
உதவிப் பணிப்பாளர் - மேற்பார்வை

மதுர பி ஆர் வணிகசேகர
பிரதம டிஜிட்டல் அதிகாரி

சமூகமளிக்காதவர்:
தம்மிக்க பெரேரா
பிரதி பணிப்பாளர் நாயகம்

சிரேஷ்ட முகாமையாளர்கள்

இடமிருந்து வலம் நிற்பவர்கள் : ரன்மிணி ஜயதிலக்க – சிரேஷ்ட முகாமையாளர், தகவல் தொழில்நுட்பம்,

ஷீனா குணரத்ன – சிரேஷ்ட முகாமையாளர், வெளிவாரி உறவுகள்

இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள் : சஜீவனி பக்மீதெனிய – சிரேஷ்ட முகாமையாளர், மூலதனச் சந்தைக் கல்வி, மஞ்சுளா சந்திரரத்ன – சிரேஷ்ட முகாமையாளர், கண்காணிப்பு

சமூகமளியாதோர்: சவுமி கொடிப்பிலி – சிரேஷ்ட முகாமையாளர், மேற்பார்வை

முகாமையாளர்கள்

இடமிருந்து வலம் நிற்பவர்கள்: சி. எரந்திதி வைத்தியசேகர – முகாமையாளர், புலனாய்வுகள், மாரியன் கிளென்டா சந்தானம் - முகாமையாளர், கூட்டாண்மை அலுவல்கள், ஒலிவி சொலங்காராச்சி – முகாமையாளர், மூலதனச் சந்தை அபிவிருத்தி, நிமால் குமாரசிங்க – முகாமையாளர், வெளிவாரி உறவுகள், தக்ஷிலா பிரான்சிஸ் - முகாமையாளர், மூலதனச் சந்தை அபிவிருத்தி, நொமானி செனவிரத்ன – முகாமையாளர், புலனாய்வுகள்

இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள்: ஜி. டி. கபில குமார – முகாமையாளர், புலனாய்வுகள், அனுலா விஜேசிங்க – முகாமையாளர், மேற்பார்வை, அசோகா கே. தயாரத்ன – முகாமையாளர், மனித வளங்கள், ஆர். கே. வசந்த சுனிமல் - முகாமையாளர், மேற்பார்வை

இடமிருந்து வலம் நிற்பவர்கள் : வை. டீ. சந்தமாலி – முகாமையாளர், நிதி மற்றும் நிர்வாகம், மேகலா ஜயபால – முகாமையாளர், மேற்பார்வை, பிரியந்த ஹேரத் - முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல், புத்தினி ஹேரத் - முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல், ஜே. கே. பிரியதர்ஷினி – முகாமையாளர், மனித வளங்கள்.

இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள்: எம். இம்ரான் ஹாமட் - முகாமையாளர், நிதி மற்றும் நிர்வாகம், லக்ஷ்மி விக்கிரமநாயக்க – முகாமையாளர், நிதி மற்றும் நிர்வாகம், பி.எம். நிரோஷிகா உதயாங்கனி – முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல் மற்றும் ரசிக்க வல்பிட்டிகம – முகாமையாளர், மூலதனச் சந்தை அபிவிருத்தி.

நிகழ்வுக் காட்சியகம்

இ.பி.ப.ஆ. IOSCO கொள்கை குழு 8 இன் கூட்டத்தினை விருந்தோம்பல்

கம்பனிச் செயலாளர்கள் /பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் சபை செயலாளர்களுக்கு திருத்தியமைக்கப்பட்ட பெருநிறுவன ஆளுகையில் விழிப்புணர்வு அமர்வு

உலகத் தரத்திலான அதி நவீன சந்தை கண்காணிப்பு அமைப்புமுறை நஷ்டாக்கிடமிருந்து கொள்வனவு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் புதுப்பிப்பு

மாலைதீவு மூலதனச் சந்தை முறைமைப்படுத்துபவருடன் இ.பி.ப.ஆ. சிறப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது

மாத்தறை முதலீட்டாளர் கருத்துக்களம்

பல்கலைக்கழக இறுதிச் சமர்

பல்கலைக்கழக மாணவர் திட்டம்

மூலதனச் சந்தை கழக இறுதிப் புதிர் போட்டி

பாடசாலை கருத்தரங்கு

ஒரு பசுமையான பொருளாதாரத்தினை நோக்கி : நிலைபேறுடைய முறிகளூடாக வாய்ப்புக்களைத் திறத்தல் கருத்துக்களம்

இலங்கையின் கிழக்கு பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் புதுப்பித்தல்

பதிவீடளிக்கப்பட் முதலீட்டு ஆலோசகர்களுக்கான தொ.தொ.அ. திட்டம்

கம்பஹா முதலீட்டாளர் கருத்துக்களம்

மாத்தளை முதலீட்டாளர் கருத்துக்களம்

இலங்கையின் தென் கிழக்கு பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை புதுப்பித்தல்

நிகழ்வுக் காட்சியகம்

தம்புள்ள முதலீட்டாளர் கருத்துக்களம்

ஆசிரியர் பயிற்சித் திட்டம்

திம்புலாகல கல்வி வலயத்திலுள்ள ஆசிரியர்களுக்கான ஆசிரியர் பயிற்சித் திட்டம்

இரத்தினபுரி முதலீட்டாளர் கருத்துக்களம்

மூலதனச் சந்தை கழகங்களுக்கான ஆசிரியர் பயிற்சித் திட்டம்

நுவரெலிய முதலீட்டாளர் கருத்துக்களம்

வவுனியாவில் முதலீட்டாளர் கருத்துக்களம்

செயற்பாட்டு மீளாய்வு



சுறுசுறுப்பின் வினையூக்கிகள்

இ.பி.ப.ஆ. நெறிப்படுத்தப்பட்ட அமைப்புமுறைகள் மற்றும் இணங்கத்தக்க மூலோபாயங்களூடாக செயற்பாட்டு பொறுப்புணர்ச்சிக்கு துணையளிக்கின்றது. தொடர்ச்சியான மேம்படுத்தலுக்கான எமது கடப்பாடானது மூலதனச் சந்தை வினைத்திறனாக, சுறுசுறுப்பாக மற்றும் பங்காளிகளது வளர்ந்துவரும் தேவைகள் மற்றும் உலகளாவிய நிதியியல் நிலத்தோற்றத்திற்கு சீரமைவாக இருப்பதனை உறுதிசெய்கின்றது..

மூலோபாய இலக்கு 1

ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலினை நிறுவிப் பராமரித்தல்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு (இ.பி.ப.ஆ.) முதலீட்டாளர் நம்பிக்கை, சந்தை நேர்மை மற்றும் நிதியியல் ஸ்திரத்தன்மை என்பவற்றை பேணும் ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலினை நிறுவிப் பராமரிக்கும் அதன் பணிநோக்கில் உறுதியாய் உள்ளது. கடந்த வருடத்தில், இ.பி.ப.ஆ., வெளித்தோன்றும் இடர்கள் மற்றும் உருவாகின்ற உலகளாவிய நியமங்களை விளித்துரைப்பதற்காக, முக்கிய முறைமைப்படுத்தல் சீர்திருத்தங்களை அமுல்படுத்தியும், இணக்கப்பாட்டு கட்டமைப்புகளைப் பலப்படுத்தியும், முதலீட்டாளர் கல்வியினை மேம்படுத்தியும் உரிமமளித்தல் பரீட்சைகளை நிர்வகித்தும் உள்ளது.

உரிமமளித்தல்

கடுமையான முறைமைப்படுத்தல் நியமங்களை சந்திக்கும் நிறுவனங்களுக்கு உரிமமளித்தலும், துறையினுள் செயலாற்றுவதற்கான அதிகாரத்தினை அவற்றுக்கு வழங்குவதும் இ.பி.ப.ஆ. இன் ஒரு முக்கிய செயற்பாடாகும். சந்தை நிறுவனங்கள் மற்றும் இடையீட்டாளர்களுக்கு உரிமமளித்தல் என்பது, 2021 இன் 19ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தினால் நிறுவப்பட்ட முறைமைப்படுத்தல் கட்டமைப்பின் கீழ் கட்டமைக்கப்பட்டுள்ள இரண்டு நிலை செயன்முறையாகும். முதலாவது நிலையில், எதிர்பார்ப்புள்ள விண்ணப்பதாரிகள் கொள்கையளவு அங்கீகாரத்தினை பெறுதல் வேண்டும் என்பதுடன் மேலதிகத் தேவைகளைப் பூர்த்திசெய்ததன் பின்னர் இறுதி அங்கீகாரம் வழங்கப்படும்.

இ.பி.ப.ஆ. இன் மேற்பார்வையானது ஆரம்ப உரிமமளித்தல் கட்டத்திற்கு அப்பால் நீட்டிக்கப்படுகின்றது. சந்தை இடையீட்டாளர்களுக்கு வழங்கப்படும் உரிமங்கள் வருடாந்த புதுப்பித்தலுக்கு உட்பட்டதாகும் என்பதுடன் இது வாடிக்கையாளர்களுடன் ஈடுபடும் பணிப்பாளர்கள் மற்றும் தனிநபர்கள் உள்ளடங்கலான முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் தகுதி மற்றும் பொருத்தத்தினை மதிப்பீடு செய்தல், உள்ளகக் கட்டுப்பாடுகளை மதிப்பிடுதல் மற்றும் பொருத்தமான விதிகளுடனான இணக்கப்பாட்டினை முழுமையாக மீளாய்வு செய்தல் போன்றவற்றை உள்ளடக்குகின்றது.

இந்த உரிமமளித்தல் செயன்முறையானது முறைமைப்படுத்தல் மேற்பார்வையினை உறுதிப்படுத்தல், நிதியியல் சந்தைகளின் நேர்மை மற்றும் உறுதியினை பாதுகாத்தல், முதலீட்டாளர் நம்பிக்கையினை பேணுதல் மற்றும் நியாயமான, முறையான வர்த்தகத்தினை ஊக்குவித்தல் என்பவற்றை உறுதிப்படுத்துகின்றது.

மீளாய்வாண்டின்போது, நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட புதிய உரிமங்கள் மற்றும் 31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான உரிமம் வைத்திருப்பவர்களின் மொத்த எண்ணிக்கை என்பன பின்வருமாறு: (உருவம்: 01, 02)

உருவம் 01: 2024 இல் நிறுவனங்களுக்கு உரிமமளித்தல்

முறைமைப்படுத்தப்படும் நிறுவனத்தின் வகை	2024 இன் போது வழங்கப்பட்ட புதிய உரிமங்கள்	31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை
பரிமாற்றகங்கள்	01	01
தீர்வக இல்லங்கள்	-	01
மத்திய வைப்பகங்கள்	-	01
பங்குத் தரகர்கள்	-	27
பங்கு வர்த்தகர்கள்	-	10
முகாமைத்துவக் கம்பனிகள்*	03	16
முதலீட்டு முகாமையாளர்கள்	01	22
எல்லைக்கடன் வழங்குனர்கள்	-	20
ஒப்புரவாளர்கள்	-	08
கடன் தரப்படுத்தல் முகவர்கள்	-	02
பெருநிறுவன நிதியளித்தல் ஆலோசகர்கள்	04	08

*அங்கீகரிக்கப்பட்ட கூட்டு முதலீட்டுத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கம்பனிகள்

உருவம் 02: 2024 இல் உள்ள மொத்த உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்

உரிமத்தின் வகை	உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை	
	31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறானது	31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறானது
பரிமாற்றகங்கள்	01	01
தீர்வக இல்லங்கள்	01	01
மத்திய வைப்பகங்கள்	01	01
பங்குத் தரகர்கள்	27	27
பங்கு வர்த்தகர்கள்	11	10
முகாமைத்துவக் கம்பனிகள்	16	16
முதலீட்டு முகாமையாளர்கள்	22	22
எல்லைக்கடன் வழங்குனர்கள்	20	20
ஒப்புரவாளர்கள்	08	08
கடன் தரப்படுத்தல் முகவர்கள்	02	02
பெருநிறுவன நிதியளித்தல் ஆலோசகர்கள்	04	08

இவ்வாண்டின்போது நிறுவனங்கள் உரிய செயற்பாடுகளை தொடர்வதற்கு விரும்பாததினால் இரண்டு உரிமங்கள் இடைநிறுத்தப்பட்டன.

- முதலீட்டு முகாமயாளர் - கெப்பிட்டல் ட்ரஸ்ட் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- பங்கு வர்த்தகர் - சொவ்ட்லொஜிக் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்

தலைவரது மற்றும் பணிப்பாளர் நாயகத்தினது அலுவலகங்கள்

மேலாக, மீளாய்வாண்டின்போது, உரிமமளிக்கப்பட்ட முகாமைத்துவக் கம்பனிகளினால் செயலாற்றப்படும் ஆறு கூட்டு முதலீட்டுத் திட்டங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. (உருவம்: 03)

உருவம் 03: 2024 இல் உள்ள கூட்டு முதலீட்டுத் திட்டங்களின் மொத்த எண்ணிக்கை

	கூட்டு முதலீட்டுத் திட்டங்களின் மொத்த எண்ணிக்கை	
	31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறானது	31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறானது
அங்கீகரிக்கப்பட்ட கூட்டு முதலீட்டுத் திட்டங்கள்	84	90

கொள்கை முன்னெடுப்புகள

கொ.ப.ப. இன் பரஸ்பரமற்றமயமாக்கல்

26 ஜனவரி 2018 திகதியிடப்பட்ட வர்த்தமானியின் பகுதி II இற்கான இணைப்பில் (1 பெப்ரவரி 2018 இல் வழங்கப்பட்டது) பிரசுரிக்கப்பட்ட கொ.ப.ப. இன் பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலத்தினை இ.பி.ப.ஆ. தொடர்ந்தும் முன்னெடுத்தது.

விரிவாக ஆழ்ந்து ஆராய்ந்ததன் பின்னர், ஆணைக்குழுவானது கொ.ப.ப. இன் பரஸ்பரமற்றமயமாக்கல் சட்ட மூலமானது உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பனியினை பங்குகளால் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாக மாற்றுவதற்கு வசதியளிக்கும் நோக்கத்திற்கு மாத்திரமே என்று உறுதிசெய்தது. முன்மொழியப்பட்ட குழு மட்டத்திலான திருத்தங்களுக்கான அமைச்சரவையின் அங்கீகாரம் 08 ஏப்ரல் 2024 இல் பெறப்பட்டது.

இத்திருத்தங்களை ஒருங்கிணைத்து வரைவு சட்ட மூலத்தினை நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சானது சட்ட வரைஞர் திணைக்களத்தினூடாக அரசியலமைப்பு செல்லுபடித்தன்மைக்கான சான்றிதழுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தது. இதற்கு பதிலளிக்கும் முகமாக, சட்டமா அதிபர் திணைக்களமானது சில விளக்கங்களை கோரியதுடன், இ.பி.ப.ஆ. அவற்றை செயலூக்கமாக விளித்துரைக்கும் செயற்பாட்டிலுள்ளது.

மூலோபாய இலக்கு 1

ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலினை நிறுவிப் பராமரித்தல்

சட்டம் மற்றும் வலியுறுத்தல் அணி

அங்கீகாரங்கள்

தேச, பிராந்திய மற்றும் உலகளாவிய நிதியங்கள்

வரையறுக்கப்பட்ட (தனியார்) மத்திய வைப்புத் திட்டத்தின் (ம.வை.தி.) பரிந்துரையின் பேரில் இ.பி.ப.ஆ., கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்வதற்கு உலகளாவிய, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு அங்கீகாரம் வழங்குகின்றது. அங்கீகாரங்கள், அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள், 2006 இன் 05 ஆம் இலக்க பணம் சலவை செய்தல் தடுப்புச் சட்டம், 2006 இன் 06 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம் மற்றும் இலங்கையில் பிணையங்கள் தொடர்பான சட்டங்களுடன் இணக்கப்பாட்டிற்கு உட்பட்டு வழங்கப்படுகின்றன.

2024 ஆம் ஆண்டின்போது, இ.பி.ப.ஆ. 37 உலகளாவிய, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு இலங்கையில் பட்டியலிடப்பட்டுள்ள பிணையங்களில் முதலீடு செய்வதற்கு அங்கீகாரங்களை வழங்கியதுடன் 49 பெயர் மாற்றங்களையும் குறித்துக்கொண்டது.

கொ.ப.ப. இன் வர்த்தகப் பங்குபற்றுநர் விதிகளுக்கான திருத்தங்கள் (முன்னர் பங்குத் தரகர் விதிகள் என அழைக்கப்பட்டன)

மீளாய்வாண்டின்போது, கொ.ப.ப. இன் வர்த்தகப் பங்குபற்றுநர் விதிகளுக்கு கொ.ப.ப. இனால் முன்மொழியப்பட்ட திருத்தங்களுக்கு இ.பி.ப.ஆ. அங்கீகாரம் வழங்கியது:

1) வர்த்தப் பங்குபற்றுனர்களினால் பயன்படுத்தப்படும் விண்ணப்ப முறைமைகளுக்கு பொருத்தமான மேலதிகத் தேவைப்பாடுகளுக்கு வசதியளிப்பதற்கு
2) பங்குத்தரகருக்கு பிரத்தியேக சேவைகளை வழங்கும் நபர்களை வரையறை செய்வதற்கு, கட்டளைகள் பதிவுசெய்யப்படுவதனை திருத்தியமைத்து மீள்பார்வையிடுவதற்கு மற்றும் பணியாட்களது பிரகடனங்களை திருத்தியமைப்பதற்கு
3) வர்த்தகத் தீர்ப்பனவு சுழற்சியினை T+3 இலிருந்து T+2 ஆக குறைப்பதற்கு வசதியளிப்பதற்கு
4) நடப்பு சந்தை நடைமுறைகளுடன் மேற்குறிப்பிட்டதை மேலும் சீரமைப்பதற்கு

கொ.ப.ப. இன் வர்த்தக விதிகளுக்கான திருத்தங்கள்

மீளாய்வாண்டின்போது, கொ.ப.ப. இன் வர்த்தக விதிகளுக்கு அதனால் முன்மொழியப்பட்ட திருத்தங்களுக்கு இ.பி.ப.ஆ. அங்கீகாரம் வழங்கியது:

1) வர்த்தகத் தீர்ப்பனவு சுழற்சியினை T+3 இலிருந்து T+2 ஆக குறைப்பதற்கு வசதியளிப்பதற்கு
2) கொ.ப.ப. இன் சந்தை நிறுவனம் சாரா மேடையில் உயர் விளைவு கம்பனி கடன் பிணையங்களை அறிமுகப்படுத்துவதற்கு.

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளுக்கான திருத்தங்கள்

2021 இன் 19 ஆம் இலக்க பி.ப.ஆ. சட்டத்தின் சட்டவாக்கத்தின் காரணமாக கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள் அனைத்தும் திருத்தியமைக்கப்படவேண்டியுள்ளதுடன், பிரேரிக்கப்பட்ட விதிகள் இ.பி.ப.ஆ. இனால் மீளாய்வு செய்யப்படுகின்றன. மீளாய்வாண்டின்போது, பட்டியலிடல் விதிகளுக்கான பின்வரும் முன்மொழியப்பட்ட திருத்தங்களுக்கு இ.பி.ப.ஆ. அங்கீகாரம் வழங்கியது:

1) ஷரியா இணக்கப்பாடான கடன் பிணையங்களின் பட்டியலிடலுக்கு வசதியளிப்பதற்கு
2) கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளது முக்கிய மீறல்களுக்காக பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் பணிப்பாளர்களுக்கு அபராதங்கள் விதிப்பதற்கு வசதியளிப்பதற்கு
3) பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் பணிப்பாளர்களினால் இனங்காணப்பட்ட வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளாமைக்காக பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கு எதிரான வலியுறுத்தல் நடவடிக்கைகளை திருத்தியமைப்பதற்கு
4) கொ.ப.ப. இன் சந்தை நிறுவனம் சாரா மேடையில் உயர் விளைவு கம்பனி கடன் பிணையங்களது அறிமுகத்திற்கு வசதியளிப்பதற்கு
5) கொ.ப.ப. இல் உட்டகட்டமைப்பு முறிகளின் வழங்கல் மற்றும் பட்டியலிடலுக்கு வசதியளிப்பதற்கு
6) வர்த்தகத் தீர்ப்பனவு சுழற்சியினை T+3 இலிருந்து T+2 ஆக குறைப்பதற்கு வசதியளிப்பதற்கு

ம.வை.தி. விதிகளுக்கான திருத்தங்கள்

மீளாய்வாண்டின்போது, ம.வை.தி. விதிகளுக்கு கொ.ப.ப. இனால் முன்மொழியப்பட்ட திருத்தங்களுக்கு இ.பி.ப.ஆ. அங்கீகாரம் வழங்கியது:

1) இலங்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட / நிறுவப்பட்ட நிறுவனங்களினால் வெளிநாட்டு நாணயத்தில் பெயரிடப்பட்டு வழங்கப்பட்ட கடன் பிணையங்களின் தீர்வு மற்றும் தீர்ப்பனவிற்கு வசதியளிப்பதற்கு.

ம.வை.தி. இன் தீர்வக இல்ல விதிகளுக்கான திருத்தங்கள்

மீளாய்வாண்டின்போது, இ.பி.ப.ஆ. தீர்வக இல்ல விதிகளுக்கு கொ.ப.ப. இனால் முன்மொழியப்பட்ட திருத்தங்களுக்கு அங்கீகாரம் வழங்கியது:

1) வர்த்தகத் தீர்ப்பனவு சுழற்சியினை T+3 இலிருந்து T+2 ஆக குறைப்பதற்கு வசதியளிப்பதற்கு

2) கொ.ப.ப. இன் சந்தை நிறுவனம் சாரா மேடையில் உயர் விளைவு கம்பனி கடன் பிணையங்களின் அறிமுகம்

பட்டியலிலிருந்து அகற்றுதல்

மீளாய்வுக் காலத்தின்போது 18 டிசம்பர் 2001 திகதியிடப்பட்ட இல. 1215/12 அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இ.பி.ப.ஆ. விதிகளின் விதி 5 இன் பிரகாரம் பின்வரும் கம்பனிகளினால் மேற்கொள்ளப்பட்ட மனமுவந்த பட்டியலிலிருந்து அகற்றல் விண்ணப்பங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டன.

1) யுனிசிஸ்ட் இன்ஜினியரிங் பிஎல்சி

2) எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி

3) எய்ட்கன் ஸ்பென்ஸ் பிளான்டேஷன் மெனேஜ்மன்ட்ஸ் பிஎல்சி

பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையின் நிர்வகிப்பு

1995 இன் கம்பனி பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் கோவையின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரகாரம் 2024 ஆம் ஆண்டின்போது பின்வரும் பொறுப்பேற்பு கொடைமுனைவுகள் நிர்வகிக்கப்பட்டன: (உருவம் 04:)

உருவம் 04: பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடைமுனைவுகள்

கொடைமுனையளிப்பவர்	பொறுப்பேற்கப்படுபவர்	கொடைமுனைவின் தன்மை	நிலைமை
எக்டா குளொபல் பிரைவேட் லிமிட்டட்	சிலோன் பிரின்டர்ஸ் பிஎல்சி	கட்டாயக் கொடைமுனைவு	தொடர்கின்றது
ஐகொனிக் ட்ரஸ்ட் (பிரைவேட்) லிமிட்டட்	சியரா கேபள்ஸ் பிஎல்சி	கட்டாயக் கொடைமுனைவு	தொடர்கின்றது

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 80 இன் கீழான அங்கீகாரங்கள்

ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரினால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி, ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனி அல்லது ஒரு பரிவர்த்தனையில் ஒரு பட்டியலிடலைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ள ஏதேனும் பொதுக் கம்பனி பொதுமக்களிடமிருந்து நிதியினை திரட்டும் நோக்கத்திற்காக ஒரு முன்விவரணக்கோவையின் மூலம் அல்லது அதனையொத்த ஒரு ஆவணத்தின் மூலம் அல்லது வேறுவிதத்தில் நேரடியாக அல்லது ஒரு மூன்றாம் தரப்பினரூடாக பிணையங்களின் ஒரு பொது வழங்கலை மேற்கொள்ளலாகாது. இவ்வாண்டின்போது டிஜிட்டல் மொபிலிட்டி சொலூசன்ஸ் லங்கா லிமிட்டட்டிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன், ட்ரான்ஸ்கோ கார்கோ லிமிட்டட் மற்றும் லங்கா டெய்ரீஸ் (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றின் விண்ணப்பங்கள் மதிப்பிடப்பட்டன.

தளத்திற்கப்பாலான பங்கு கொடுக்கல் வாங்கல்களின் அங்கீகாரம்

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 84 (1) இன் பிரகாரம், ஒரு பரிமாற்றகத்தில் பட்டியலிடப்பட்டுள்ள ஒரு கம்பனியின் பிணையங்களை வைத்திருக்கும் ஒருவர் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட பரிமாற்றகத்தினால் கடைப்பிடிக்கப்படும் வர்த்தக நடைமுறைகளுக்கு இணங்க அத்தகைய பிணையங்களை கொள்வனவு செய்யலாம், விற்பனை செய்யலாம் அல்லது இல்லாவிடின் வர்த்தகம் செய்யலாம். எவ்வறாயினும், அத்தகைய பரிமாற்றகத்தினால் தெளிவான வர்த்தக செயன்முறை கடைப்பிடிக்கப்படாதவிடத்து, ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

மீளாய்வாண்டின்போது 664 விதிவிலக்கான மாற்றல்களுக்கும் 152 பங்குக் கொடைகளுக்கும் வழங்கப்பட்ட அங்கீகாரமானது இ.பி.ப.ஆ. இன் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இந்த விதிவிலக்கான மாற்றல்கள் எல்லைக்கடன் வர்த்தகம், தனியான கணக்கிலிருந்து கூட்டுக் கணக்கிற்கு கூட்டுக் கணக்கிலிருந்து கூட்டுக் கணக்கிற்கு கூட்டுக் கணக்கிலிருந்து தனியான கணக்கிற்கு, நிதியளித்தல் வசதிகள், கொடைகள் (விசேட), பட்டியலிலிருந்து அகற்றுதல் கொடைமுனைவுகள் ஆகியவற்றிற்கு வசதியளிப்பதற்காகும்.

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 81 இன் கீழான அங்கீகாரங்கள்

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 81 இன் பிரகாரம், பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் வழங்கப்படும் பட்டியலிடப்படா பிணையங்கள் தொடர்பான விண்ணப்பங்கள் இ.பி.ப.ஆ. இற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆணைக்குழுவின் அங்கீகாரமானது நேஷன் ட்ரஸ்ட் பேங்க் பிஎல்சி இற்கு வழங்கப்பட்டதுடன், சனச லைவ் இன்சூரன்ஸ் கம்பனி பிஎல்சி இன் விண்ணப்பம் மதிப்பிடப்படுகின்றது.

இ.பி.ப.ஆ. இனால் வழங்கப்பட்ட பணிப்புரைகளும் அறிவுறுத்தல்களும்

• 2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 16 (சி) இன் பிரகாரம் வழங்கப்பட்ட ஒரு பணிப்புரையின் மூலம் ஒரு முதலீட்டாளரினால் மேற்கொள்ளப்பட்ட முறையீட்டினுள் நேருக்கு நேரான ஒரு விசாரணையினை நடாத்துமாறு கொ.ப.ப. பணிக்கப்பட்டது. இது அவரிடமிருந்து நேரடியாக கேட்பதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குவதற்காகும்.

• கொ.ப.ப. பின்வரும் ஒழுக்காற்று நடவடிக்கை அறிவித்தலை ஒரு பட்டியலிடப்பட்ட கம்பனியின் பணிப்பாளருக்கு வழங்கி ஒரு நிர்வாக அபராதத்தினை விதிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. இது குறித்த கம்பனியினால் 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த நிதியாண்டிற்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிக்காததற்கு பணிப்பாளர்கள் சபை அங்கத்தவர்கள் மீது சுமத்தப்பட்ட அபராதத்துடன் இணங்காமையின் காரணத்தினாலாகும்.

இ.பி.ப.ஆ. இன் இணக்கப்பாட்டு வசதியளித்தல் முன்னெடுப்புகள்

பங்குகளது மாற்றலை தடைசெய்யும் அறிவித்தல்கள்

சில தனிநபர்கள் மற்றும் கம்பனிகளின் பங்குரித்துவத்தின் மாற்றல்களை கட்டுப்படுத்துதல் தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட சில நிறுத்தல் கட்டளைகள் இலங்கை மத்திய வங்கியினால் இ.பி.ப.ஆ. இற்கு அறிவிக்கப்பட்டது. இ.பி.ப.ஆ. கொழும்பு மேல் நீதிமன்றத்தின் தீர்மானத்தினை அவசியமான நடவடிக்கைக்காக கொ.ப.ப. மற்றும் ம.வை.தி. இற்கு தெரிவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தது.

உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட நிதி கம்பனிகளது பணிப்பாளர்களிலான தகவல்களை இலங்கை மத்திய வங்கி வேண்டுதல்

2011 இன் 03 ஆம் இலக்க பணிப்புரையின் கீழ் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளின் (நிறைவேற்று செயற்பாடுகளை செயலாற்றும் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகளின் தகுதி மற்றும் பொருத்தத்தினை மதிப்பிடுதல்) நிறைவேற்றுச்

மூலோபாய இலக்கு 1

ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலினை நிறுவிப் பராமரித்தல்

செயற்பாடுகளை செயலாற்றுவதற்காக பணிப்பாளர்களாக அல்லது அதிகாரிகளாக நியமிக்கப்படவுள்ள அல்லது ஏற்கனவே நியமிக்கப்பட்ட தனிநபர்களின் பின்னணியினை சரிபார்ப்பதன் முக்கியத்துவத்தினை கருத்திற்கொண்டு இலங்கை மத்திய வங்கியின் சார்பில் இ.பி.ப.ஆ. கவனமெடுப்பதற்கு வசதியளித்தது.

2011 இன் 41 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் பிரிவு 21 (1) இன் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு பணிப்பாளர்களாக நியமிக்கப்படும் அத்தகைய தனிநபர்களை தடைசெய்யக்கூடிய இ.பி.ப.ஆ. இன் முறைமைப்படுத்தல் கட்டமைப்பின் பிரகாரம் ஏதேனும் அவதானிப்புகள் / பாதகமான கண்டுபிடிப்புகளை வழங்குமாறு இ.பி.ப.ஆ. இனை இ.ம.வ. வேண்டியது.

வர்த்தகத்தின் இடைநிறுத்தம் மற்றும் வணிகத்தின் இடைநிறுத்தம் என்பவற்றிலான அறிவித்தல்கள்

கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் 2006 இன் 06 ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 15 (3) இன் பிரகாரம் வழங்கப்பட்ட, வணிகங்கள் மற்றும் சில தனிநபர்கள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களின் நடவடிக்கைகளிலான சில இடைநிறுத்தல்களை இலங்கை மத்திய வங்கி இ.பி.ப.ஆ. இற்கு அறிவித்தது. இ.பி.ப.ஆ. கொழும்பு மேல் நீதிமன்றத்தின் தீர்மானங்களை கொ.ப.ப. மற்றும் ம.வை.தி. இற்கு அவசியமான நடவடிக்கைகளுக்காக அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தது.

2019-2023 காலப்பகுதியில் இலங்கையில் லஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்பு போராட்டத்திற்கான (CIABOC) தேசிய செயற்பாடு திட்டத்தின் மதிப்பீடு

CIABOC இனால் வேண்டப்பட்டவாறு, 2019-2023 காலப்பகுதிக்கான செயற்திட்டத்தின் கீழ் இ.பி.ப.ஆ. இற்கு ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளின் அமுலாக்கத்தின் நிலைமையினை இ.பி.ப.ஆ. அறிவித்தது.

2019-2023 காலப்பகுதியில் இலங்கையில் லஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்பு போராட்டத்திற்கான (CIABOC) தேசிய செயற்பாடு திட்டத்தின் மதிப்பீடு

CIABOC இனால் வேண்டப்பட்டவாறு, 2019-2023 காலப்பகுதிக்கான செயற்திட்டத்தின் கீழ் இ.பி.ப.ஆ. இற்கு ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளின் அமுலாக்கத்தின் நிலைமையினை இ.பி.ப.ஆ. அறிவித்தது.

மேற்பார்வை மற்றும் இணக்கப்பாடு பட்டியலிடப்பட்ட கம்பனிகள்

அனைத்து பட்டியலிடப்பட்ட கம்பனிகளும் நிதியாண்டு நிறைவடைந்து 5 மாதங்களினுள் அவர்களது பங்குதாரர்களுக்கும் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கும் (கொ.ப.ப.) ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்கவேண்டியுள்ளது.

இ.பி.ப.ஆ. இன் கூட்டாண்மை அலுவல்கள் பிரிவானது பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் ஆண்டறிக்கைகளை மீளாய்வு செய்து இணக்கப்பாடு காணப்படாத விடயங்கள் தொடர்பாக கம்பனிகளுக்கு அறிவிக்கின்றது. இந்த முயற்சியில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் மறுமொழிகள் மிகவும் சாத்தியமாகக் காணப்படுகின்றன.

இந்த செயன்முறையின் குறிக்கோள் பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் நிதியியல் அறிக்கையிடல் மற்றும் தகவல் பரப்புதல் ஆகியவற்றின் தரத்தினை மேம்படுத்துவதாகும். பட்டியலிடப்பட்ட கம்பனிகள் பொருண்மையான தகவல்களை உடனடியாக பரப்பவேண்டும் என்பதுடன் இது பிணையங்கள் சந்தையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை நிறுவுவதற்கும் மற்றும் தொழில்சார் நியமங்கள் பராமரிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குமாகும்..

ஆண்டறிக்கைகளை மீளாய்வு செய்யும்போது இப்பிரிவானது கீழ்காணும் விடயங்களில் முன்னிறுத்தம் செய்தது:

- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள்
- பெருநிறுவன ஆளுகை நடைமுறைகள்
- நிதியியல் சிறப்பம்சங்கள்
- தலைவரது அறிக்கை
- பணிப்பாளர்களது அறிக்கை
- சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை
- பங்குதாரர் மற்றும் முதலீட்டாளர் தகவல்கள்
- நிதியியல் தரவுகள்
- சபை உப குழுக்களின் அறிக்கைகள்

இச்செயன்முறையானது கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள் மற்றும் பொருத்தமான ஒழுங்குவிதிகளுக்கமைவாக ஆண்டறிக்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களது தயாரிப்பு மற்றும் முன்னிலைப்படுத்தல் ஆகியவற்றில் கம்பனிகளில் சுமத்தப்பட்டுள்ள கடப்பாடுகள் குறித்த விழிப்பணர்வு மட்டத்தினை தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கு பங்களிப்பு செய்யும்.

இவ்வாண்டின்போது, கூட்டாண்மை அலுவல்கள் பிரிவானது பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் 114 ஆண்டறிக்கை

கூட்டாண்மை அலுவல்கள் அணி

மீளாய்வுகளை நடாத்தியுள்ளது. இணக்கப்பாட்டினை சீர்படுத்தவும் வெளிப்படுத்தல்களை மேம்படுத்தவும் 60 கருத்துக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டதுடன் 38 மீளாய்வுகள் முடிவாக நிறைவுசெய்யப்பட்டன.

மேலாக, இ.பி.ப.ஆ. 10 கடன் மற்றும் 04 உரித்துவ முன்விவரணக்கோவைகளில் மீளாய்வினை நடாத்தியதுடன், நடைமுறையிலுள்ள பங்குதாரர்களிடமிருந்து மேலதிக நிதியினை திரட்டுவதற்கு விண்ணப்பித்துள்ள 19 கம்பனிகளின் பங்குதாரர் சுற்றறிக்கைகளிலும் மீளாய்வினை நடாத்தியது.

பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் வெளிப்படுத்தல்கள் மற்றும் கூட்டாண்மை அலுவல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைமைப்படுத்தல் நடவடிக்கை

இவ்வாண்டின்போது, இ.பி.ப.ஆ. பட்டியலிடப்பட்ட நிறுவனங்களினால் சந்தை அறிவித்தல்களூடாக மேள்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்களை மீளாய்வு செய்ததுடன், 18 சந்தர்ப்பங்கள் தொடர்பாக கொ.ப.ப. இடமிருந்து விளக்கங்கள் கோரப்பட்டன. அத்தகைய விளக்கங்கள் பின்வரும் வெளிப்படுத்தல்கள் தொடர்பானதாகும். (உருவம் 05)

உருவம் 05: பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் வெளிப்படுத்தல்கள் மற்றும் கூட்டாண்மை அலுவல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

விளக்கத்தின் தன்மை	நிகழ்வுகளின் எண்ணிக்கை
ப.பொ.க. அவதானிப்பு பட்டியலில் இரண்டாம் பலகையில் காணப்படும்வேளை பணிப்பாளர்களினால் வர்த்தகம் மேற்கொண்டமை	3
பணிப்பாளர்களது வர்த்தகம் - தாமதமான வெளிப்படுத்தல்	2
பணிப்பாளர்களது வர்த்தகம் - இருட்டடிப்பு காலத்திலான வர்த்தகம் (பட்டியலிடல் விதி 8.6)	3
தாமதமான வெளிப்படுத்தல்கள்	
பணிப்பாளர் சபையிலான மாற்றங்கள்	8
ஏனைய உடனடி கூட்டாண்மை வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள்	2

ஏனைய முறைமைப்படுத்துபவர்களுக்கு /அரசாங்க நிருவனங்களுக்கு குறிப்பிடப்பட்ட விடயங்கள்

கீழை குறிப்பிட்டவாறு பல விடயங்கள் பிரயோகிக்கத்தக்க நியமங்கள் /ஒழுங்குவிதிகளுடன் அங்கீகாரங்கள், அளவீடு மற்றும் வெளிப்படுத்தல் என்பவற்றில் விளக்கங்களை கோருவதற்காக ஏனைய முறைமைப்படுத்துபவர்கள்/கொ.ப.ப. /அரசாங்க நிருவனங்களுக்ளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. (உருவம் 06)

உருவம் 06: ஏனைய முறைமைப்படுத்துபவர்கள் /அரசாங்க நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட விடயங்கள்

முறைமைப்படுத்துபவ	கம்பனிகளின் எண்ணிக்கை	தொடர்புடைய விடயம் மற்றும் விளைவு
SLAASMB	01	ஹெல எப்பரல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி
இ.ம.வ. இன் நி.நு.அ.	03	• ஏசியா கெப்பிட்டல் பிஎல்சி • ஹெல எப்பரல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி • W M மெண்டிஸ் கம்பனியினால் கொள்வனவு செய்யப்பட NDB பேங்க் பிஎல்சி பங்குகள்

சந்தை நிறுவனங்கள் மற்றும் சந்தை இடையீட்டாளர்களின் மேற்பார்வை

இ.பி.ப.ஆ. இன் நோக்கெல்லையானது முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களுக்கு உரிமமளித்தல், உரிமங்களை புதுப்பித்தல் மற்றும் நடவடிக்கைகளை கண்காணித்தல் என்பவற்றை தளத்தில் மற்றும் தளத்திற்கப்பாலான மேற்பார்வையூடாக மேற்கொவதனை உள்ளடக்குகின்றது. இந்த

மேற்பார்வை அணி

நடவடிக்கைகள் சந்தை நிறுவனங்கள் மற்றும் சந்தை இடையீட்டாளர்கள் ஆகிய இருவரும் 2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளுடனும் அத்துடன் அதன் கீழ் சட்டமாக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாடு காண்பதனை உறுதிசெய்கின்றது.

இவ்வாண்டின்போது, முறைமைப்படுத்தல் கட்டமைப்பு மற்றும் செயலாற்றல் வினைத்திறன் என்பவற்றை கணிசமானளவு பலப்படுத்திய பல மைல் கற்களை இ.பி.ப.ஆ. அடைந்தது. சந்தை இடையீட்டாளர்களின் மீளெழுச்சியினை பலப்படுத்துவதற்கு, இ.பி.ப.ஆ. அத்தகைய நிறுவனங்களுக்கு பொருத்தமான ஆகக் குறைந்த பங்குதாரர் நிதியங்கள் மற்றும் திரவத்தன்மை தேவைப்பாடுகள் உள்ளடங்கலான ஆகக்குறைந்த நிதியியல் தேவைப்பாடுகளை திருத்தியமைத்தது.

மேலாக, இ.பி.ப.ஆ. பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் (AML/CFT) தொடர்பாக ஒரு பிரத்தியேகமான அலகினை முன்னெடுத்து நிறுவியது. இது குறுக்குச் செயற்பாட்டு பிரதிநிதித்துவத்துடன் இ.பி.ப.ஆ. இன் AML/CFT செயற்திட்டத்தினை செயலாற்றுவதற்கு மற்றும் தேசிய பரஸ்பர மதிப்பீட்டு வசதியளிப்பதற்கும் ஆகும். AML/CFT அலகானது 2026 இல் திட்டமிடப்பட்டுள்ள தேசிய பரஸ்பர மதிப்பீட்டின்போது எதிர்பார்க்கப்படும் விளைவுகளை அடைவதற்காக இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் நுண்ணறிவு அலகுடன் (FIU) கூட்டிணையும். மேலும், கொ.ப.ப., FIU, கொழும்பு பங்குத் தரகர்கள் சங்கம் மற்றும் தரகர் பின்புலக் காரியாலய அமைப்புமுறை வழங்குனர்களுடன் ஒருங்கிணைந்து இ.பி.ப.ஆ. ஒரு கூட்டு மன்றத்தினை முன்னெடுத்தது. இது பங்குத்தரகர்களுக்கு ஒரு பொதுவான ஒப்புதல் பரிசோதனைக் கருவி மற்றும் கொடுக்கல் வாங்கல் கண்காணிப்பு அமைப்புமுறை என்பவற்றை அமுலாக்கும் நோக்கத்தினைக் கொண்டதுடன், இது FIU தேவைப்பாடுகளுடன் துறையின் இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதற்காகும்.

மே 2022 இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கூட்டு முதலீட்டு கோவையினைத் (CIS) தொடர்ந்து இ.பி.ப.ஆ. மீளாய்வாண்டின்போது பல பணிப்புரைகளை வழங்கியது. இவை திரவத்தன்மை தேவைப்பாடுகள், கடன்பெறுதல் வரையறைகள், முதலீட்டு வரையறைகள், மாதாந்த அறிக்கைகள் உள்ளடங்கலான முகாமைத்துவக் கம்பனிகள் தொடர்பான விசேட தேவைப்பாடுகள் மற்றும் ஒரு CIS இனை ஆரம்பிப்பதற்கான நேர அட்டவணை என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. மேலாக, CIS இன் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு இணக்கப்பாட்டு பொறுப்புக்கள் குறிப்பிடப்பட்டு

மூலோபாய இலக்கு 1

ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலினை நிறுவிப் பராமரித்தல்

ஒரு பணிப்புரை வழங்கப்பட்டதுடன், இது துறையானது வலுவான முறைமைப்படுத்தல் நியமங்களை கடைப்பிடிப்பதனை உறுதிசெய்வதற்காகும்.

மீளாய்வாண்டின்போது இ.பி.ப.ஆ. இற்கான ஒரு முக்கிய மைல்கல்லாக 16 வருடங்களின் பின்னர் சந்தை நிறுவனங்கள் மற்றும் சந்தை இடையீட்டாளர்களது உரிமமளித்தல் கட்டணங்களது வெற்றிகரமான திருத்தம் காணப்பட்டது கட்டண கட்டமைப்பானது நடைமுறையிலுள்ள கட்டமைப்பினை மீளாய்வு செய்ததன் பின்னர் திருத்தியமைக்கப்பட்டது. இது பொதுவான மூலதனச் சந்தையின் வினைத்திறனான கண்காணிப்பு மற்றும் அபிவிருத்திக்கான போதியளவு வருமானத்தினை உருவாக்கும் தேவையினையும் கருத்திற்கொண்டது. சந்தை நிறுவனங்கள் மற்றும் சந்தை இடையீட்டாளர்களுக்கு 2007 இலிருந்தும் யுனிட் ட்ரஸ்ட்கள் / CIS களுக்கு 1991 இலிருந்தும் கட்டணக் கட்டமைப்பானது திருத்தியமைக்கப்படவில்லை. நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைள் அமைச்சரின் அங்கீகாரத்தின் பின்னர் 1 பெப்ரவரி 2024 முதல் கட்டணக் கட்டமைப்பானது திருத்தியமைக்கப்பட்டது.

மேலாக, இ.பி.ப.ஆ., வாடிக்கையாளர்களுடன் ஈடுபடும் சந்தை இடையீட்டாளர்களின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் தகைமை மற்றும் பொருத்தத்தில் தகுதிநீக்கங்களை அமுல்படுத்துவதற்கான கட்டமைப்பினை தொடர்ந்தும் கடைப்பிடித்தது. இது அவர்கள் அவசியமான தொழில்துறைமைத்திறன் மற்றும் நேர்மை நியமங்களை சந்திப்பதனை உறுதிசெய்வதற்காகும். மேலும், துறையினுள் பொறுப்புக்கூறல் மற்றும் இணக்கப்பாட்டினை மீளுறுதி செய்யும் நோக்கத்திற்காக இ.பி.ப.ஆ. சந்தை இடையீட்டாளர்களது மீறல்கள் மற்றும் /அல்லது இணக்கப்பாடின்மைகளுக்கான வலியுறுத்தல் செயற்பாடுகளை அமுலாக்குவதற்கான செயன்முறையினை இ.பி.ப.ஆ. அறிமுகப்படுத்தியது.

இ.பி.ப.ஆ. இன் மேற்பார்வை மற்றும் செயற்திறன் மேம்படுத்துவதற்கு ஒரு தொழினுட்ப தீர்வினை கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு கடுமையான கொள்முதல் செயன்மறையினை தொடர்ந்து இ.பி.ப.ஆ. முகில் அடிப்படையிலான, மென்பொருள் ஒரு சேவையாக (SaaS) சுப் டெக் தீர்வினை அமுலாக்குவதற்கான ஒப்பந்தத்தினை மிகவும் பொருத்தமான விலைகேட்பவரை இ.பி.ப.ஆ. வெற்றிகரமாக இனங்கண்டது.

பங்குத் தரகர்கள்

மீளாய்வாண்டின்போது, இ.பி.ப.ஆ. இன் மேற்பார்வை நடவடிக்கைகள், இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகள், பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாட்டின் நிலையினை மதிப்பிடுவதற்காக பங்குத்தரகர்களின் நடத்தையினை கண்காணித்தலில் மேற்கொள்ளப்பட்டன. பங்குத்தரகர்களின் மேற்பார்வையானது ஒரு இடர் அடிப்படையிலான அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டதுடன், இங்கு இடரானது நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத காரணிகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது.

தளத்திற்கப்பாலான மேற்பார்வையானது பிரதானமாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள், கணக்காய்வு செய்யப்படாத மாதாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் பங்குத்தரகர்களினால் இரண்டு வாரங்களுக்கொருமுறை சமர்ப்பிக்கப்படும் கடன் பட்டோருக்கான வெளிப்பாட்டு அறிக்கைகள் என்பற்றை மீளாய்வு செய்வதனை உள்ளடக்கியிருந்தன.

தளத்திற்கப்பாலான மேற்பார்கையின் ஒரு பாகமாக, இ.பி.ப.ஆ., பங்குத்தரகர்களின் இணக்கப்பாடின்மை தொடர்பானவை மற்றும் அத்தகைய இணக்கப்பாடின்மை தொடர்பாக கொ.ப.ப. இனால் மேற்கொள்ளப்பட்ட முறைமைப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பாக கொ.ப.ப. இனால் மாதாந்தம் சமர்ப்பிக்கப்படும் அட்டவணைகளை மீளாய்வு செய்தது. இது பொருத்தமான விதிகளுடன் இணக்கப்பாடின்மைக்கு கொ.ப.ப. உடனடி முறைமைப்படுத்தல் நடவடிக்கைகளை எடுத்துள்ளதா என்பதை இ.பி.ப.ஆ. மதிப்பிடுவதனை இயலுமையாக்குவதற்காகும்.

மேலாக, இ.பி.ப.ஆ. 2006 இன் 06 ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் அதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாட்டின் நிலைமையினை தீர்மானிப்பதற்கு இ.ம.வ. இன் FIU இலிருந்தான பிரதிநிதிகளுடன் சேர்ந்து கூட்டு பரிசீலனைகளை நடாத்தியது. இவ்வாண்டின்போது அத்தகைய நான்கு பரிசீலனைகள் நடாத்தப்பட்டன. இவ்வாண்டின்போது FIU இனால் இ.பி.ப.ஆ., பங்குத்தரகர்களின் பி.நி.அதிகாரிகள் மற்றும் இணக்கப்பாட்டு அதிகாரிகள் ஆகியோருக்கு பங்குத்தரகு நிறுவனங்களுள் ஒப்புதல் பரிசோதனை கருவின் பயன்பாடு மற்றும் அமுலாக்கம் குறித்து ஒரு செயல்விளக்கம் ஒழுங்குசெய்யப்பட்டது.

மீளாய்வாண்டின்போது, துறைசார் செயற்திறனானது 2023 உடன் ஒப்பிடும்போது பங்குத்தரகர்களின் மொத்த புரள்வானது 33% ஆல் அதிகரித்துள்ளதை குறிப்பிட்டது. துறையின் இலாபகரத்தன்மையானது 38% அதிகரிப்பினை காண்பித்ததுடன் 2024 இல் வரிக்கு பிந்திய இலாபமானது ரூபா 1,678 மில்லியனாக பதிவுசெய்யப்பட்டவேளை 2023 இல் இது ரூபா 1,216 மில்லியனாக காணப்பட்டது. பங்குத்தரகுத் துறையின் செயற்திறனிலான ஒப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (உருவம் 07:)

உருவம் 07: 2024 இல் காணப்பட்ட பங்குத்தரகர்களின் சிறப்பம்சங்கள்

	2024 (ரூ. ‘000)	2023 (ரூ. ‘000)	மாற்றம் %
புரள்வு	6,156,193	4,635,144	33
தேறிய தரகு	5,557,802	4,166,262	33
ஏனைய வருமானம்	2,725,033	3,846,382	(29)
செயற்பாட்டு இலாபம்/நட்டம்	2,847,469	2,787,191	2
வரிக்கு முந்திய தேறிய இலாபம்/நட்டம்	2,272,491	1,838,886	24
வரிக்கு பிந்திய தேறிய இலாபம்/நட்டம்	1,678,965	1,216,551	38
மொத்த சொத்துக்கள் *	44,890,398	24,280,733	85
மொத்த பொறுப்புக்கள் *	29,840,971	11,432,918	161
பங்குதாரர் நிதியங்கள் *	15,049,426	12,847,816	17

*டிசம்பர் 31 இல் உள்ளவாறானது

மூலம்: பங்குத்தரகர்களால் கொ.ப.ப. மற்றும் இ.பி.ப,ஆ. இற்கு சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்படாத நிதிக் கூற்றுக்கள

முகாமைத்துவக் கம்பனிகளும் கூட்டு முதலீட்டுத் திட்டங்களும்

2024 இல் இ.பி.ப.ஆ. தொடர்ச்சியான இணக்கப்பாடு மற்றும் ஒரு முழுவதுமான இடர் மதிப்பீற்கு வசதியளிப்பதனை உறுதிசெய்வதற்காக இடர் அடிப்படையான மேற்பார்கை அணுகுமுறையினை இ.பி.ப.ஆ. பராமரித்தது. இது முதலீட்டாளர் நலன்களை பாதுகாத்தல் மற்றும் துறையினுள் இடர்களை தணித்தல் என்பவற்றில் முன்னிறுத்தம் காணப்பட்டது.

முகாமைத்துவக் கம்பனிகளின் தளத்திலான மேற்பார்வையில் இ.பி.ப.ஆ. இடர் அடிப்படையிலான அணுகுமுறையினை மீளுறுதிசெய்தது. இது விவேகம், செயற்பாடு தொடர்பான முக்கிய இடர்களை மற்றும் இடர் முகாமைத்துவக் கொள்கைகளை மதிப்பீடு செய்தது. இந்த மதிப்பீடானது நிதியியல் பலம், உள்ளகக் கட்டுப்பாட்டு போதுமை, பொருத்தமான முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் ஆளுகை நியமங்களுடனான இணக்கப்பாடு என்பவற்றை மீளாய்வு செய்யும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

தளத்திற்கப்பாலான மேற்பார்வையானது முகாமைத்துவக் கம்பனிகளின் ஸ்திரத்தன்மையினை சரிபார்க்கவும் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் உரிய இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதற்காகவும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் இணக்கப்பாட்டு அறிக்கைகளை பகுப்பாய்வு செய்து மேம்படுத்தப்பட்டது. 2024 ஆம் ஆண்டின்போது, விவேகமான நியமங்களை மேலும் பலப்படுத்துவதற்காக, இ.பி.ப.ஆ. முகாமைத்துவக் கம்பனிகளுக்கும் CIS இற்கும் பொருத்தமான ஆகக்குறைந்த நிதியியல் தேவைப்பாடுகளை திருத்தியமைத்தது.

மேலாக, அலகுடைமையாளர்களது நலன்களை பாதுகாப்பதற்காக பொருத்தமான விதிகளினால் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த எண்ணிக்கையிலான அலகுடையமையாளர்கள், முதலீடுகளிலான வரையறைகள் மற்றும் திரவத்தன்மை தேவைப்பாடு உள்ளடங்கலான முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளை கடைப்பிடிப்பதனை உறுதிசெய்வதற்காக திட்டங்களின் மாதாந்த அறிக்கைகளை இ.பி.ப.ஆ. நெருக்கமாக கண்காணித்தது.

முறைமைப்படுத்தல் நியமங்களை பலப்படுத்துவதற்கு, இ.பி.ப.ஆ. CIS களுக்கு மேலதிக முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளை அறிமுகப்படுத்தியது. இது ஒரு பணிப்புரையின் ஊடாக முதலீடுகளிலான வரையறைகளை திருத்தியமைத்தல், கடன்பெறுதல் வரையறையினை குறிப்பிடுதல் மற்றும் திரவத்தன்மை தேவைப்பாடு என்பவையாகும். CIS களின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் பொறுப்புக்கள் விரிவாக்கப்பட்டு இ.பி.ப.ஆ. இற்கு ஒரு இணக்கப்பாட்டு அறிக்கையினை சமர்ப்பிப்பதனை உள்ளடக்குவதுடன் இதற்கு ஒரு பணிப்புரையினூடாக ஒரு தரப்படுத்தப்பட்ட அறிக்கையிடல் படிவம் வழங்கப்பட்டது.

இ.பி.ப.ஆ. CIS களின் முகாமைத்துவக் கம்பனிகள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுடன் தொடர்ச்சியான தொடர்பாடலை பராமரிப்பதுடன், இது திட்டங்களின் நிதியியல் ஸ்திரத்தன்மையினை மதிப்பிடுவதற்கும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டினை கண்காணிப்பதற்கும் ஆகும். முதலீட்டு வரையறைகள் மற்றும் திரவத்தன்மை தேவைப்பாடுகளிலான மீறல்கள் இனங்காணப்பட்டு ஆண்டின்போது தெரிவிக்கப்பட்டன. உரிய முகாமைத்துவக் கம்பனிகள் திருத்தல் நடவடிக்கைகளை எடுக்குமாறும் இணக்கப்பாட்டினை உறுதிசெய்து சாத்தியமான இடர்களை தணிக்குமாறும் இ.பி.ப.ஆ. இனால் வேண்டப்பட்டன. பொருத்தமான முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளை கடைப்பிடிப்பதனை உறுதிசெய்வதற்கு இந்த முகாமைத்துவக் கம்பனிகளுக்கு இ.பி.ப.ஆ. தொடர்ச்சியான உரியநேரத்திலான வழிகாட்டல்களை வழங்கியது.

இவ்வாண்டின்போது, ஆறு புதிய திட்டங்கள் இ.பி.ப.ஆ. இனால் அங்கீகரிக்கப்பட்டதுடன், இவற்றுள் இரண்டு மூடிய நிதியங்கள் காணப்படுவதுடன் அவற்றின் அலகுகள் கொ.ப.ப. இல் பட்டியற்படுத்தப்படும் (உருவம் 08, 09:)

உருவம் 08: திட்டங்களின் ஒட்டுமொத்த நிலை

	31.12.2024 இல உள்ளவாறானது	31.12.2023 இல உள்ளவாறானது	% மாற்றம்
அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை	**90**	84	7.14
யுனிட் ட்ரஸ்களின் தேறிய சொத்தின் பெறுமதி (அண்ணளவாக ரூ. பில்லியனில்)	**544.83**	407.74	33.62
அலகுடைமையாளர்களின் எண்ணிக்கை	**114,898**	93,450	22.95
வழங்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை (அண்ணளவாக மில்லியனில்)	**30,261**	13,371	126.32
உரித்துவத்திலான முதலீடு (அண்ணளவாக ரூ. மில்லியன்)	**30,956**	18,506	67.28
அரசாங்கப் பிணையங்களிலான முதலீடு (அண்ணளவாக ரூ. மில்லியன்)	**380,217**	315,238	20.61
ஏனைய கருவிகளிலான முதலீடு (அண்ணளவாக ரூ. மில்லியன்)	**129,128**	70,175	84.01

*வணிகத் தாள்கள், நம்பிக்கைச் சான்றிதழ்கள், தொகுதிக்கடன்கள், வங்கி வைப்புகள் போன்றறன.

உருவம் 09: முகாமைத்துவக் கம்பனிகளின் சந்தைப் பங்களிப்பு



மூலோபாய இலக்கு 1

ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலினை நிறுவிப் பராமரித்தல்

ஏனைய சந்தை இடையீட்டாளர்கள்

இ.பி.ப.ஆ. ஏனைய சந்தை இடையீட்டாளர்களான எல்லைக்கடன் வழங்குநர்கள், முதலீட்டு முகாமையாளர்கள், கடன் தரப்படுத்தல் முகவர்கள், ஒப்புரவாளர்கள் மற்றும் கூட்டாண்மை நிதியளித்தல் ஆலோசகர்களிலும் முறைமைப்படுத்தல் மேற்பார்வையினை மேற்கொள்கின்றது. இந்த மேற்பார்வையானது இந்நிறுவனங்கள் அனைத்தும் இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கிச் செயலாற்றுவதனை உறுதிப்படுத்துவதற்காகும். சந்தை இடையீட்டாளர்கள் தொடர்பான இடர்களை இனங்காண்பதற்கு, கண்காணிப்பதற்கு, தணிப்பதற்கு மற்றும் முகாமைப்படுத்துவதற்கு, தளத்திலான மற்றும் தளத்திற்கப்பாலான மேற்பார்வையின்போது ஒரு வினைத்திறனான இடர் அடிப்படையான மேற்பார்வை வரம்புறுகை கடைப்பிடிக்கப்பட்டது.

2024 இன் போது இ.பி.ப.ஆ. கூட்டாண்மை நிதியியல் ஆலோசகர்கள் பிரிவில் நான்கு நிறுவனங்களுக்கும் முதலீட்டு முகாமையாளர்கள் பிரிவில் ஒரு நிறுவனத்திற்கு உரிமங்களை வழங்கியது. மேலும், ஒரு பங்கு வர்த்தகரும் ஒரு முதலீட்டு முகாமையாளரும் அவற்றின் செயற்பாடுகளை தொடர்வதற்கு விரும்பாததனால் அவர்களது உரிமங்கள் நிறுத்தப்பட்டன.

பணம் தூய்மையாக்குதல், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் பெருக்க நிதியளித்தலை தடுப்பதற்காக இ.பி.ப.ஆ. இனால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

உலகளாவிய கொள்கை நிறுவியான நிதியியல் செயற் பணிக்குழு (FATF) பணம் தூய்மையாக்குதலுக்கு மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுக்கு எதிரான (AML/CFT) 40 பரிந்துரைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இது உலகளாவிய ரீதியில் பணம் தூய்மையாக்குதல் / பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் ஏனைய தொடர்புடைய தவறுகளுக்கு எதிராக போராடுவதற்காகும். பணம் தூய்மையாக்குவதிலான ஆசிய பசிபிப் குழுவானது FATF இன் பிராந்திய இணைக்கப்பட்ட அங்கமாக செயற்படுவதுடன் பிராந்தியத்தில் FATF இன் பரிந்துரைகளுடன் இணக்கப்பாட்டு மட்டத்தினை கண்காணிக்கின்றது. இலங்கை ஆசிய பசிபிக் குழுவின் ஸ்தாபக அங்கத்தவராகும்.

FATF இனால் நிறுவப்பட்டுள்ள செயல் திட்டத்தின் நோக்கெல்லையினை கருத்திற் கொண்டு, தேசிய ஒருங்கிணைப்புக் குழுவினால் ஒரு கட்டமைப்பு காணப்படுகின்றது. இது நி.நு.அ. இன் AML/CFT கொள்கை வரைதல் அங்கமாகும். AML/CFT நியமங்களை மேம்படுத்துவதற்கு நாட்டில் உள்ள அனைத்து பங்காளிகளதும் கடப்பாடு மற்றும் ஒத்துழைப்பினைக் கொண்டு வருவதற்காகும்.

FATF, சட்டம், நிறுவன கட்டமைப்பு மற்றும் பிராந்திய கண்காணிப்பு அங்கங்களூடாக நாடுகளின் AML/CFT வழிமுறைகளின் பயனுறுதியான அமுலாக்கலினை மதிப்பீடு செய்கின்றது. இலங்கையானது இரண்டு பரஸ்பர மதிப்பீடுகளுக்கு உட்பட்டதுடன், மூன்றாவது மதிப்பீடானது மார்ச் 2026 இல் இடம்பெறுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. பரஸ்பர மதிப்பீட்டின்போது, இலங்கை நிதியியல் செயற் பணிக்குழுவினது (FATF - AML/ CFT இல் உலகளாவிய கொள்கை வடிவமைப்பாளர்) 40 பரிந்துரைகளுடன் அதன் இணக்கப்பாட்டினை மற்றும் 11 உடனடியான விளைவுகளின் அவற்றின் பயனுறுதித்தன்மையினை வெளிப்படுத்த வேண்டியுள்ளது.

பொருளாதாரத்தின் பிணையங்கள் துறையின் ML/FT இடர்களை விளித்துரைப்பதற்கான 2006 இன் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டது) ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு பொருத்தமான மேற்பார்வை அதிகாரசபையாக இ.பி.ப.ஆ., நி.நு.அ. இன் ஒரு பங்காளியாக இருப்பதன் முக்கியத்துவத்தினை புரிந்துள்ளது.

இது தொடர்பில் FIU இனால் இ.பி.ப.ஆ. இற்கு அறிவிக்கப்பட்ட செயற்திட்டத்தின் எதிர்பார்த்த விளைவுகளை அடைவதற்காக இ.பி.ப.ஆ. தேசிய ஒருங்கிணைப்புக் குழு மற்றும் இ.ம.வ. இன் நி.நு.அ. உடன் நெருங்கிச் செயலாற்றுகின்றது. மேலும், AML/CFT/PF விடயங்களில் பிணையங்கள் சந்தை தொடர்பான இலங்கையின் 2021/2022 தேசிய பணம் தூய்மையாக்குதல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர் மதிப்பீட்டில் இனங்காணப்பட்ட குறைபாடுகள் / இடைவெளிகளை விளித்துரைப்பதில் இ.பி.ப.ஆ. முன்னிறுத்தம் செய்து முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களுக்கு FATF இன் 40 பரிந்துரைகளை அடைவதில் வழிகாட்டலை வழங்கும்.

FIU/CBSL உடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் ஒரு தொடரான ஒருங்கிணைத்த முன்னெடுப்புகளை இ.பி.ப.ஆ. அமுலாக்கியுள்ளது. இது அனைத்து பங்குத் தரகர்களிடையேயும் FIU அவர்களால் விருத்தி செய்யப்பட்ட ஐக்கிய நாடுகள் கொடுக்கல் வாங்கல் பரிசீலனை கருவி பகிரப்படுவதற்கு இட்டுச்சென்றது. கொடுக்கல் வாங்கல் கண்காணிப்பு முறைமைகளுக்கான வழிகாட்டல் பொருட்களது வழங்கலுக்கு இ.பி.ப.ஆ. வசதியளித்தது. இவை பெருமளவிலான பங்குத்தரகர்களினால் அமுலாக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் ஏனையோர் அவர்களது சொந்த முறைமைகளை தொடர்ந்தும் பயன்படுத்துகின்றார்கள்.

2022 இல் அனைத்து சந்தை நிறுவனங்களுக்கும் அனைத்து சந்தை இடையீட்டாளர்களுக்கும் வழங்கப்பட்ட இ.பி.ப.ஆ. விதிகள், இ.ம.வ. இன் நி.நு.அ. இனால் காலா காலம் குறிப்பிடப்படும் உங்களது வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளுங்கள் (KYC) வாடிக்கையாளர் மற்றும் ஆய்வு (CDD) செயன்முறைகளை கடைப்பிடிப்பதற்கு கடப்பாடுடையனவாகும். AML/CFT விடயங்கள் தொடர்பான இணக்கப்பாட்டு அறிக்கையின் ஒரு பாகமாக அனைத்து சந்தை நிறுவனங்களும் அனைத்து சந்தை இடையீட்டாளர்களும் பின்வரும் தகவல்களை மாதாந்த மற்றும் காலாண்டு அடிப்படையில் சமர்ப்பித்து உறுதிசெய்தல் வேண்டும் என இ.பி.ப.ஆ. பணித்துள்ளது:

- ☐ சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கைகளின் தகவல்கள் (ஏதேனும் இருப்பின்);
- ☐ உருவாக்கப்பட்ட எண்ணிக்கை; மற்றும்
- ☐ ஏதேனும் விளைவுகள் (ஏதேனும் இருப்பின்)

இ.பி.ப.ஆ. நி.நு.அ. உடன் தொடர்ச்சியாக தன்னிலையான மற்றும் தொடர்கின்ற ஈடுபாட்டினை பராமரிக்கின்றது. 2024 இல் ஒரு புலனாய்வினைத் தொடர்ந்து இ.பி.ப.ஆ. ஒரு சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் அறிக்கையினை நி.நு.அ. இற்கு பரிந்துரைத்தவேளை, அதே காலப்பகுதியின் இ.பி.ப.ஆ. இன் கூட்டாண்மை அலுவல்கள் பிரிவானது இரண்டு மேலதிக விடயங்களை பரிந்துரைத்தது.

மேலாக, இ.பி.ப.ஆ. AML/CFT/PF தொடர்பான சில விழிப்பணர்வு அமர்வுகளை முன்னெடுத்தது. அத்தகைய ஒரு துறைசார் விழிப்புணர்வு அமர்வானது ஆகஸ்ட் 2024 இல் பணம் தூய்மையாக்கலுக்கு எதிர்ப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுக்கு எதிர்ப்பில் நடாத்தப்பட்டது. குறிப்பிட்ட திட்டத்திற்கு 51 துறைசார் பிரதிநிதிகளையும் 50 இ.பி.ப.ஆ. பணியாட்களையும் ஒன்றாகக் கொண்டுவந்தது. இதற்கும் மேலாக, நி.நு.அ. இனால் நடாத்தப்பட்ட பணியாட்கள் விழிப்புணர்வு திட்டத்தையும் இ.பி.ப.ஆ. முன்னெடுத்தது.

சந்தை தொழில்வல்லுநர்களின் தொழில்சார் நியமங்கள் மற்றும் நடத்தையினை மேம்படுத்துதல்

இலங்கையின் மூலதனச் சந்தைக்கு உரிமமளித்தல் முறையின் ஒரு பாகமாக தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி (தொ.தொ.அ.) திட்டங்களை இ.பி.ப.ஆ. விருத்திசெய்து நிர்வகிக்கின்றது. மேற்குறிப்பிட்டதிற்கும் மேலாக, இ.பி.ப.ஆ. பொது மக்களுக்கு முதலீடு செய்வதில் அடிப்படை கருத்தியல் மற்றும் நடைமுறை அம்சங்களை அறிவிக்கும் கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களையும் வழங்குகின்றது. (உருவம்: 10)

உருவம் 10: மூலதனச் சந்தை தகைமைக் கட்டமைப்பு



மூலோபாய இலக்கு 1

ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலினை நிறுவிப் பராமரித்தல்

மீளாய்வாண்டின்போது இ.பி.ப.ஆ. மூலதனச் சந்தை தகைமை வரம்புறுகையினை தொடர்ந்தும் அமுல்படுத்தியதுடன், இது முதலீட்டு ஆலோசகர்களுக்கு ஆகக் குறைந்த மட்டத்திலான திறமை மற்றும் தகுதியினை வழங்கும் நோக்கத்திலாகும் என்பதுடன், பங்குத்தரகுத் துறையின் முதலீட்டு ஆலோசகர்களுக்கு ஒரு தரமான நியமத்தினை வழங்குவதற்கு சேவையாற்றுகின்றது. குறித்த வரம்புறுகையானது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சொத்து வகுப்புக்களுக்கு தனித்தனியான சான்றளிப்புகளை சான்றளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர்களுக்கு வழங்குகின்றது, அதாவது, உரித்துவப் பிணையங்கள், கடன் பிணையங்கள், மற்றும் கூட்டு முதலீட்டுத் திட்டங்கள்.

இத் தனித்தனியான சான்றளிப்புகள் ஒவ்வொன்றும், முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் பதிவீடு செய்யப்பட்ட முதலீட்டு ஆலோசகர்களுக்கு (ப.மு.ஆ,) தகைமைகளை வழங்குவதுடன் இது ஒரு உச்சநிலை தகைமை என்பதுடன் பிணையங்கள் துறையிலுள்ள அனைத்து வகையான சொத்துக்களையும் உள்ளடக்கும்.

பின்வரும் அட்டவணையானது ஒவ்வொரு சொத்து வகைக்குமான தனித்தனியான சான்றளிப்புகளையும் அதற்கேற்ப இ.பி.ப.ஆ. இனால் வழங்கப்படும் உரிமங்களையும் எடுத்துக்காட்டுகின்றது. (உருவம்: 11)

உருவம் 11: ஒவ்வொரு சொத்து வகுப்பிற்குமான சான்றளிப்புகள் மற்றும் அதற்குரிய உரிமங்கள்

தொடர்	தொடரின் பெயர்	சான்றளிப்பின் மட்டமும் உரிமமும்				
		உரித்துவம்	கடன்	மூலாதாரங்கள்	கூட்டு முதலீட்டு திட்டங்கள்	மூலதனச் சந்தைகள்
தொடர் 1	பிணையங்கள் சந்தைகளும் கருவிகளும்	●	●	●	●	●
தொடர் 2	உரித்துவப் பிணையங்கள்	●				●
தொடர் 3	கடன் பிணையங்கள்		●			●
தொடர் 4	மூலாதாரங்கள்			●		●
தொடர் 5	கூட்டு முதலீட்டுத் திட்டங்கள்				●	●
தொடர் 6	நிதியியல் திட்டமிடல், ஆலோசனை மற்றும் சந்தைப்படுத்தல்	●	●	●	●	●
தொடர் 7	பிணையங்கள் முறைமைப்படுத்தல் மற்றும் நெறிமுறைகள்	●	●	●	●	●
	சான்றளிப்பு	உரித்துவப் பிணையங்களில் சான்றிதழ் (CES)	கடன் பிணையங்களில் சான்றிதழ் (CDS)	மூலாதாரப் பிணையங்களில் சான்றிதழ் (CDvS)	கூட்டு முதலீட்டுத் திட்டங்களில் சான்றிதழ் (CUT / CCIS)	மூலதனச் சந்தையில் சான்றிதழ் (CCM)
	பொருத்தமான துறைசார் அனுபவம்	6 மாதங்கள்	6 மாதங்கள்	6 மாதங்கள்	6 மாதங்கள்	1 வருடம்
	நேர்முகத்தேர்வுப் பரீட்சை	தேவையானது	தேவையானது	தேவையானது	தேவையானது	தேவையானது
	துறைசார் பதவிப்பெயர்	சான்றளிக்கப்பட்ட உரித்துவப் பிணையங்கள் ஆலோசகா (CESA)	சான்றளிக்கப்பட்ட கடன் பிணையங்கள் ஆலோசகா (CDSA)	சான்றளிக்கப்பட்ட மூலாதாரப் பிணையங்கள் ஆலோசகர் (CDvSA)	சான்றளிக்கப்பட்ட கூட்டு முதலீட்டுத் திட்ட ஆலொசகர் (CCISA)	பதிவுசெய்யப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (RIA)
	தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி	வருடாந்தம் நான்கு CPD வரவுகள்				

தொற்றினாலும் மற்றும் நாட்டின் பொருளாதார நிலைமையில் கொண்டுவரப்பட்ட மாற்றங்களுக்கு பொருந்துவதன் முக்கியத்துவத்தினை இனங்கண்டும் புரிந்துகொண்டும், இ.பி.ப.ஆ. இயங்கலை மேடைகளினூடாகவும் நேருக்கு நேராக அமர்வுகள் மூலமும் தடையற்ற விரிவுரைகளை வழங்குவதனை தொடர்ந்தது. கருத்திலெடுக்கும் காலத்தின்போது இந்த சான்றிதழ் திட்டங்களில் இணையும் மாணவர்களின் எண்ணிக்கையில் ஒரு அதிகரிக்கும் போக்கு தென்படுகின்றது. 2024 இன் போது நடாத்துவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்ட அனைத்து பரீட்சைகளும் நடாத்தப்பட்டு 31 டிசம்பர் 2024 இல் நிறைவு செய்யப்பட்டன.

உரிமமளித்தல் ஆட்சிமுறையின் ஒரு பாகமாக, இ.பி.ப.ஆ., மூலதனச் சந்தையில் ஒரு முதலீட்டு ஆலோசகராக கடமையினை செயலாற்றுவதற்கு கட்டாயமாக்கப்பட்ட சான்றளிப்பு திட்டங்களான பதிவீடளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (ப.மு.ஆ.), சான்றளிக்கப்பட்ட உரித்துவ பிணையங்கள் ஆலோசகர் (சா.உ.பி.ஆ.), மற்றும் சான்றளிக்கப்பட்ட கூட்டு முதலீட்டு திட்டங்கள் ஆகியவற்றை நிர்வகித்தது. மேலும், இ.பி.ப.ஆ. இனால் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு காணாததன் நிமித்தம், இவை சந்தைக்கு சுற்றறிக்கைகள் மற்றும் பணிப்புரைகளுடான அறிவிக்கப்பட்டன, காலாவதியான உரிமங்களையுடைய முதலீட்டு ஆலோசகர்களுக்கு மூ.ச.க. பிரிவு மீண்டும் உரிமமளிப்பதனை தொடர்ந்தது. துறையிலுள்ள உரிமமளித்தல் செயன்முறையின் முக்கிய பங்கினை கருதி, எவ்விதமான இடையூறுமின்றி வருடம் பூராவும் முதலீட்டு ஆலோசகர்களுக்கு தொடர்ச்சியாக வாய்மொழித்தேர்வுகள் நடர்த்தப்பட்டன. இந்த தேர்வுகள் நான்கு சொத்து வகுப்புக்களை உள்ளடக்குகின்றன, அதாவது. உரித்துவப் பிணையங்கள், கடன் பிணையங்கள், கூட்டு முதலீட்டுத் திட்டங்கள், மற்றும் மூலாதாரங்கள் என்பனவாகும். மேலும், ஒரு சொத்து வகுப்பான உரித்துவப் பிணையங்கம் மற்றும் கூட்டு முதலீட்டு திட்ட ஆலோசகர்களுக்காகவும் நடாத்தப்பட்டன.

தொழில்வல்லுநர்கள் மற்றும் சந்தையில் தொழில் புரிபவர்களது அறிவு மற்றும் திறன்களை விருத்திசெய்வதற்காகவும் பராமரிப்பதற்காகவும் இணையவழி கருத்தரங்குகள் ஊடாக தொடர்ச்சியான தொழில்சார் நிகழ்ச்சித்திட்டங்கள் (தொ.தொ.நி.) நடாத்தப்பட்டன.

தொழில்வல்லுனர்கள்

மூலதனச் சந்தையில் சான்றிதழ் (மூ.ச.சா.), உரித்துவப் பிணையங்களில் சான்றிதழ் (உ.பி.சா.), கடன் பிணையங்களில் சான்றிதழ் (க.பி.சா.) மற்றும் கூட்டு முதலீட்டுத் திட்டங்களில் சான்றிதழ் (கூ.மு.தி.சா.)

மேற்குறிப்பிட்ட திட்டங்கள் ஆங்கில மொழியில் நடாத்தப்பட்டதுடன் இவை 2024 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. தொகுதி 27 தொடர்பான விரிவுரைகள் 2023 இல் ஆரம்பிக்கப்பட்டு செப்டம்பர் 2024 இன் போது நிறைவு செய்யப்பட்டன. அத்துடன் தொகுதி 28 ஆகஸ்ட் 2024 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2024 டிசம்பர் வரை விரிவுரைகள் தொடர்ந்தன. அதன் பின்னர், இத்தொகுதியானது செப்டம்பர் 2025 இல் நிறைவடையும். 2024 டிசம்பர் மாதத்தின்போது மார்ச் 2025 இல் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய தொகுதிக்கான விண்ணப்பங்களை நாம் கோரினோம். (உருவம்: 12)

உருவம்12: புள்ளிவிபரச் செயற்திறன்

மாணவர்களின் எண்ணிக்கை						
பதிவுசெய்யப்பட்ட மொத்தம்	பிணையங்கள் சந்தைகள் மற்றும் கருவிகள் தொடரினை நிறைவு செய்தோர்	உரித்துவத் தொடரினை நிறைவு செய்தோர்	கடன் தொடரினை நிறைவு செய்தோர்	கூட்டு முதலீட்டுத் திட்டங்கள் தொடரினை நிறைவு செய்தோர்	நிதித் திட்டமிடல், ஆலொசனை மற்றும் சந்தைப்படுத்தல் தொடரினை நிறைவு செய்தோர்	பிணையங்கள் ஒழுங்குவிதிகள் மற்றும் நெறிமுறைகள் தொடரினை நிறைவு செய்தோர்
169	32	37	20	29	25	25

பதிவீடளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (ப.மு.ஆ.) சான்றளிக்கப்பட்ட உரித்துவப் பிணையங்கள் ஆலோசகர் (சா.உ.பி.ஆ.), சான்றளிக்கப்பட்ட கூட்டு முதலீட்டுத் திட்டங்களது ஆலோசகர் (சா.கூ.மு.தி.ஆ.) மற்றும் மீள் உரிமமளிக்கப்படுதல்

இவ்வாண்டின்போது ப.மு.ஆ. உரிமம், சா.உ.பி.ஆ. உரிமம், சா.கூ.மு.தி.ஆ. உரிமம் மற்றும் வருடாந்த தொ.தொ.அ. திட்டங்களுடன் இணக்கப்பாடு காணாமையினால் காலாவதியான உரிமத்தினையுடைய முதலீட்டு ஆலோசகர்களுக்கு மீள் உரிமமளித்தல் ஆகியவற்றை வேண்டிய மாணவர்களுக்கு உரிமங்களை வழங்குவதற்காக 17 வாய்மொழித் தேர்வுகள் இடம்பெற்றன.

இதன் பிரகாரம், இந்த வாய்மொழித் தேர்வுகளில் மொத்தமாக 72 மாணவர்கள் பங்பற்றியதுடன் சராசரி சித்தி எய்தல் வீதம் 70% ஆக காணப்பட்டது. சித்தி எய்திய மாணவர்களுள், 24 மாணவர்கள் ப.மூ.சா. உரிமத்தினை பெற்றதுடன் இது 48% ஆகும், 14 மாணவர்கள் சா.உ.பி.ஆ. உரிமத்தினை பெற்றதுடன் இது 28% இனை குறிப்பிட்டதுடன், 4 மாணவர்கள் சா.கூ.மு.தி.ஆ. உரிமத்தினை பெற்றதுடன் இது 8% ஆகும். மேலும்

மூலோபாய இலக்கு 1

ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலினை நிறுவிப் பராமரித்தல்

உருவம்13 : வாய்மொழித்தேர்வு பரீட்சைகளது புள்ளிவிபரச் செயற்திறன்

வாய்மொழித்தேர்வு பரீடசை	பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை	சராசரி சித்தி மூ
ப.மு.சப / சா.உ.பி.ஆ. / சா.கூ.மு.தி.ஆ./ மீள் உரிமம் பெற்றவர்கள்	72	70

தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி (தொ.தொ.அ.) திட்டங்கள்

மீளாய்வாண்டின்போது, 5 தொ.தொ.அ. திட்டங்கள், நடைமுறையிலுள்ள பங்குத்தரகு நிறுவனங்களின் முதலீட்டு ஆலோசகர்களுக்கு நடாத்தப்பட்டதுடன் இவை அவர்களை உள்ளூர் மற்றும் உலகளாவிய மூலதனச் சந்தையில் காணப்படுகின்ற நவீன போக்குகளுடன் எந்நேரமும் அணுகி இற்றைப்படுத்திக்கொள்வதனை இயலுமையாக்குகின்றது. இத்திட்டங்கள், பங்குத் தரகு நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள், முகாமைத்துவக் கம்பனிகள், முதலீட்டு ஆலோசகர்கள், பகுப்பாய்வாளர்கள் மற்றும் நிதியில் துறையினுள் வேறு துறையில் இருந்தாலும் உரிமத்தினை தக்கவைத்துக்கொள்ள விரும்பும் தனிநபர்கள் உள்ளடங்கலாக 1100 இற்கும் அதிகமான பங்குபற்றுநர்களை கவர்ந்தது. தொ.தொ.அ. திட்டங்கள் இணையவழி கருத்தரங்காக இயங்கலையிலும் நேருக்கு நேர் அமர்வுகளாகவும் நடாத்தப்பட்டன.

இ.பி.ப.ஆ., நடைமுறையிலுள்ள முதலீட்டு ஆலோசகர்கள் அவர்களது ப.மு.ஆ. நிலையினை அடுத்த வருடத்திற்கு புதுப்பிப்பதற்காக ஒரு வருடத்தில் ஆகக்குறைந்தது 4 தொ.தொ.அ.தி. கருத்தரங்கு வரவுகளை பெற்றிருக்கும் கட்டாயத் தேவையினை பராமரிக்கின்றது. (உருவம்:14)

உருவம் 14: தொ.தொ.அ. திட்டங்களின் சுருக்கம் : ஆண்டு 2024

தொ.தொ.அ. திட்டத்தின் தலைப்பு	பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை
புதிய கருவிகள் முன்னெடுப்புகள்	261
FIT வரம்புறுகையின் கீழ் நாணயக் கொள்கை வழிமுறைகள்	319
மூலதனச் சந்தை ஒழுங்குவிதிகள் கட்டமைப்பு மற்றும் நெறிமுறைகள்	311
இ.பி.ப.ஆ. சட்டத்தின் முக்கியமான அம்சங்கள், பகுதி ஏ இலான முக்கியத்துவத்துடன்	229
கொ.ப.ப. இல் புத்தாக்கமான புதிய கருவிகளின் அறிமுகம்	59

தொழில்சார் நியமங்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகள்

இ.பி.ப.ஆ. சான்றளித்தல் திட்டங்களுக்கு தளர்வான உள்நுழைதல் தேவைப்பாடுகள் மற்றும் விலக்களிப்புகளை வழங்கும் ஒரு பணிப்புரையினை வழங்கியது. இந்த பணிப்புரையானது 1 ஆகஸ்ட் 2024 முதல் அமுலுக்கு வந்ததுடன், ஆர்வமுள்ள மற்றும் நடைமுறையிலுள்ள முதலீட்டு ஆலோசகர்கள் சிறப்பாக சேவையாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்ட புதிய உள்நுழைவு தேவைப்பாடுகளை உள்ளடக்குவதுடன், இவை துறையின் சிறந்த நடைமுறைகள் மற்றும் வெளித்தோன்றும் சந்தை போக்குகளுடன் கல்வி மற்றும் தொழில்சார் தேவைப்பாடுகளை ஒருங்கிணைப்பதன் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

மூ.ச.சா. இற்கான உள்நுழைதல் தேவைப்பாடுகளின் தளர்த்தலானது பரவலான விண்ணப்பதாரிகளது பங்குபற்றலினை எளிமையாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. புதிய உள்நுழைதல் வரன்முறையானது பரந்தளவிலான கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை அங்கீகரிப்பதுடன், அதிகளவு நபர்கள் சான்றளிப்பு திட்டத்தினை தொடர்வதற்கு அனுமதிக்கின்றது.

இப்பணிப்புரையானது பலதரப்பட்ட தொழில்சார் பின்னணிகள் மற்றும் முன்னைய கற்றல் அனுபவங்களை ஏற்றுக்கொள்வதுடன், மூ.ச.சா. இற்கான விலக்களிப்பு கொள்கையினை விரிவாக்கியுள்ளது. முன்னர், இ.பி.ப.ஆ. பட்டய நிதியியல் பகுப்பாய்வாளர் மட்டம் 2 இனை சித்திஎய்த விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விலக்களிப்பினை வழங்கியது. எவ்வாறாயினும், தற்போது முகாமைத்துவக் கணக்காளர்களின் பட்டய நிறுவனம் (CIMA), சான்றளிக்கப்பட்ட கணக்காளர்களது பட்டயச் சங்கம் (ACCA), இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (CA) ஆகியவற்றின் இறுதித் தேர்வில் சித்தியடைந்தவர்கள் மற்றும் நிதியியல் தொடர்பான துறையில் இளமானி அல்லது முதுமானி பட்டத்தினை நிறைவு செய்தவர்களும் விலக்களிப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவார்கள்.

இந்த திருத்தங்கள் துறையில் தொழில்சார் நியமங்களை உயர்த்துவதற்கு மற்றும் மேம்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளவேளை தொடர்ச்சியான தொழில்சார் வளர்ச்சிக்கு மிகவும் உள்ளடக்கமான மற்றும் உறுதுணையாய் உள்ளது..

பொது மக்கள்

முதலிடுவதில் நிகழ்ச்சித்திட்டம் (PI)

மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலாக, இ.பி.ப.ஆ. முதலீடு செய்வதில் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்தியதுடன், இது நடைமுறையிலுள்ள மற்றும் சாத்தியமான முதலீட்டாளர்களது அறிவுபூர்வமான முதலீட்டு தீர்மானங்களுக்கு வசதியளிக்கும் அறிவினை வழங்குவதில் முன்னிறுத்தம் செய்கின்றது. இவ்வருடத்தின்போது இரண்டு தொடர்கள் ஆரம்பிக்கப்பட்டு நிறைவுசெய்யப்பட்டன. துறைசார் கேள்வியின் காரணமாக, இரண்டு தொடர்களும் ஆங்கில மொழியில் கலப்பின அமர்வுகளாக நடாத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களில், துறைசாரா தனிநபர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பள்ளிப் படிப்பை நிறைவு செய்தவர்கள் மற்றும் மூலதனச் சந்தை தொழில்வல்லுனர்களுக்கு மேலாக ஏனைய துறைகளிலுள்ள தொழில்வல்லுனர்கள் உள்ளடங்கலான ஒரு பன்முகமான மாணவர் தளமானது அவதானிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்கள்;

தங்கப் பதக்கம் மற்றும் பண விருது திட்டம்

பல்கலைக்கழக மாணவர்களிடையே மூலதனச் சந்தையினை ஊக்குவிக்கும் நோக்கத்தில் இ.பி.ப.ஆ. இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களிடையே ஒரு நெருக்கமான உறவினை தொடர்ச்சியாக பராமரிக்கின்றது. மீளாய்வாண்டின்போது தங்கப் பதக்க மற்றும் பண விருது திட்டமானது நிர்வகிக்கப்பட்டதுடன், இது பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் மூலதனச் சந்தை தொடர்பான பாடங்களை கற்பதனை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் மூலதனச் சந்தைப் பிரிவுகளில்

சிறப்பாக செயலாற்றும் பல்கலைக்கழக மாணவனுக்கும் ஒரு தங்க விருதும் பணப் பரிசும் வழங்கப்பட்டது. இந்த திட்டத்திற்காக பதினொரு தேசிய பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம், 2024 ஆம் ஆண்டின்போது பின்வரும் தேசிய பல்கலைக்கழகங்களுக்கு தங்கப் பதக்கங்களும் காசுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- இலங்கையின் வயம்ப பல்கலைக்கழகம்
- இலங்கையின் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
- களணிய பல்கலைக்கழகம்
- இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகம்
- ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- ருஹுூண பல்கலைக்கழகம்

பல்கலைக்கழக போட்டிகள்

இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. கூட்டிணைந்து தேசிய பல்கலைக்கழகங்களில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்காக பல்கலைக்கழக போட்டிகள் மூலதனச் சந்தை புதிர் போட்டி 2024 என்று தலைப்பிடப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான புதிர் போட்டியினை நடாத்தியது.

இந்த புதிர் போட்டியினை ஒழுங்குசெய்வதன் பிரதான குறிக்கோள் இலங்கையின் மூலதனச் சந்தையினைப் பற்றிய விழிப்புணர்வினை உருவாக்குதல் என்பதுடன், இதன்மூலம் இலங்கையின் பல்கலைக்கழக மாணவர்களிடையே நிதியியல் அறிவினை மேம்படுத்துவதும் ஆகும். இந்த முன்னெடுப்பானது பல்கலைக்கழக மாணவர்கள் மூலதனச் சந்தையினை பற்றி அதிக அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கும் மாணவர்களை பங்குச் சந்தையில் முதலிடுவதற்கும் மற்றும் மூலதனச் சந்தைத் துறையில் வேலைவாய்ப்பினை தேடுவதற்கும் ஊக்கமளிக்கும்.

இந்த போட்டியானது தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக 2024 இல் நிறைவடைந்தது. பங்குபற்றுநர்கள், உலகளாவிய சந்தைகள், பொது அறிவு, இலங்கையின் பொருளாதாரம் மற்றம் வணிகங்கள், நடைமுறை அலுவல்கள், விளையாட்டுகள் மற்றும் பொழுதுபோக்கு உள்ளடங்கலான பல்வேறு அறிவுக் களங்கள் மற்றும் நிதியியல் பிணையங்களை முகாமைப்படுத்தல் தொடர்பான் ஏனைய பரிவுகளிலும் பரிசீலிக்கப்பட்டார்கள்.

இப்போட்டியானது இரண்டு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன, அவையாவன:

கட்டம் 01: பல்கலைக்கழகங்களில் ஒவ்வொரு பீடத்தினை பிரதிநிதித்துவம் செய்யும் அணிகளைக் கொண்ட பீடங்களுக்கிடையேயான போட்டி.

கட்டம் 02: கட்டம் 01 இல் தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலிருந்து முதல் மூன்று அணிகளுக்கிடையேயான தேசிய மட்டத்திலான போட்டி.

இந்நிகழ்வானது ஒரு காரசாரமான இறுதிப்போட்டிக்கு வழிவகுத்ததுடன், விரும்பத்தக்க பட்டத்திற்காக சிறப்பாக செயற்படுகின்ற அணிகள் நேருக்கு நேர் போட்டியிட்டன.

ஒட்டுமொத்த வெற்றியாளர்: கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப் பீடம் (அணி 01) முதல் நிலையினை வென்றது. இரண்டாம் நிலை: களணிய பல்கலைக்கழகத்தின் வர்த்தகம் மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் பீடம் (அணி 01) இரண்டாம் நிலையினை அடைந்தது. மூன்றாம் நிலை: சபரகமுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் (அணி 01) மூன்றாம் நிலையினை அடைந்தது.

இந்நிகழ்வின் வெற்றிக்கு பிளட்டினம் அனுசரணையாளர்களாக பாட்லீட் ரெலிகெயார் செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் வெர்ஸ்ட் கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி காணப்பட்டதுடன் இணை அனுசரணையாளராக அபான்சின் மோட்டாரோலாவும் காணப்பட்டது. அன்றைய மாலை நிகழ்வானது பங்குபற்றுனர்களுக்கான ஒரு ஒன்றுகூடலுடன் நிறைவு செய்ததுடன், இங்கு அவர்கள் அவர்களது சாதனைகளையும் எதிர்கால தலைவர்களிடையேயான தோழமையினையும் கொண்டாடி மகிழ்ந்தார்கள். பல்கழைக்கழக போட்டிகள் இலங்கையின் மிகத்திறமையான பல்கலைக்கழக மாணவர்களை எழுச்சியூட்டுவதற்கு, கற்பிப்பதற்கு மற்றும் சவால்விடுவதற்கான ஒரு மேடையாக சேவையாற்றியதுடன், இது நிதியியல் அறிவுபடைத்த பிரஜைகளைக் கொண்ட அடுத்த சந்ததியினை வடிவமைப்பதற்கு உதவுகின்றது.

மூலோபாய இலக்கு 1

ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலினை நிறுவிப் பராமரித்தல்

செய்திகளில் இ.பி.ப.ஆ.

The Island, Tuesday, 6th February 2024

SEC Sri Lanka introduces mechanism to report social media wrongdoings

Daily FT Friday, 16th August 2024

SEC amends entry requirements for Capital Market professionals

Ceylon Today, Tuesday, 10th September 2024

SEC issues new directions on Whitelist Indices

With the objective of protecting the interest of investors seeking Shariah compliant investments and rationalising the construction and publication of Shariah compliant Whitelist Equity Indices in the capital market, the Securities and Exchange Commission of Sri Lanka (SEC) has issued new regulatory directions to Market Institutions and Market Intermediaries operating Whitelist Indices.

Shariah compliant equities are equity securities which have been determined to be Shariah compliant. The process of determining whether an equity is Shariah compliant, and therefore appropriate for investment by investors seeking Shariah compliant investments, is done through a Shariah screening methodology of listed securities and consists of a set of qualitative and quantitative components.

Recognising the growing demand for Shariah Compliant Debt Securities such as Sukuks, both domestically and internationally, the SEC recently took a proactive step by approving an enabling regulatory framework to introduce and list such products on the Colombo Stock Exchange (CSE). The list of Accredited Shariah Scholars and the compliance certification process approved by the SEC provides credibility to the products listed on the CSE.

In order to provide investors assurance that the Whitelist Indices operating in Sri Lanka are in compliance with Principles and Rules of Shariah and that the securities screening methodology is on par with globally recognized screening thresholds, the SEC requested the approved list of Accredited Shariah Scholars, recognized as Supplementary Service Providers under the SEC Act, to develop a Shariah Securities Screening Methodology standard that is comprehensive, comparable to global benchmarks, and relevant to local market conditions. Thereupon, a Standard Shariah Compliant ...

Daily FT, Thursday, 22 February 2024

SEC and CSE host investor forum in Vavuniya

Ceylon Today, Friday, 10th May 2024

SEC SRI LANKA CERTIFIES SHARIAH SCHOLARS FOR MARKET PRODUCTS



Ceylon Today, Tuesday, 16th July 2024

SEC advocates for informed, empowered retail investors

Daily Mirror, Monday, 3rd June 2024

SEC calls upon listed company secretaries to play an active role in board governance

The Securities and Exchange Commission of Sri Lanka (SEC) together with the Colombo Stock Exchange (CSE) conducted two awareness sessions on the revised Corporate Governance ... Company Secretaries/ ... Listed Companies on ...

... providing assistance and advice to the board chair and other directors in the practice of good governance at board and company levels. He said that the modern-day board secretary is no longer expected to be a mere "note-taker" at board meetings, a glorified stenographer or an "administrative servant of the board" but is expected to play an engaging role as a board advisor, guide to directors, board catalyst, board planner and influencer with responsibility and commitment towards ensuring sound governance practices at board level.

He said the board secretary is the focal information point in the board process and should facilitate the accurate and timely flow of information from the executive management to the board directors, assist the chair in agenda setting, director communications and information sharing. He particularly highlighted the role board secretaries could play in the context of difficult board conversations, conflicts of interest and governance breaches inside boardrooms. Salieh further stated that the SEC expects to see the role of the board secretary enhanced in line with the evolving global standards.

Presenting the revised regulatory framework Wijayawardhane highlighted the importance of the role of the board secretaries as advisors to the board of directors as well as the executive management and stated the requirement for the board/company secretaries to be familiar with the applicable rules and regulations in order to engage in such advisory role.

Changes to the Corporate Governance Rules were introduced under Section 9 of the CSE Listing Rules and these are applicable to the companies listed on the Main Board, Diri Savi Board, Catalyst Board as well as companies issuing debt securities except those listed on the Empower Board. Some of the key changes include specifying a minimum number of directors and independent directors for listed entities, requirements for the CEO and chairperson, appointment of a 'senior independent director' in certain specific instances, establishment and operationalisation of a nomination and governance committee, change in the composition and functions applicable to the audit, remuneration and related party transaction committees, introduction of fit and proper criteria for board members and CEO, changes to determine the criteria for 'independence', appointment of alternative directors, establishment and maintenance of company policies, additional disclosure requirements on governance-related matters etc.

The sessions drew active interactions among the participants and discussed how the board/company secretary should relate their role to the governance requirements and become a value-adding fit to the board governance process. In his concluding remarks, Salieh urged the company/board secretaries to be a driving force in guiding the board of directors and the executive management of listed companies to enhance the level of corporate governance in the capital market.

Daily Mirror, Wednesday, 14th February 2024

SEC approves regulatory framework for Infrastructure Bonds

The Securities and Exchange Commission (SEC) yesterday announced the approval of a regulatory framework to facilitate the issuance and listing of Infrastructure Bonds on the Colombo Stock Exchange (CSE).

This landmark decision by the SEC is aimed at fostering both foreign and local investments in infrastructure projects that will contribute to the economic development and well-being of the country.

Infrastructure Bonds aim to raise capital for vital projects such as roads, rail, water management, waste management systems, airports, seaports, mixed development projects, natural disaster protection systems, deep water ports, gas supply systems, utility projects, telecommunications infrastructure, etc. which are integral to economic growth and sustainability.

"The misallocation of capital is a root cause of our economic crisis. It is our objective to enable instruments that can raise long-term capital for development projects and provide investor assurance that such capital is allocated to the project's stated purpose with transparency and accountability," said SEC Chairman Faizal Salieh.

"We have now created an opportunity for government bodies such as Municipal Councils, Urban Councils, Local Government Councils, the Urban Development Authority, etc. and even large private sector companies to finance infrastructure projects through these bonds," he added.

There is a need for Sri Lanka to develop a market for Infrastructure Bonds and raise the long - term capital needed for infrastructure projects.

The scope of infrastructure development in emerging economies has evolved significantly in recent decades and now comprises a broad range that includes traditional infrastructure projects such as power, oil and gas, and water as well as low-carbon, climate-resilient infrastructure such as renewable energy projects.

MORE ON P8

சமூக ஊடக மேடைகளூடாக முதலீட்டாளர்களுக்கு வலுவளித்தல்



மூலோபாய இலக்கு 1

ஒரு வலுவான முறைமைப்படுத்தல் சூழலினை நிறுவிப் பராமரித்தல்







சமூக ஊடக மேடைகளூடாக முதலீட்டாளர்களுக்கு வலுவளித்தல்









மூலோபாய இலக்கு 2

முதலீட்டாளர் நலனை பாதுகாத்தல்

இ.பி.ப.ஆ. இன் ஒரு முக்கிய முறைமைப்படுத்தல் குறிக்கோளாக நியாயமான மற்றும் ஒழுங்கான வர்த்தகத்தினை பராமரிப்பது காணப்படுகின்றது. இதனை அடைவதற்கு, இ.பி.ப.ஆ. கையாளுகைகள் மற்றும் ஏனைய நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளை இனங்காண்பதற்கும் தடுப்பதற்கும் சந்தை கண்காணிப்பினை பயன்படுத்துகின்றது. அதன் கண்காணிப்பு வலையமைப்பினூடாக கண்டுபிடிக்கப்படும் ஏதேனும் சந்தேகத்திற்கிடமான துர்நடத்தை ஒரு முழுமையான மீளாய்வுக்கு உட்படுகின்றது. தவறிழைத்ததாக நியாயமான சந்தேகம் காணப்படின், இ.பி.ப.ஆ. புலன் விசாரணைகளை முன்னெடுப்பதுடன், அவசியமானபோது வலியுறுத்தல் நடவடிக்கைகளை தொடர்கின்றது.

கண்காணிப்பு

நியாயம், வெளிப்படைத்தன்மை மற்றும் முதலீட்டாளர் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கு இ.பி.ப.ஆ. மூலதனச் சந்தையினை கண்காணிப்பதற்கு பொறுப்பாயுள்ளது. இ.பி.ப.ஆ. கொ.ப.ப. இல் இடம்பெறும் வர்த்தக நடவடிக்கைகளை முனைப்பாக மேற்பார்வை செய்து, அசாதாரணமான விலை அல்லது பருமன் அசைவுகள் மற்றும் சந்தேகத்திற்கிடமான வர்த்தக நடத்தையினை இனங்காண்கின்றது. இந்த விழிப்புணர்வு சந்தை நேர்மையினை நிலைநிறுத்தி முதலீட்டாளர்களை பாதுகாப்பதற்கு துணைபுரிகின்றது.

அசாதாரணமான வர்த்தக நடவடிக்கையினை கண்டுபிடிப்பதற்கு இ.பி.ப.ஆ. மெய்நேர சந்தை கண்காணிப்பினை நடாத்துகின்றது. முறைகேடுகள் இனங்காணப்படும்போது, ஒரு விரிவான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு கண்காணிப்பு பரிந்துரைத்தல்கள் மற்றும் கண்காணிப்பு குறிப்புகள் ஊடாக பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. சந்தை தரவுகளை முன்கூட்டியே பகுப்பாய்வு செய்வதற்கு இ.பி.ப.ஆ. மேம்பட்ட கண்காணித்தல் மேடைகளை பயன்படுத்தி ஒழுங்கின்மைகள் மற்றும் சாத்தியமான இடர்களை உரிய காலத்தில் கண்டுபிடிப்பதை உறுதிசெய்கின்றது. கண்காணிப்பு பரிந்துரைத்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் புலனாய்வு மற்றும் மேலதிக செயற்பாட்டிற்கு அனுப்பிவைக்கப்படுகின்றது.

முக்கியமாக 2024 ஆம் ஆண்டின்போது, இ.பி.ப.ஆ. நஸ்டாக்கிடமிருந்து ஒரு அதி நவீன சந்தை கண்காணிப்பு அமைப்புமுறையினை கொள்வனவு செய்ததன் மூலம் அதன் சந்தை கண்காணிப்பினை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தது. நஸ்டாக்கின் சந்தை கண்காணிப்பு அமைப்பு முறையானது, சந்தை ஒழுங்கீனங்கள், சாத்தியமான மோசடி மற்றும் ஏனைய வடிவிலான சந்தை கையாளுகை மற்றும் துஷ்பிரயோகம் என்பவற்றை கண்டுபிடித்து பதிலளிப்பதற்கான நவீன தொழில்நுட்பத்தினை இ.பி.ப.ஆ. இற்கு வழங்கும். இந்த அமைப்புமுறையின் அதி நவீன கணிப்புநெறிகள், தனிப்பயனாக்கப்பட்ட எச்சரிக்கை மற்றும் அறிக்கை உருவாக்கும் ஆற்றல்கள், காட்சிப்படுத்தும் கருவிகள் மற்றும் சந்தை மீளாடலுடனான மெய்நேர தரவுப் பகுப்பாய்வு என்பன சந்தை பங்குபற்றுனர்களை செயலூக்கமாக பாதுகாப்பதற்கும் இலங்கையின் மூலதனச் சந்தையின் ஒட்டுமொத்த ஸ்திரத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையினை மேம்படுத்துவதற்கும் இ.பி.ப.ஆ. இனை இயலுமையாக்கும். அதிகரிக்கும் சந்தை நடவடிக்கைக்கு துணையளிப்பதற்கு இந்த அமைப்புமுறையானது ஈடுகொடுக்கக்கூடியதுடன், அதிகளவு தரவுகளை செயன்முறைப்படுத்தக்கூடியதும், அதன் கண்டுபிடித்தல் ஆற்றலை மேம்படுத்துவதற்கு செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரப் பயிலல்களையும் ஒன்றிணைக்க இயலும். இந்த அமைப்புமுறையானது 2025 இன் 2ஆம் காலாண்டின்போது அமுல்படுத்தப்படும்.

2024 ஆம் ஆண்டின் மீதான கண்காணிப்பு நடவடிக்கைகள்.

2024 ஆம் ஆண்டிற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளின் ஒரு பொழிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது: (உருவம் 15)

உருவம் 15: கண்காணிப்பு நடவடிக்கைகள் 2024

அவதானிப்புகள்	தொலைபேசி அழைப்புகள்	ஏனைய பிரிவுகளுக்கு வேண்டப்பட்ட வர்த்தகப் பகுப்பாய்வினை வழங்குதல்	மேலதிக கண்காணிப்பு	கூற்று பதிவுசெய்தல்	கண்காணிப்பு குறிப்புகள்	கண்காணிப்பு பரிந்துரைத்தல்கள்
147	27	20	92	4	6	11

மேலே அட்டவணையில் காண்பித்துள்ளவாறு, இ.பி.ப.ஆ. 2024 இல் அதன் கண்காணிப்பு செயன்முறையினூடாக 147 சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகளை இனங்கண்டது. மொத்தமாக 240 சந்தை நாட்களில், ஒவ்வொரு இரண்டு சந்தை நாட்களில் ஆகக் குறைந்தது ஒரு தடவையேனும் ஒரு அவதானிப்பு பதிவுசெய்யப்பட்டது. மேலாக, இ.பி.ப.ஆ. 27 தடவைகள் நான்கு தனிநபர்களிடமிருந்து விளக்கங்கள் மற்றும் கூற்றுக்களை பெறுவதற்காக சந்தேகத்திற்கிடமான தரப்பினரை தொடர்புகொண்டது. இந்த கண்காணிப்பு வழிமுறைகள் ஒரு ஆற்றல்மிக்க தடுப்பரணாக செயற்படுவதுடன், சந்தையில் சந்தேகத்திற்கிடமான வர்த்தக நடவடிக்கைகள் தொடர்வதனை ஊக்கம் கெடச் செய்கின்றது.

2024 இல் இ.பி.ப.ஆ. முற்று முழுதான புலனாய்வுகளுக்காக 11 கண்காணிப்பு பரிந்துரைத்தல்களை உருவாக்கியதுடன், சந்தேகத்திற்கிடமான வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் ஆறு கண்காணிப்பு குறிப்புகளை தயார்செய்தது. மேலாக, இ.பி.ப.ஆ. புலனாய்வு பிரிவு உள்ளடங்கலான ஏனைய பிரிவுகளிலிருந்தான வேண்டுகோள்களுக்கு பதிலளிக்கும் விதமாக 20 கண்காணிப்பு அறிக்கைகளை வழங்கியது.

சமூக ஊடக கலந்துரையாடல்களை கண்காணித்தல்

பட்டியலிடப்பட்ட பிணையங்கள் பற்றிய தகவல்களை திரட்டுவதற்கு சமூக ஊடகங்களில் முதலீட்டாளர்கள் அதிகளவில் தங்கியுள்ளார்கள். எவ்வாறாயினும், முதலீட்டாளர்களை பொய்யான தகவல்களுடன் தவறாக வழிநடத்துவதற்காக சில தரப்பினரால் இந்த மேடைகள் பயன்படுத்தப்படுகின்றன. அத்தகைய இடுகைகள் பரிந்துரைகள் அல்லது இலக்குவைத்த விலைகளை உள்ளடக்கலாம், இது பிணையத்தின் பெறுமதியில் அல்லது விலையில் பொய்யான சந்தை கண்ணோட்டத்தினை உருவாக்கலாம். இது சந்தை தளம்பல்களையும் பிழையாக வழிநடத்தப்பட்ட தீர்மானங்களை விளைவிக்கலாம்.

எனவே, இ.பி.ப.ஆ. முகப்புத்தகம், இன்ஸ்டகிராம், யூடியூப், ரெலிகிராம், வட்ஸ்அப் போன்ற சமூக ஊடக மேடைகளை செயலூக்கமாக கண்காணிக்கின்றது. இது தகவல் அடிப்படையிலான சந்தை கையாளுகை உள்ளடங்கலான சாத்தியமான சந்தை துர்நடத்தை நிகழ்வுகளை கண்டுபிடிப்பதற்கும் அவற்றை விளித்துரைப்பதற்கும் முன்முயற்சியான வழிமுறைகளை எடுப்பதற்கும் ஆகும்.

2024 இல் இ.பி.ப.ஆ. சமூக ஊடகங்களில் இடுகையிடப்பட்ட சந்தேகத்திற்கிடமான உள்ளடக்கத்தைக் கொண்ட 19 சந்தர்ப்பங்களை இனங்கண்டது. 12 முதலீட்டாளர்களிடமிருந்து விளக்கங்கள் பெறப்பட்டதுடன், ஒரு விடயத்தின் தீவிரத்தன்மையின் காரணமாக ஒரு உத்தியோகபூர்வ கூற்று பதிவுசெய்யப்பட்டது. சமூக ஊடகத்தினை உள்ளடக்கிய ஒரு சந்தேகத்திற்கிடமான நிகழ்வானது புலனாய்வு பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டவேளை, மற்றுமோர் விடயமானது கூட்டாண்மை அலுவர்கள் பிரிவின் மேலதிக மீளாய்விற்காக அனுப்பிவைக்கப்பட்டது. மேலாக, இரண்டு சமூக ஊடக செனல்கள் இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதற்காக தொடர்ச்சியான கண்காணிப்பிற்காக குறியிடப்பட்டன. இ.பி.ப.ஆ. கூட்டாண்மை அறிவித்தல்கள் தொடர்பான, குறிப்பாக விலை மற்றும் பருமன் அசைவுகள் தொடர்பானவை, சமூக ஊடக சல்லடையிடலை நடாத்துகின்றது.

புலனாய்வுகள்

இ.பி.ப.ஆ. 2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகள், அல்லது ஏதேனும் ஒழுங்குவிதிகள், விதிகள், பணிப்புரைகள் அல்லது சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களில் ஏதேனும் கூறப்படும் மீறல்கள் மற்றும் முரண்பாடுகளில் புலனாய்வுகளை நடாத்துகின்றது. இலங்கையின் மூலதனச் சந்தையினது முறைமைப்படுத்துபவராக, இது இ.பி.ப.ஆ. இன் முக்கிய செயற்பாடுகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகளினுள் ஒன்றாகும். முதலீட்டாளர்களது அக்கறைகளை பாதுகாக்கும்வேளை ஒரு நியாயமாக, ஒழுங்கான, செயற்திறனான மற்றும் வெளிப்படையான பிணையங்கள் சந்தையினை பராமரிக்கும் அதன் கடப்பாட்டின் ஒரு பகுதியாக, இ.பி.ப.ஆ. இற்கு சந்தை நிறுவனங்கள், சந்தை இடையீட்டாளர்கள், பதிவுசெய்யப்பட்ட நபர்கள், பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகள் மற்றும் பட்டியலிடப்பட்ட வெளிநாட்டு நிறுவனங்களின் நடவடிக்கைகளில் விசாரணையினை மேற்கொண்டு புலனாய்வு செய்வதற்காக வலுவளிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின்போது, இ.பி.ப.ஆ. முன்னைய ஆண்டிலிருந்து முன்கொணரப்பட்ட 55 புலனாய்வுகளில் 36 புலனாய்வுகளை நிறைவுசெய்தது. மேலும், 2024 இல் ஆணைக்குழுவானது ஏழு புதிய புலனாய்வுகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானித்தது. இவ்வாண்டின்போது ஆரம்பிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட புதிய புலனாய்வுகளின் மொத்த எண்ணிக்கையில் ஆறு புலனாய்வுகள் 2021 இன் 19 ஆம் இலக்க சட்டத்தின் (புதிய இ.பி.ப.ஆ. சட்டம்) கீழான சந்தேகத்திற்கிடமான முரண்பாடுகள் ஆகும். இவை உள்ளுறைபவர் வர்த்தகம் மற்றும் பொய்யான வர்த்தகம், சந்தை மோசடி மற்றும் பிணையங்கள் மோசடி உள்ளடங்கலான குறிப்பிட்ட வகையான சந்தை கையாளுகைகளை உள்ளடக்கியிருந்தன. மற்றைய புலனாய்வானது 2001 இன் இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 12 இற்கு முரணாக சந்தை கையாளுகையில் ஒரு சந்தேகத்திற்கிடமான விடயம் தொடர்பானதாகும். இவை 1987 இன் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டம் திருத்தியமைக்கப்பட்டவாறு (ரத்துசெய்யப்பட்ட சட்டம்) அமுலில் உள்ளபோது நிகழ்ந்த வர்த்தகங்கள் பற்றியதாகும்.

இதன் பிரகாரம், மொத்தத்தில் இ.பி.ப.ஆ. மீளாய்வாண்டின்போது 62 புலனாய்வுகளை நடாத்தியது. மீளாய்வாண்டின்போது நிறைவு செய்த புலனாய்வுகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் பின்வரும் வலியுறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது:

- பொருத்தமான வலியுறுத்தல் நடவடிக்கையினை தீர்மானிப்பதற்கு முன்னர் 12 தனிநபர்களுக்கும் நான்கு நிறுவனங்களுக்கும் காரணங் காட்டல் அறிவித்தல் வழங்குவதற்கு.
- மூன்று தனிநபர்களுக்கும் மூன்று நிறுவனங்களுக்கும் எச்சரிக்கை கடிதங்களை வழங்குவதற்கு.

கண்காணிப்பு அணி

மூலோபாய இலக்கு 2

முதலீட்டாளர் நலனை பாதுகாத்தல்

- ☐ ஒரு நிறுவனத்திற்கு எதிர்காலத்தில் அதே நடத்தையினை மீளவும் செய்யாதிருப்பதற்கு ஒரு தடையாக ஒரு கண்டனக் கடிதம் வழங்குவதற்கு மற்றும் ஒரு தனிநபருக்கு அவரது நெறிமுறையற்ற நடத்தைக்காக ஒரு கடிதம் அனுப்புவதற்கும்.
- ☐ ஒரு தனிநபர் இலங்கை திரும்பியதன் பின்னர் வெளிநாடுகளுக்கு பயணம் செய்வதனை தடைசெய்யும் ஒரு நீதிமன்ற கட்டளையினைப் பெறுவதற்கு தேவையான வழிமுறைகளை அமுல்படுத்துவதற்கு.
- ☐ அவசியமான நடவடிக்கைகளுக்காக, நான்கு புலனாய்வுகளின் உரிய கண்டுபிடிப்புகளை இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பிவைப்பதற்கும், இரண்டு புலனாய்வுகளின் உரிய கண்டுபிடிப்புகளை கொ.ப.ப. இற்கு அனுப்பிவைப்பதற்கும், ஒரு புலனாய்வின் உரிய கண்டுபிடிப்புகளை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பிவைப்பதற்கும்.

மேலும் இவ்வாண்டின்போது நிறைவு செய்யப்பட்ட 36 புலனாய்வுகளுள் 23 புலனாய்வுகள் பின்வரும் காரணத்திற்காக வலியுறுத்தல் நடவடிக்கை இன்றி நிறைவு செய்யப்பட்டன. நபர்களினால் / நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு தவறானது புலனாய்வுகளுக்கு உட்பட்டு அப்புலனாய்வுகளின்போது வெளிப்படுத்தப்பட்ட சான்றுகளினால் நிலைநாட்டப்படாததன் காரணத்தினாலாகும்.

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட மேற்குறிப்பிட்ட புலனாய்வுகளுக்கும் மேலாக, இ.பி.ப.ஆ. நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு புலனாய்வு தொடர்பான துணை விடயங்களை நிறைவுசெய்தது. மேலும், மற்றுமோர் புலனாய்வில், ஆணைக்குழுவானது புலனாய்வு அறிக்கையினை மீளாய்வு செய்ததன் பின்னர் விடயத்தின் ஏனைய சில அம்சங்களினுள் மேலதிக புலனாய்வுகளை நடாத்துமாறு பரிந்துரைத்தது.

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டு முழுவதும் இ.பி.ப.ஆ. ஏனைய சட்ட வலியுறுத்தல் அதிகாரிகளுடனான அதன் இணைப்பினை பலப்படுத்தியதுடன், புலனாய்வுகளில் ஈடுபடுகின்ற பணியாட்களது கொள்திறனை மேம்படுத்துவதற்கு அறிவுப் பகிர்வு அமர்வுகளை ஒழுங்குசெய்தது. மேலும், டிஜிட்டல் உருமாற்றத்திற்கான இ.பி.ப.ஆ. இன் தொடர்ச்சியான கடப்பாட்டின் ஒரு பகுதியாக தரவுகள் மற்றும் புலனாய்வு கோப்புகளது பாதுகாப்பு மற்றும் அணுகுதலை மேம்படுத்துவதற்கு மேலதிக வழிமுறைகள் அமுல்படுத்தப்பட்டன.

வலியுறுத்தல் நடவடிக்கைகள்

காரணங் காட்டு அறிவித்தல்களின் வழங்கல்

இ.பி.ப.ஆ. இற்கு பொய்யான உறுதிமொழி பத்திரங்களை சமர்ப்பித்தமைக்காக ஒரு முதலீட்டு ஆலோசகருக்கு இரண்டு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.

இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 14 இற்கு முரணாக முன்னோடுதல் தவறினையும் தொடர்புடைய தவறுகளையும் இழைத்ததற்காக இரண்டு முதலீட்டு ஆலோசகர்கள் உள்ளடங்கலாக எட்டு நபர்களுக்கு காரணங் காட்டு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.

இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 14 இற்கு முரணாக முன்னோடுதல் தவறுக்காக ஒரு முன்னாள் முதலீட்டு ஆலோசகருக்கு காரணங்காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டது.

1987 இன் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டது) பிரிவு 32 இன் கீழ் உள்ளுறைபவர் வர்த்தகம் மற்றும் ஏனைய தவறுகளுக்காக நான்கு தனிநபர்களுக்கு காரணங் காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டன.

1987 இன் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டது) பிரிவு 32 (6) இன் கீழ் உள்ளுறைபவர் வர்த்தகத்திற்காக ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் தலைவர் ஒருவருக்கு காரணங் காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டது.

இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 14 இற்கு முரணாக ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பங்குகளில் முன்னோடுதல் தவறுக்காக ஒரு பங்குத் தரகுக் கம்பனிக்கு ஒரு காரணங் காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டதுடன், இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 14 இற்கு முரணாக பங்குத் தரகுக் கம்பனிக்கு உதவி செய்தல் மற்றும் உடந்தையாயிருத்தல் மூலம் சதிசெய்தமைக்காக ஒரு முதலீட்டாளருக்கு காரணக் காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டது.

இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 13 இனை மீறியமைக்காக இரண்டு கம்பனிகளுக்கு காரணங் காட்டு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.

31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த நிதியாண்டிற்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிக்காமைக்காகவும் மற்றும் 30 செப்டம்பர் 2023 இல் நிறைவடைந்த காலாண்டிற்கான இடைக்கால நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்காமைக்காகவும் கம்பனியின் மேல் கொ.ப.ப. இனால் விதிக்கப்பட்ட நிருவாக தண்டப் பணத்தினை செலுத்துவதற்கு தவறியமைக்காக ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கு காரணங் காட்டு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.

31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த நிதியாண்டிற்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிக்காமைக்காக கொ.ப.ப. இனால் விதிக்கப்பட்ட நிருவாக தண்டப் பணத்தினை செலுத்துவதற்கு தவறியமைக்காக ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கு காரணங் காட்டு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.

இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 12 இற்கு முரணாக அவரது சந்தை கையாளுகைக்காக ஒரு முதலீட்டாளருக்கு ஒரு காரணங் காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டது.

2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 175 (1) (டி) இனை மீறும் விதமாக இ.பி.ப.ஆ. இற்கு உண்மைக்கு புறம்பான, பிழையான தவறாக வழிநடத்தும் தகவல்களை வழங்கியமைக்காக ஒரு பங்குத் தரகுக் கம்பனிக்கு ஒரு காரணங் காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டது.

2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 175 (1) (டி) இனை மீறும் விதமாக, ஒரு சந்தை இடையீட்டாளரின் ஒரு முக்கிய முகாமைத்துவ நபரினால் இ.பி.ப.ஆ. இற்கு சமர்ப்பிக்கப்பட்ட உண்மைக்கு புறம்பான, பிழையான தவறாக வழிநடத்தும் தகவல்களை வழங்கியமைக்காக ஒரு பங்குத் தரகுக் கம்பனியின் பணிப்பாளர் ஒருவருக்கு ஒரு காரணங் காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டது.

1987 இன் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டது) பிரிவு 32 (1) இனை மீறிய உள்ளுறைபவர் வர்த்தகத்திற்காக ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பிரதித் தலைவர் ஒருவருக்கு காரணங் காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டது.

2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 183 இன் பிரகாரம் எல்லைக் கடன் வழங்குனர்களுக்கு வழங்கப்பட்ட விதிகள் தொடர்பான மீறுதலுக்காக இரண்டு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளுக்கு காரணங் காட்டு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.

2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 137 (2) (a) இனை மீறியமைக்காக ஒரு முதலீட்டு ஆலோசகருக்கு ஒரு காரணங் காட்டு அறிவித்தல் வழங்கப்பட்டது.

2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 137 (2) இனை மீறியமைக்காக இரண்டு முதலீட்டாளர்களுக்கு காரணங் காட்டு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.

எச்சரிக்கை வழங்கல்

இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 12 இனை மீறும் விதமாக கருதப்படக்கூடிய நடத்தைக்காக ஒரு முதலீட்டாளருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

மற்றுமோர் முதலீட்டு ஆலோசகருடன் கூட்டிணைந்து இணை வர்த்தகங்களை இட்டமைக்காக அத்தகைய நடத்தையிலிருந்து விலகியிருக்குமாறு ஒரு முதலீட்டு ஆலோசகருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

பொருண்மையான தகவல்களை வெளிப்படுத்தியமை தொடர்பாக அதன் கவனக்குறைவான நடத்தைக்காக ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 132 இனை மீறும் விதமாக கருதப்படக்கூடிய நடத்தைக்காக ஒரு முதலீட்டாளருக்கு அத்தகைய நடத்தையிலிருந்து விலகியிருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் பிரிவு 8.2 உடன் இணக்கப்பாடு காணத் தவறியமைக்காக இரண்டு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

1987 இன் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டது) பிரிவு 32 (1) இனை மீறும் விதமாக உள்ளுறைபவர் வர்த்தகமாக கருதக்கூடிய வர்த்தகத்திலிருந்து விலகியிருக்குமாறு ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் ஒரு பிரதித் தலைவருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

சந்தையில் பொய்யான தவறாக வழிநடத்தும் தோற்றத்தினை உருவாக்கக்கூடிய நடத்தையின் மூலம் கொ.ப.ப. இன் பட்டியலிடப்பட்ட பங்குகளின் விலையில் தேவையற்ற தளம்பல்களை ஏற்படுத்தியமைக்காக ஒரு முதலீட்டாளருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்ட பிணையங்கள் தொடர்பாக பொய்யான / தவறாக வழிநடத்தும் தகவல்களை உள்ளடக்கும் தோற்றத்தினைக் கொண்ட இடுகைகளை சமூக ஊடகங்களில் மேற்கொண்டமைக்காக அல்லது பிரசுரித்தமைக்காக ஒரு தனிநபர் எச்சரிக்கப்பட்டார். அந்த பிணையங்கள் தொடர்பாக முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முதலீட்டாளர்களில் செல்வாக்கு செலுத்தக்கூடிய விதத்தில் அத்தகைய கூற்றுக்களின் அல்லது தகவல்களின் துல்லியத்தன்மையினை சரிபார்ப்பதற்கு நியாயமான கவனம் எடுக்காததன் காரணமாக அது, குறித்த பிணையங்கள் தொடர்பாக ஒரு பொய்யான சந்தையினை உருவாக்குவது நோக்கிப் பங்களிப்பு செய்யலாம்.

முன்னெச்சரிக்கை கடிதங்கள் வழங்குதல்

2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 129 (1) இனை மீறும் விதமாக சந்தை கையாளுகையாக கருதப்படக்கூடிய நடத்தைக்காக ஒரு முதலீட்டாளருக்கு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டது

கடிதங்களை வழங்குதல்

பங்குக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும்போது உரியவாறு கவனத்தினை பயன்படுத்துமாறு மூன்று நபர்களுக்கு கடிதம் மூலம் அறிவுரை வழங்கப்பட்டதுடன் அவர்கள் கொடுக்கல் வாங்கல்கள் சந்தை / விலை கையாளுகையாக கருதப்படாதிருப்பதனை உறுதிசெய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

ஒரு முதலீட்டாளர் அவர் பணிபுரியும் நிறுவனத்தின் நிகழவிருக்கும் முதலீட்டு தீர்மானத்துடன் தொடர்புடையவராய் உள்ளவேளை சில கம்பனிகளின் பங்குகளை கொள்வனவு செய்யும் நெறிமுறையற்ற நடத்தையிலிருந்து விலகியிருக்குமாறு அறிவுறுத்தப்பட்டார்.

ஒரு பொதுக் கண்டனம் வழங்குதல்

2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 178 (1) (iii) இன் பிரகாரம் ஒரு பங்குத் தரகு நிறுவனத்திற்கு கொ.ப.ப. இன் வர்த்தகப் பங்குபற்றுனர் விதிகளை (முன்னர் கொ.ப.ப. இன் பங்குத்தரர் விதிகள் என அழைக்கப்பட்டவை) மீறிய அவர்களது நடத்தைக்கு ஒரு பொதுக் கண்டனம் வழங்கப்பட்டது.

பங்குத் தரகு நிறுவனமொன்றின் நடத்தை தொடர்பாக, 2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 178 (1) (iii) இன் பிரகாரம் ஒரு பங்குத் தரகு நிறுவனத்திற்கு 2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 175 (1) (ஏ) இன் கீழ் கொ.ப.ப. வர்த்தகப் பங்குபற்றுனர் விதிகளின் விதி இலக்கம் 13.3(3) மற்றும் 13.3(4) இனை மற்றும் கொ.ப.ப. இன் அப்போதைய பங்குத்தரகர் விதிகளின் விதி இலக்கம் 7.1.3 (3) (தற்போது கொ.ப.ப. இன் வர்த்தகப் பங்குபற்றுனர் விதிகள் என அழைக்கப்படுகின்றன) இனை மீறியமைக்காக பொதுக் கண்டனம் வழங்கப்பட்டது.

2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 178 (1) (iii) இன் பிரகாரம் அதே சட்டத்தின் பிரிவு 175 (1) (டி) இன் கீழ் ஒரு தவறினை இழைப்பதான, பொய்யான, பிழையான தவறாக இட்டுச்செல்லும் தகவல்களை இ.பி.ப.ஆ. இற்கு வழங்கியமைக்காக ஒரு பங்குத் தரகு நிறுவனத்திற்கு பொதுக் கண்டனம் வழங்கப்பட்டது.

நிர்வாகத் தண்டப்பணம் விதிப்பு

ஒரு முதலீட்டு ஆலோசகருக்கு 2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 178 (1) (ii) இன் பிரகாரம் ஒரு நிர்வாகத் தண்டப்பணமாக ரூபா 1 மில்லியன் விதிக்கப்பட்டது.

இ.பி.ப.ஆ. இற்கு சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக் கடதாசியில் பொய்யான மற்றும் பிழையான தகவல்களை வழங்கியமைக்காக 2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 178 (1) (ii) இன் பிரகாரம் ஒரு பங்குத் தரகு நிறுவனத்தின் ஒரு முக்கிய முகாமைத்துவ நபருக்கு ஒரு நிர்வாகத் தண்டப்பணமாக ரூபா 1 மில்லியன் விதிக்கப்பட்டது. 31 டிசம்பர் 2024 வரைக்கும் இ.பி.ப.ஆ. இற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அவர் மேற்கூறிய தீர்மானத்தினை ஒழித்துவிடுமாறு வேண்டி இ.பி.ப.ஆ. இற்கு எதிராக இலக்கம் 466/24 இலக்கத்தையுடைய ஒரு ஆணை விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார். மேன் முறையீட்டு நீதிமன்றமானது நிலவும் நிலையினை பராமரிக்குமாறும் இந்த விடயம் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அடுத்த திகதி வரைக்கும் ஏதேனும் மேலதிக தீர்மானத்தினை மேற்கொள்ள வேண்டாம் என இ.பி.ப.ஆ. இற்கு ஒரு வழிகாட்டலை வழங்கியது. குறிப்பிட்ட விடயமானது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் நான்கு பணிப்பாளர்கள் மீது 2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 178 (1) (ii) இன் பிரகாரம் ரூபா 100,000/- நிர்வாகத் தண்டப்பணம் விதிக்கப்பட்டது. இது 30 செப்டம்பர் 2023 இல் நிறைவடைந்த காலாண்டிற்கான கம்பனியின் இடைக்கால நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்காமைக்காக கொ.ப.ப. இனால் விதிக்கப்பட்ட நிர்வாகத் தண்டப்பணத்தை செலுத்தத் தவறியமைக்காகும்.

ஏனைய முகவர்களுக்கு பரிந்துரைத்தல்

ஒரு புலனாய்வின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் ஒரு முதலீட்டாளரின் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் நுண்ணறிவு அலகிற்கு நிதியியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் கீழ் அவசியமான நடவடிக்கைக்காக பரிந்துரைக்கப்பட்டது.

ஆறு புலனாய்வுகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் சில கண்டுபிடிப்புகள் இ.ம.வ. இன் தேவையான நடவடிக்கைக்காக பரிந்துரைக்கப்பட்டன.

இ.பி.ப.ஆ. இனால் நடாத்தப்பட்ட ஒரு புலனாய்வின் அடிப்படையில், சில கண்டுபிடிப்புகள் கொ.ப.ப. இற்கு பரிந்துரைக்கப்பட்டன. இது கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் பிரிவு 8.2 இனை

மூலோபாய இலக்கு 2

முதலீட்டாளர் நலனை பாதுகாத்தல்

புலனாய்வுகள் அணி

மீறியமைக்காக ஒரு குறிப்பிட்ட பட்டியலிடப்பட்ட கம்பனிக்கு எதிராக கொ.ப.ப. இனால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை விசாரிப்பதற்காகும்.

தீர்ப்பனவு உடன்படிக்கைகள்

2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 152 (4) இன் கீழ் ஒரு நபருடன் தீர்ப்பனவு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

தவறுகளை ஒத்திணங்குதல்

ஒரு சுயாதீன ஒப்பந்ததாரராக இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 14 இனை மீறி முன்னோடுதல் தவறினை இழைத்ததாக கண்டுபிடிக்கப்பட்ட ஒரு நபரினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் மேல் அவர் இ.பி.ப.ஆ. இன் இழப்பீட்டு நிதியத்திற்கு ரூபா 3.3 மில்லியனை செலுத்தியதன் பின்னர் தவறானது ஒத்திணங்கப்பட்டது.

விரிவான ஆழ்ந்தாராய்வின் பின்னர் ஆணைக்குழு மூன்று நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட தவறுகளை சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒத்திணங்குவதற்கு தீர்மானித்தது. ஒத்திணங்கலானது அவர்கள் இழப்பீட்டு நிதியத்திற்கு மொத்தமாக ரூபா 23.1 மில்லியனை செலுத்தியதன் பின்னர் நிறைவேற்றப்பட்டது.

இ.பி.ப.ஆ. இனால் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கில் குற்றவாளியினால் ஒத்திணைங்குமாறு வேண்டிய விண்ணப்பமானது ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவர் ஏற்கனவே தொடர்புடைய விடயத்திற்கு ரூபா 333,333.33 இனை இ.பி.ப.ஆ. இன் இழப்பீட்டு நிதியத்திற்கு செலுத்தி ஒத்திணங்கியிருந்ததனால் ஆகும்.

குற்றப்பகர்வு

2021 இன் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சந்தை துர்நடத்தைக்காக நான்கு முதலீட்டாளர்களுக்கு எதிராக குற்றப்பகிர்வினை மேற்கொள்ளுமாறு மதிப்பிற்குரிய சட்டமா அதிபருக்கு பரிந்துரைக்கப்பட்டது.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்திற்கு முன்னால் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான தீர்மானம்

ஆணைக்குழுவானது கீழ்காண்பவற்றிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானித்தது.

1987 இன் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டது) ஏற்பாடுகளை மீறி உள்ளுறைபவர் வர்த்தகம் மற்றும் ஏனைய தொடர்புடைய தவறுகளை மேற்கொண்டமைக்கு நான்கு நபர்களுக்கு.

2001 இன் இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 12 இனை மீறி சந்தை கையாளுகைக்காக மூன்று முதலீட்டு ஆலோசகர்களுக்கு.

2001 இன் இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 14 இனை மீறி முன்னோடுதல் செய்தமைக்காக ஒரு முதலீட்டு ஆலோசகருக்கு.

2001 இன் இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 12 இனை மீறி சந்தை கையாளுகைக்காக இரண்டு முதலீட்டாளர்களுக்கு.

இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 12 இனை மீறி சந்தை கையாளுகைக்காக ஒரு நபருக்கு பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு.

இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 14 இனை மீறி முன்னோடுதலுக்காக மற்றும் அதனுடன் இணைந்த தவறுகளுக்கு ஒரு பங்குத் தரகு நிறுவனத்திற்கும் ஒரு முதலீட்டாளருக்கும்.

1987 இன் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டது) பிரிவு 32 (6) இனை மீறி உள்ளுறைபவர் வர்த்தகத்திற்காக ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் தலைவருக்கு.

2001 இன் இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 14 இனை மீறி முன்னோடுதல் செய்தமைக்காக ஒரு முதலீட்டு ஆலோசகருக்கு மற்றும் முன்னோடுதலை மேற்கொள்வதற்கு சதிசெய்தமைக்காக அவரது வாடிக்கையாளருக்கு.

2015 இல் ஒரு பணிப்புரையின் மூலம் வழங்கப்பட்ட சந்தை இடையீட்டாளர்களுக்கு பொருத்தமான முறைமைப்படுத்தல் நியமங்களை மீறியமைக்காக இ.பி.ப.ஆ. உடன் பதிவுசெய்த ஒரு முன்னாள் முதலீட்டு முகாமையாளர், அதன் முன்னாள் பிரதம முதலீட்டு அதிகாரிக்கு.

வழக்காடல்கள்

இ.பி.ப.ஆ. எதிர் எம்.ஐ.சம்சுதீன் மற்றும் எம். பி. நிஷார் MC S/5322/17

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 113 (பி) மற்றும் 102 இனை 18 டிசம்பர் 2001 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215-2 இல் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு விதிகளில் விதி இலக்கம் 12 இனையும் சேர்த்து வாசித்து இவற்றின் கீழ் தண்டிக்கத்தகு ஈ-செனலிங் பி.எல்.சி. இன் பங்குகளில் சந்தை-விலை கையாளுகைக்கு சதி செய்தமை மற்றும் சந்தை-விலை கையாளுகையினை செய்தமைக்காக மேற்குறிப்பிட்ட வழக்கினை இ.பி.ப.ஆ. கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் எம். இம்தியாஸ் சம்சுதீன் மற்றும் பாவிக் நிஷார் என்பவர்களுக்கெதிராக 2017 இல் தாக்கல் செய்தது.

இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

இ.பி.ப.ஆ. எதிர் லங்கா கன்னங்கர, கபில சேனாரத், பாரிக் வுர்கான், மற்றும் ரவீந்திர மல்லவாரச்சி, MC/Fort/13736/19

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 113(பி) மற்றும் 102 மற்றும் 2001 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி

இலக்கம் 1215-2 இல் பிரசுரிக்கப்பட்டவாறான இ.பி.ப.ஆ. விதிகளில் விதி இலக்கம் 12 இன் கீழ் ஓர் தண்டிக்கத்தகு தவறாகக் கருதப்படும் ரேடியன்ட் ஜெம்ஸ் பி.எல். சி இன் பங்குகளில் சந்தை கையாளுகை, சந்தை கையாளுகையினை செய்வதற்கு கூட்டு சதி செய்தமை மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக மேற்குறிப்பிட்ட நபர்களுக்கு எதிராக 2019 இல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

இ.பி.ப.ஆ. எதிர் சேன யத்தெஹிகே மற்றும் எஸ். தினமணி
MC/Fort/12639/19

1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்டவாறு பிரிவு 32 இனை தண்டனைக் கோவையின் பிரிவு 102 உடன் சேர்த்து வாசிக்கும்போது கேகோல் பிளான்டேஷன்ஸ் பி.எல்.சி இன் பங்குகளில் உள்ளுறைபவர் வர்த்தகம் மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக கலாநிதி. சேன யத்தெஹிகே மற்றும் திரு. சுப்பிரமணியம் தினமணி ஆகியோருக்கெதிராக 2019 இல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதனுடன் தொடர்புடைய உயர் நீதிமன்ற வழக்கு SC மேன்முறையீடு 164/2023 ஆனது இந்த வழக்கின் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்துள்ளதனால் இவ்வழக்கானது போடப்பட்டுள்ளது.

இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் எதிர் டபிள்யு.கே.எச். வெகாபிட்டிய, திலக் டி சில்வா மற்றும் தக்ஷிலா ஹுலங்கமுவ
MC Fort/16967/20

அப்போதைய 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 113(பி) மற்றும் 102 மற்றும் 2001 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215-2 இல் பிரசுரிக்கப்பட்டவாறான இ.பி.ப.ஆ. விதிகளில் விதி இலக்கம் 12 இல் ஓர் தண்டிக்கத்தகு தவறாகக் கருதப்படும் லாவ் கேஸ் பி.எல்.சி. இன் பங்குகளில் ஒக்டோபர் 07 2011 முதல் ஒக்டோபர் 10 2011 வரையான காலத்தின்போது சந்தை கையாளுகை, சந்தை கையாளுகையினை செய்வதற்கு கூட்டு சதி செய்தமை மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக மேற்குறிப்பிடப்பட்ட நபர்களுக்கு எதிராக 2020 இல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்குறிப்பிட்ட வழக்கில் குற்றவாளியினை பிரதிநிதித்துவம் செய்த சட்டவுரைஞரினால் நீதிமன்றத்தில் அப்போதைய இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 ஏ இன் பிரகாரம் இந்த தவறுகளை ஒத்திணங்குவதனை இ.பி.ப.ஆ. கருதுவதற்காக 03 ஏப்ரல் 2024 இல் ஒரு விண்ணப்பம் மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பிட்ட தவறுகள் இழைக்கப்பட்டதிலிருந்து ஊழியர் சேமலாப நிதியத்தினால் (EPF) ஆட்பட்ட நட்டத்தினை கருத்திலெடுத்து குற்றவாளிகள் EPF இற்கு ஏற்பட்ட நட்டத்தினை தீர்ப்பனவு செய்வதற்கு உடன்படும் பட்சத்தில், இந்த வழக்குடன் இணைந்துள்ள ஏனைய நிலுவையிலுள்ள வழக்காடல்கள் மற்றும் முந்தைய தண்டனைகள் இல்லாததன் காரணமாக ஆணைக்குழு குறித்த தவறுகளை ஒத்திணங்குமாறு மேற்கொண்ட விண்ணப்பத்தினை கருத்திற்கொண்டு குற்றவாளிகள் பின்வரும் தொகைகளை இ.பி.ப.ஆ. இன் இழப்பீட்டு நிதியத்திற்கு செலுத்தும் பட்சத்தில் ஒத்திணங்குவதற்கு தீர்மானித்தது:

திரு. டபிள்யு. கே. எச். வெகாபிட்டிய	ரூபா 6.6 மில்லியன்
திரு. யு. கே.. திலக் என். டி சில்வா	ரூபா 9.9 மில்லியன்
திரு. டி. ஐ. ஹு லங்கமுவ	ரூபா 6.6 மில்லியன்
மொத்தம்	ரூபா 23.1 மில்லியன்

மேற்குறிப்பிட்ட ஒத்திணங்கலானது 19 ஜூலை 2024 இல் டபிள்யு. கே. எச். வெகாபிட்டிய, யு. கே. திலக் என். டி சில்வா மற்றும் டி. ஐ. ஹுலங்கமுவ ஆகியோர், 10 ஒக்டோபர் 2011 இல் ரூபா 48/- வீதம் கொள்வனவு செய்யப்பட்ட 33 மில்லியன் லாவ் கேஸ் பி.எல்.சி. இன் பங்குகள் தொடர்பாக EPF இனால் செலுத்தப்பட்ட மேலதிகத் தொகையான ரூபா 231 மில்லியனை, EPF இற்கு செலுத்துவதற்கு இணங்கியதன் நிமித்தம் நிறைவேற்றப்பட்டது.

அறிவுபடைத்த நீதவானின் முன்னால் 19 ஜூலை 2024 இல் இவ்விடயம் அழைக்கப்பட்டபோது, மேலே குறிப்பிட்ட தொகைகள் EPF இற்கு மற்றும் இ.பி.ப.ஆ. இற்கு திறந்த நீதிமன்றத்தில் மூன்று குற்றவாளிகளினால் தீர்ப்பனவு செய்யப்பட்டன. குறித்த நிதிகள் EPF இற்கும் இ.பி.ப.ஆ. இன் இழப்பீட்டு நிதியத்திற்கும் உரியவாறு வரவு வைக்கப்பட்டன.

இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் எதிர் நிஹால் ரதெல்ல
MC Fort/23337/22

ஒரு புலனாய்வின்போது எடுக்கப்பட்ட கூற்றுக்களது பதிவின்போது இ.பி.ப.ஆ. க்கு ஒரு கூற்றினை வழங்கும்போது பொய்யான அல்லது தவறாக இட்டுச்செல்லும் தகவலை வழங்கியமைக்காக திரு. நிஹால் ரதெல்லவிற்கு எதிராக 2022 இல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் முன் சட்ட நடவடிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இது அப்போதைய 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்டவாறு பிரிவு 46ஏ (4) இனை மீறியமைக்காகும்.

அப்போதைய 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்டவாறு பிரிவு 51 ஏ இன் பிரகாரம் குறித்த தவறினை ஒத்திணங்குவதற்கு இ.பி.ப.ஆ. கருதுமாறு ரதெல்லவினை பிரதிநிதித்துவம் செய்யும் வழக்குரைஞரினால் நீதிமன்றத்தில் ஒரு விண்ணப்பம் மேற்கொள்ளப்பட்டது. குற்றவாளிகளுக்கு எதிராக முன்னைய கண்டுபிடிப்புகள் இல்லாமையினை கருத்திற்கொண்டு மற்றும் தொடர்புடைய விடயமானது தற்போது ஒத்திணங்கப்பட்டுள்ளதனால் திரு. ரதெல்லவிற்கு எதிரான வழக்கானது 01 நவம்பர் 2024 இல் திரு. ரதெல்ல இ.பி.ப.ஆ. இன் இழப்பீட்டு நிதியத்திற்கு ரூபா 333,333.33 வரவு வைத்ததன் பின்னர் ஆணைக்குழுவினால் ஒத்திணங்கப்பட்டது.

இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் எதிர் ரியாஷ் மொஹமட் சங்கானி
MC Fort/28266/2023

அப்போதைய 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவுகள் 32 (1) மற்றும் 32 (6) இனை மீறும்வகையில் விதுல்லங்கா பிஎல்சி இன் பங்குகளில் இரண்டு சந்தர்ப்பங்களில் உள்ளுறைபவர் வர்த்தகம் செய்தமைக்காக திரு. ரியாஷ் மொஹமட் சங்கானி இக்கு எதிராக இ.பி.ப.ஆ. இனால் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் 2023 இல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது..

இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

மூலோபாய இலக்கு 2
முதலீட்டாளர் நலனை பாதுகாத்தல்

இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் எதிர் ரியாஷ் மொஹமட் சங்கானி
MC Fort/33954/2024

அப்போதைய 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 32 (1) இனை மீறும்வகையில் விதுல்லங்கா பிஎல்சி இன் பங்குகளில் ஒரு சந்தர்ப்பத்தில் உள்ளுறைபவர் வர்த்தகம் செய்தமைக்காக திரு. ரியாஷ் மொஹமட் சங்கானி இக்கு எதிராக இ.பி.ப.ஆ. இனால் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் 2024 இல் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் எதிர் ரியாஷ் மொஹமட் சங்கானி
MC Fort/33955/2024

அப்போதைய 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 32 (1) இனை மீறும்வகையில் விதுல்லங்கா பிஎல்சி இன் பங்குகளில் ஒரு சந்தர்ப்பத்தில் உள்ளுறைபவர் வர்த்தகம் செய்தமைக்காக திரு. ரியாஷ் மொஹமட் சங்கானி இக்கு எதிராக இ.பி.ப.ஆ. இனால் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் 2024 இல் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் எதிர் டபிள்யு.ஈ.எம். வீரசிங்க, ஈ.ஏ.குணவர்தன மற்றும் எஸ்.எம். டி ஆர். குணசேகர
MC Fort/28328/23

அப்போதைய 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 51 (1) (ஏ) உடன் பிரிவு 51(2) இனையும் சேர்த்து வாசித்து இதன் கீழ் தண்டிக்கத்தக்கதான 18 டிசம்பர் 2001 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215-2 இல் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு விதிகளில் விதி இலக்கம் 12 இனை மீறி பிம்புத் வைனான்ஸ் பிஎல்சி இன் பங்குகளில் சந்தை கையாளுகை தவறினை இழைத்தமைக்காக திரு. டபிள்யு.ஈ.எம்.வீரசிங்க, திரு. ஈ.ஏ.குணவர்தன மற்றும் திரு. எஸ்.எம். டி ஆர் குணசேகர ஆகியோருக்கு எதிராக 2023 இல் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

தரப்பினர்களுக்கு இன்னமும் அழைப்பாணைகள் வழங்கப்படவுள்ளன.

இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் எதிர கே.ஏ.எல்.டி. லங்கா கன்னங்கர
MC Fort/28706/23

அப்போதைய 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் தண்டிக்கத்தக்கதான 18 டிசம்பர் 2001 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215-2 இல் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு விதிகளில் விதி இலக்கம் 12 இனை மீறி ரெக்னிஸ் லங்கா பிஎல்சி இன் பங்குகளில் ஒரு தவறாகக் காணப்பட்ட சந்தை கையாளுகைக்காக குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக 2023 இல் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் எதிர் கே.ஏ.எல்.டி. லங்கா கன்னங்கர
MC Fort/28707/23

அப்போதைய 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் தண்டிக்கத்தக்கதான 18 டிசம்பர் 2001 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215-2 இல் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு விதிகளில் விதி இலக்கம் 12 இனை மீறி எஸ்கொட் ஹோல்டிங்ஸ் பிஎல்சி இன் பங்குகளில் ஒரு தவறாகக் காணப்பட்ட சந்தை கையாளுகைக்காக குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக 2023 இல் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

சிந்தக்க மென்டிஸ் எதிர் கோவிந்தசாமி ரமணன் மற்றும் திரு. கனகரத்தினம் நவீன்காந்த்
MC Fort/28553/23

அப்போதைய 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 113(பி) மற்றும் 102 மற்றும் 2001 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215-2 இல் பிரசுரிக்கப்பட்டவாறான இ.பி.ப.ஆ. விதிகளில் விதி இலக்கம் 12 இல் ஓர் தண்டிக்கத்தகு தவறுகளான இன்டஸ்ட்ரியல் அஸ்பால்ட்ஸ் பிஎல்சி இன் பங்குகளில் சந்தை கையாளுகை, சந்தை கையாளுகையினை மேற்கொள்வதற்கு சதி செய்தமை மற்றும் தவறிழைப்பதற்கு உதவியாயும் உடந்தையாயும் இருந்தமைக்காக திரு. கோவிந்தசாமி ரமணன் மற்றும் திரு. கனகரத்தினம் நவீன்காந்த் ஆகியோருக்கு எதிராக 2023 இல் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதன் பின்னர் திரு. ஜி ரமணன் அவர்கள் ஏனையவற்றுக்கிடையில் நீதவான் நீதிமன்றத்தின் கட்டளையினையும் இவ்வழக்கில் அவருக்கெதிராக வழங்கப்பட்ட அழைப்பாணைகளையும் நீக்குமாறு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு உறுதிகேள் பேராணையினை (கீழே பார்க்கவும் **CA/Writ/111/24**) தாக்கல் செய்தார். மேன்முறையீட்டு நீதிமன்றமானது நீதவான் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு ஒரு அறிவித்தலையும் இடைக்கால கட்டளைகளையும் வழங்கியது.

இதன் பிரகாரம், இவ்விடயமானது நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டுள்ளது.

> முதலீட்டாளர்களது அக்கறைகளை பாதுகாக்கும்வேளை ஒரு நியாயமாக, ஒழுங்கான, செயற்திறனான மற்றும் வெளிப்படையான பிணையங்கள் சந்தையினை பராமரிக்கும் அதன் கடப்பாட்டின் ஒரு பகுதியாக, இ.பி.ப.ஆ. இற்கு சந்தை நிறுவனங்கள், சந்தை இடையீட்டாளர்கள், பதிவுசெய்யப்பட்ட நபர்கள், பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகள் மற்றும் பட்டியலிடப்பட்ட வெளிநாட்டு நிறுவனங்களின் நடவடிக்கைகளில் விசாரணையினை மேற்கொண்டு புலனாய்வு செய்வதற்காக வலுவளிக்கப்பட்டுள்ளது.

இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் எதிர் கோவிந்தசாமி ரமணன்
MC Fort/29040/24

அப்போதைய 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2001 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215-2 இல் பிரசுரிக்கப்பட்டவாறான இ.பி.ப.ஆ. விதிகளில் விதி இலக்கம் 12 இல் ஓர் தண்டிக்கத்தகு தவறுகளான இன்டஸ்ட்ரியல் அஸ்பால்ட்ஸ் பிஎல்சி இன் பங்குகளில் சந்தை கையாளுகை தவறினை இழைத்தமைக்காக திரு. கோவிந்தசாமி ரமணனுக்கு எதிராக

2024 இல் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அழைப்பாணைகள் வழங்கப்பட்டன. அதன் பின்னர் திரு. ஜி ரமணன் அவர்கள் ஏனையவற்றுக்கிடையில் நீதவான் நீதிமன்றத்தின் கட்டளையினையும் இவ்வழக்கில் அவருக்கெதிராக வழங்கப்பட்ட அழைப்பாணைகளையும் நீக்குமாறு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு உறுதிகேள் பேராணையினை (கீழே பார்க்கவும் CA/ Writ/115/24) தாக்கல் செய்தார். மேன்முறையீட்டு நீதிமன்றமானது நீதவான் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு ஒரு அறிவித்தலையும் இடைக்கால கட்டளைகளையும் வழங்கியது.

இதன் பிரகாரம், இவ்விடயமானது நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டுள்ளது.

இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் எதிர் அமானா எஸட் லிமிட்டட், அதன் பணிப்பாளர்கள் (ஏ.ஏ.எம்.ஹரூன், எம்.ஈ.சஹீட், எல்.யாதவ்) மற்றும் முன்னாள் பிரதம முதலீட்டு அதிகாரி (எஸ்.நிலாம்) MC Fort/30437/24

அப்போதைய 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (1) (ஏ) இன் ஏற்பாடுகளின் கீழ் மற்றும் குறித்த சட்டத்தின் பிரிவு 51 (3) உடன் சேர்த்து வாசிக்கும்போது, விதிக்கப்பட்ட தேவைப்பாடுகள் 2015 இல் ஒரு பணிப்புரையினூடாக வழங்கப்பட்டது. இப்பணிப்புரையில் வழங்கப்பட்டுள்ள சந்தை இடையீட்டாளர்களுக்கு பொருத்தமான முறைமைப்படுத்தல் நியமங்களை மீறி செயற்பட்டமைக்காக அமானா எஸட் லிமிட்டட், அதன் பணிப்பாளர்கள் மற்றும் குறித்த காலப்பகுதியில் சேவையாற்றிய பிரதம முதலீட்டு அதிகாரி ஆகியோருக்கு எதிராக 2024 இல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் தரப்பினர்களுக்கு இன்னமும் அழைப்பாணைகள் வழங்கப்படவுள்ளதுடன், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பேராணை விண்ணப்ப இலக்கம் CA/Writ/203/24 இன் மூலம் வழக்கானது நிறுத்தப்பட்டுள்ளது.

இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் எதிர் கே.ஏ.எல்.டி. லங்கா கன்னங்கர மற்றும் கபில சேனரத் MC Fort/36468/24

அப்போதைய 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 113(பி) மற்றும் 102 மற்றும் 2001 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215-2 இல் பிரசுரிக்கப்பட்டவாறான இ.பி.ப.ஆ. விதிகளில் விதி இலக்கம் 12 இல் ஓர் தண்டிக்கத்தகு தவறுகளான ஓனாலி ஹோல்டிங்ஸ் பிஎல்சி இன் பங்குகளில் சந்தை கையாளுகை தவறினை இழைத்தமைக்காக மேற்குறிப்பிட்ட நபர்களுக்கு எதிராக 2024 இல் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அழைப்பாணைகள் இன்னமும் வழங்கப்படவுள்ளதுடன் வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் எதிர் எஸ்.எம்.டி.என்.பி. பண்டா MC Fort/ 28831/24

அப்போதைய 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் 2001 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215-2 இல் பிரசுரிக்கப்பட்டவாறான இ.பி.ப.ஆ. விதிகளில் விதி இலக்கம் 12 இல் ஓர் தண்டிக்கத்தகு தவறுகளான பாம் கார்டன் ஹோட்டல்ஸ் பிஎல்சி இன் பங்குகளில் சந்தை கையாளுகை தவறினை இழைத்தமைக்காக கலாநிதி. எஸ்.எம்.டி.என்.பி. பண்டா அவர்களுக்கு எதிராக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கலாநிதி. எஸ்.எம்.டி.என்.பி. பண்டா அவர்களுக்கு அழைப்பாணைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வழக்கானது மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் CA/ Writ/292/24 இன் மூலம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் எதிர் எஸ்.எம்.டி.என்.பி. பண்டா மற்றும் எஸ்.எம். அருணா உபேந்திர பிரேமரத்ன பண்டா MC Fort/28830/24

அப்போதைய 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 113(பி) மற்றும் 102 மற்றும் 2001 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215-2 இல் பிரசுரிக்கப்பட்டவாறான இ.பி.ப.ஆ. விதிகளில் விதி இலக்கம் 12 இல் ஓர் தண்டிக்கத்தகு தவறுகளான எசோசியேட்டட் மோட்டர் வைனான்ஸ் கம்பனி பிஎல்சி இன் பங்குகளில் சந்தை கையாளுகை, சந்தை கையாளுகை தவறினை மேற்கொள்வதற்கு சதி செய்தமை மற்றும் தவறிழைப்பதற்கு உதவியாயும் உடந்தையாயும் இருத்தமைக்காக கலாநிதி.எஸ்.எம்.டி.என்.பி. பண்டா மற்றும் திரு. எஸ். எம்.அருணா உபேந்திர பிரேமரத்ன பண்டா ஆகியோருக்கு எதிராக 2024 இல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கலாநிதி. எஸ்.எம்.டி.என்.பி. பண்டா மற்றும் திரு. எஸ்.எம். அருணா உபேந்திர பிரேமரத்ன பண்டா ஆகியோருக்கு அழைப்பாணைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வழக்கானது மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் CA/Writ/293/24 மற்றும் CA/Writ/294/24 இன் மூலம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் எதிர் கஹாவாலகே தனுஷ்க குணரத்ன MC Fort/32066/24

அப்போதைய 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் 2001 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்டவாறான இ.பி.ப.ஆ. விதிகளில் விதி இலக்கம் 12 இல் ஓர் தண்டிக்கத்தகு தவறுகளான லங்கா வால்டைல்ஸ் பிஎல்சி இன் பங்குகளில் சந்தை கையாளுகை தவறினை இழைத்தமைக்காக கே.டி.குணரத்ன அவர்களுக்கு எதிராக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

திரு. குணரத்ன அவர்களுக்கு அழைப்பாணைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

டலிப் தவ்வீக் அல் நகீப் எதிர் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு WP/HCCA/LA/COL/158/17(LA) - DC வழக்கு இலக்கம் DSP/20/

மேற்குறிப்பிட்ட வழக்கானது இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இற்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது விண்ணப்பதாரி ஹீத் அன்ட் கம்பனி (சிலோன்) லிமிட்டட்டினால் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கட்டாயப்படுத்தும் ஏற்பாடுகளை மீறி பங்கு வழங்கலினை மேற்கொண்டுள்ளமையானது ஹன்டர் அன்ட் கம்பனி லிமிட்டட்டில், விண்ணப்பதாரி (தற்போது காலமாகியுள்ளார்) 14% பங்குதாரர் என்பதனால் அதன் தாக்கத்தையிட்டு ஒரு புலனாய்வினை நடாத்துமாறு வேண்டியுள்ளார். 26 ஒக்டோபர் 2017 திகதியிடப்பட்ட கட்டளையின் மூலம், மாவட்ட நீதிமன்றமானது அவ்விடயத்தினை கேட்பதற்கு அதற்கு நியாயாதிக்கம் இல்லையென வழக்கினை தள்ளுபடி செய்தது.

மூலோபாய இலக்கு 2
முதலீட்டாளர் நலனை பாதுகாத்தல்

விண்ணப்பதாரி மேல் மாகாணத்தின் சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் அந்த கட்டளைக்கு எதிராக மேன்முறையிடுவதற்கான அனுமதி வேண்டி விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார். இவ்வழக்கானது குறித்த நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது. .

டலிப் தவ்வீக் அல் நகீப் எதிர் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

WP/HCCA/COL/175/2017/F, WP/HCCA/LA/COL/158/17 (LA) உடன் இணைக்கப்பட்டுள்ளது

விண்ணப்பதாரி (டலிப் தவ்வீக் அல் நகீப்) வழக்கு இலக்கம் WP/HCCA/LA/COL/158/17 (LA) இன் கீழ் எந்த கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு அவர் அனுமதி பெற்றாரோ அதற்கு எதிராக மற்றுமோர் மேன்முறையீட்டினை ஏனையவற்றுக்கிடையில் பின்வருவனவற்றினை வேண்டி தாக்கல் செய்தார்.

- ☐ வழக்கு இலக்கம் DSP/20/2016 இல் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் அறிவுடைத்த நீதவானினால் மேற்கொள்ளப்பட்ட 26 ஒக்டோபர் 2017 திகதியிடப்பட்ட கட்டளையினை நிறுத்தி வைக்குமாறு /திருப்புமாறும்
- ☐ கொழும்பு கோட்டை நீதிமன்றத்திற்கு வழக்கு இலக்கம் DSP/20/2016 இனை விசாரித்து தீர்மானம் மேற்கொள்வதற்கான நியாயாதிக்கம் உள்ளதென பிரகடனப்படுத்தும் கட்டளையினை மேற்கொள்வதற்கு
- ☐ வழக்கு இலக்கம் DSP/20/2016 இல் ஏற்கனவே எழுப்பப்பட்ட அனைத்து விடயங்கள் மற்றும் அவ்வழக்கினது மதிப்பு ஆகிவற்றின் விளக்கத்தினை தொடர்வதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினை பணிக்குமாறு ஒரு கட்டளையினை மேற்கொள்ளுமாறு அல்லது.

மாற்றீடாக நீதிமன்றம் தீர்மானிக்கும் விதத்தில், சரியான நீதிமன்றத்திற்கு வழக்கினை மாற்றல் செய்யுமாறு கட்டளையினை மேற்கொள்ளுமாறும், இது வழக்கின் மதிப்பில் நடவடிக்கைளினை கேட்டு தீர்மானிப்பதற்கான ஒரு பணிப்புரையுடன் ஆகும்.

இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

ரியாஷ் மொஹமட் சங்கானி எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனையோர்

CA/Writ/301/2023

ரியாஷ் மொஹமட் சங்கானி (விண்ணப்பதாரி) இந்த விண்ணப்பத்தினை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், விண்ணப்பதாரியினால் இழைக்கப்பட்ட நான்கு உள்ளுறைபவர் வர்த்தகத் தவறுகளை ஒத்திணங்குவதற்கு ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட தொகையினை எதிர்த்து மேற்கொண்டுள்ளார். அவர் ஏனையவற்றுக்கிடையில் இ.பி.ப.ஆ. இனை பின்வருவனவற்றினை பணிப்புறுத்தும் மற்றும் /அல்லது கட்டாயப்படுத்தும் ஆணையீட்டெழுத்தாணையினை மேன்முறையீட்டு நீதிமன்றத்திலிருந்து வேண்டுகின்றார்:

அ) விண்ணப்பதாரியினால் இழைக்கப்பட்ட நான்கு தவறுகளை, விண்ணப்பதாரியினால் அடையப்பெற்ற ஏதேனும் இலாபத்திற்கு ஏற்ப நியாயமான மற்றும் விகிதாசாரமான ஒரு தொகைக்கு ஒத்திணங்குவதற்கு - மற்றும்

ஆ) விண்ணப்பதாரிக்கு எதிராக விடயத்தினை ஒத்திணங்குவதற்கு இ.பி.ப.ஆ. இனால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் தொடர்பாக இ.பி.ப.ஆ. விண்ணப்பதாரி தொடர்பான ஏதேனும் தகவல்களை பிரசுரிக்காமலிருப்பதற்கு.

இவ்வழக்கானது மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

ரியாஷ் மொஹமட் சங்கானி எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனையோா

CA/Writ/797/2023

ரியாஷ் மொஹமட் சங்கானி (விண்ணப்பதாரி) இந்த விண்ணப்பத்தினை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஏனையவற்றுக்கிடையில் பின்வருவனவற்றை வேண்டி தாக்கல் செய்தார். அவரால் இழைக்கப்பட்ட நான்கு தவறுகளை ஒத்திணங்குவதற்கான அதன் முன்னைய தீர்மானத்தினை இ.பி.ப.ஆ. வாபஸ் பெறுவதற்கான தீர்மானத்தினை நீக்கும் உறுதிகேள் பேராணையினை வேண்டியும், விண்ணப்பதாரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதனை தொடரும் இ.பி.ப.ஆ. இன் தீர்மானத்தினை நீக்குவதற்கும் ஆகும்.

விண்ணப்பதாரியினால் இழைக்கப்பட்ட நான்கு தவறுகளை, விண்ணப்பதாரியினால் அடையப்பெற்ற ஏதேனும் இலாபத்திற்கு ஏற்ப நியாயமான மற்றும் விகிதாசாரமான ஒரு தொகைக்கு ஒத்திணங்குவதற்கு இ.பி.ப.ஆ. இனை கட்டாயப்படுத்தும் ஒரு ஆணையீட்டெழுத்தாணையினை விண்ணப்பதாரி வேண்டியுள்ளார்.

இவ்வழக்கானது மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

துஷான் விக்கிரமசிங்க எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் மற்றுமொருவா

CA/Writ/466/2024

இ.பி.ப.ஆ. இனால் திரு. விக்கிரமசிங்கவிற்கு எதிராக விதிக்கப்பட்ட நிர்வாகத் தண்டப்பணமான ரூபா 1,000,000/- இனை செலுத்தாமைக்காக அவருக்கு எதிராக (ஏனையவற்றுக்கிடையில்) மேலதிக நடவடிக்கை எடுப்பதிலிருந்து இ.பி.ப.ஆ. இனை தடைசெய்வதற்காக அவர் இ.பி.ப.ஆ. இனை 1ஆம் பிரதிவாதியாக குறிப்பிட்டு இ.பி.ப.ஆ. இற்கு எதிராகவும் 2ஆவது பிரதிவாதியாக பணிப்பாளர் நாயகத்திற்கு எதிராகவும் மேற்குறிப்பிட்ட பேராணை விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார்.

மேற்குறிப்பிட்ட நிர்வாக தண்டனை இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 178 (1) (ii) இன் பிரகாரம் இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 175 (1) (பி) இனை மீறியமைக்காகவும், கெப்பிட்டல் ட்ரஸ்ட் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்டின் பங்குத்தரகர் உரிமத்தினை புதுப்பிப்பதற்காக ஒரு முக்கிய முகாமைத்துவ நபராக இ.பி.ப.ஆ. இற்கு 21 ஜூலை 2023 திகதியிடப்பட்ட சமர்ப்பிக்கப்பட்ட அவரது சத்தியக்கடதாசியில் பொய்யான மற்றும் பிழையான தகவல்களை வழங்கியமைக்காகவும் ஆகும்.

இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

கோவிந்தசாமி ரமணன் எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் மற்றுமொருவர்

CA/Writ/60/2024

கோவிந்தசாமி ரமணன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இ.பி.ப.ஆ., பணிப்பாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டு மேற்குறிப்பட்ட பேராணை விண்ணப்பத்தினை ஜனவரி 2024 இல் தாக்கல் செய்தார். இது ஏனையவற்றுக்கிடையில், 1995 இன் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் கோவையின் விதி இலக்கம் 30 (1) இனை மீறியதில் கம்பனியின் நடத்தை தொடர்பாக ஒரு பொது பட்டியலிடப்பட்ட கம்பனியின் பணிப்பாளர் என்ற தரவத்தில் அவருக்கு வழங்கப்பட்ட வழக்கறிவித்தலை நீக்குமாறு உறுதிகேள் பேராணையினை வேண்டியும், அப்போதைய 1987 இன் 36 ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (3) இன் பிரகாரம் அவருக்கு வழங்கப்பட்ட காரணங் காட்டு அறிவித்தலை நீக்குமாறு வேண்டியும் ஆகும். இவ்விடயத்தில் ஏற்பட்ட புதிய முன்னேற்றங்கள் காரணமாக மேற்குறிப்பிட்ட மீறல்கள் தொடர்பாக பொது பட்டியலிடப்பட்ட கம்பனிக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமலிருப்பதற்கு இ.பி.ப.ஆ. இனால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தினை கருத்திற்கோண்டு விண்ணப்பதாரி அவரால் தாக்கல் செய்யப்பட்ட உறுதிகேள் பேராணையினை வாபஸ் பெற்றார்.

அமானா எஸட் லிமிட்டட் மற்றும் லவ் யாதவ் எதிர் இ.பி.ப.ஆ., இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஏனையோர்.

CA/Writ/203/24

அப்போதைய 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (1) (ஏ) இன் ஏற்பாடுகளின் கீழ் மற்றும் குறித்த சட்டத்தின் பிரிவு 51 (3) உடன் சேர்த்து வாசிக்கும்போது, விதிக்கப்பட்ட தேவைப்பாடுகள் 2015 இல் ஒரு பணிப்புரையினூடாக வழங்கப்பட்டது. இப்பணிப்புரையில் வழங்கப்பட்டுள்ள சந்தை இடையீட்டாளர்களுக்கு பொருத்தமான முறைமைப்படுத்தல் நியமங்களை மீறி செயற்பட்டமைக்காக அமானா எஸட் லிமிட்டட், அதன் பணிப்பாளர்கள் (ஏ.ஏ.எம்.ஹரூன், எம்.ஈ.சஹீட், எல்.யாதவ்) மற்றும் முன்னாள் பிரதம முதலீட்டு அதிகாரி (எஸ்.நிலாம்) ஆகியோருக்கு எதிராக 2024 இல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அத்தகைய சூழ்நிலையில், அமனா எஸட் லிமிட்டட் மற்றும் லவ் யாதவ் ஆகியோர் இ.பி.ப.ஆ. இற்கு எதிராக ஏனையவற்றுக்கிடையில் பின்வருவனவற்றை வேண்டி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு பேராணை விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார்கள். இங்கு சட்ட நடவடிக்கை முன்னெடுப்பதிலிருந்து இ.பி.ப.ஆ. இனை தடைசெய்ய வேண்டியும் நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் ஏதேனும் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு வேண்டியும் ஆகும். இ.பி.ப.ஆ. இற்கு எதிராக ஒரு இடைக்கால கட்டளை வழங்கப்பட்டுள்ளதுடன் விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது

மிலங்க இந்துரவகே எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனையோர்

CA/Writ/171/24

இ.பி.ப.ஆ. இன் விதிகளின் விதி இலக்கம் 14 இனை மீறி ஏனையவற்றுக்கிடையில் முன்னோடுதல் தவறினை விண்ணப்பதாரி இழைத்துள்ளார் எனும் இ.பி.ப.ஆ. இன் தீர்மானத்தினை நீக்குமாறு வேண்டியும் குறித்த மீறலுக்காக அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் தீர்மானத்தினை நீக்குமாறு வேண்டியும் விண்ணப்பதாரி இப் பேராணை விண்ணப்பத்தினை தாக்கல் செய்துள்ளார். மேன்முறையீட்டு நீதமன்றமானது மறுகட்சியின்றி விண்ணப்பதாரியினை செவிமடுத்து சில இடைக்காலக் கட்டளையினை வழங்கியுள்ளதுடன் விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபை (ந.அ.அ.) எதிர் ஒனாலி ஹோல்டிங்ஸ் பிஎல்சி மற்றும் ஏனையோர்

HC (Civil)/11/2021/CO

ஒனாலி ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. இன் 5% இற்கும் குறையாத வாக்குரிமையுள்ள பங்குகளை வைத்துள்ள ஓர் பங்குதாரரான ந.அ.அ. கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 225 இன் கீழ் அதே சட்டத்தின் பிரிவுகள் 226, 520 மற்றும் 521 உடன் சேர்த்து வாசித்து, ஒனாலி ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. க்கு எதிராக ஓர் விண்ணப்பத்தினை தாக்கல் செய்தது.

இங்கு ஒனாலி ஹோல்டிங்ஸின் நடவடிக்கைகள் கட்டுப்பாட்டிலான ஒரு பொருண்மையான மாற்றத்தின் காரணமாக கம்பனியின் நலன்களுக்கு முரணான விதத்தில் நடாத்தப்படுவதாக கூறப்பட்டுள்ளது. இந்த மாற்றமானது ஒரு கட்டாயக் கொடைமுனைவின் மூலம் ஒனாலி ஹோல்டிங்ஸ் பி.எல். சி இனை பொறுப்பேற்ற லங்கா ரியலிட்டி இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி. இனால் பங்குகளது உரித்துவத்தினூடாக ஏற்பட்டுள்ளது.

ந.அ.அ. (விண்ணப்பதாரி), ஒனாலி ஹோல்டிங்ஸ் பி.எல்.சி., லங்கா ரியலிட்டி இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி, ரேணுகா கெப்பிட்டல் பி.எல். சி, பி.டபிள்யு கோர்ப்பரேட் செக்கடேரியல் (பிரைவேட்) லிமிட்டட், கொ.ப.ப. ஆகியோரை முறையே 1 முதல் 5 ஆவது பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளதுடன் இ.பி.ப.ஆ. 06ஆவது பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பெப்ரவரி 2024 இல் இறுதிக் கட்டளை வழங்கப்பட்டபோது, இ.பி.ப.ஆ. இடமிருந்து விண்ணப்பதாரியினால் எவ்விதமான நிவாரணமும் வேண்டப்படாததனால் நீதிமன்றமானது இ.பி.ப.ஆ. இனை இவ்வழக்கிலிருந்து விடுவித்தது.

லங்கா ரியலிட்டி இன்வெஸ்ட்மன்ட் பிஎல்சி எதிர் நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ஏனையோர்

CA RII Application No. 34/2024

லங்கா ரியலிட்டி இன்வெஸ்ட்மன்ட் பி.எல். சி (விண்ணப்பதாரி) மேற்குயிப்பிட்ட விண்ணப்பத்தினை மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் இ.பி.ப.ஆ. இனை 4ஆம் பிரதிவாதியாக குறிப்பிட்டு ஏனையவற்றுக்கிடையில் பின்வரும் நிவாரணங்களை வேண்டியது:

- ☐ வழக்கு இலக்கம் HC Civil/11/2021/CO (நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தாக்கல் செய்யப்பட்டது) இல் வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் 15 பெப்ரவரி 2024 திகதியிடப்பட்ட ஆட்சேபிக்கப்பட்ட கட்டளையினை நிறுத்தி வைக்கும் ஒரு உத்தரவினை வழங்குவதற்கு - மற்றும்
- ☐ விண்ணப்பதாரிக்கு எதிராக ஒரு முறையான முறையீட்டினை இ.பி.ப.ஆ. இற்கு முன்னால் சமர்ப்பித்து அத்தகைய முறையீட்டில் இ.பி.ப.ஆ. ஒரு தீர்ப்பினை வழங்கும்வரை, குறித்த வர்த்தக மேல் நீதிமன்றத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தினை கேட்டு தீர்மானிப்பதற்கான நியாயாதிக்கத்தினை மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றம் கொண்டிருப்பதில்லை என பிரகடனப்படுத்தி ஒரு உத்தரவினை வழங்குவதற்கு.

இவ்வழக்கில் விண்ணப்பதாரியினால் இ.பி.ப.ஆ. இடமிருந்து எவ்விதமான நிவாரணமும் வேண்டப்படவில்லை என்பதுடன் இவ்விடயமானது மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

சேன யத்தெஹிகே எதிர் இ.பி.ப.ஆ. (CA/Writ/417/2017)

சேன யத்தெஹிகே எதிர் இ.பி.ப.ஆ. (SC/Appeal/164/23)

(இவ்விரண்டும் இ.பி.ப.ஆ. எதிர் சேன யத்தெஹிகே மற்றும் எஸ். தினமணி, MC Fort/12639/19 உடன் இணைந்ததாகும்)

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் கலாநிதி. சேன யத்தெஹிகே மற்றும் திரு. சுப்பிரமணியம் தினமணி ஆகியோருக்கெதிராக உள்ளுறைபவர் வர்த்தகம் மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு மறுமொழியாக வழக்கு இலக்கம் MC Fort/12639/19 இல் முதலாவது குற்றம் சுமத்தப்பட்டவர் இ.பி.ப.ஆ. க்கு எதிராக ஓர் பேராணை விண்ணப்பத்தினை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன் ஏனையவற்றுக்கிடையில் நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் உள்ள நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு வேண்டி தாக்கல் செய்தார். மேன்முறையீட்டு நீதிமன்றமானது நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் உள்ள நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு மறுப்பு தெரிவித்து கட்டளையினை வழங்கியதுடன் அறிவித்தல் வழங்கலில் எழுத்துமூல சமர்ப்பணங்களை தாக்கல் செய்யுமாறு வேண்டியது.

அதன்பின்னர், பேராணை விண்ணப்பம் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட கட்டளைக்கு எதிர்ப்பு தெரிவித்து குற்றஞ்சாட்டப்பட்டவர் உயர்நீதிமன்றத்திற்கு விசேட அனுமதிக்கான மேன்முறையீடு செய்தார். உயர்நீதிமன்றமானது விண்ணப்பதாரியின் விண்ணப்பத்திற்கு அனுமதி வழங்கியதுடன் விசாரணைக்காக விடயத்தினை நிர்ணயித்தது. இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

ஷோ வொலஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி மற்றும் சமிந்திர இராஜையா எதிர் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, சிந்தக்க மென்டிஸ் மற்றும் ஏனையோர்

CA/Writ/460/2023

விண்ணப்பதாரிகள் ஏனையவற்றுக்கிடையில் 1ஆவது பிரதிவாதியினால் வழங்கப்பட்ட வழக்கு அறிவித்தலுக்கு எதிராக ஒரு உறுதிகேள் பேராணையினை வழங்குவதற்காகவும், 1ஆம் பிரதிவாதி மற்றும் /அல்லது 2ஆம் பிரதிவாதி மற்றும் /அல்லது 3ஆம் பிரதிவாதிகளை விண்ணப்பதாரிகளுக்கு எதிராக குற்றவியல்

மூலோபாய இலக்கு 2
முதலீட்டாளர் நலனை பாதுகாத்தல்

அல்லது ஏனைய சட்ட நடவடிக்கைகளை தாக்கல் செய்வதிலிருந்து கட்டுப்படுத்தும் ஒரு தடைப்பேராணையினை வேண்டியும் ஒரு விண்ணப்பத்தினை தாக்கல் செய்துள்ளார்கள். இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

கலாநிதி. செனவிரத்ன முதியன்சலாகே தம்மிக்க நரேந்திர பிரேமத்ன பண்டா எதிர் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் ஏனையோர்

CA/Writ/292/2024

சந்தைக் கையாளுகைக்காக கலாநிதி. செனவிரத்ன முதியன்சலாகே தம்மிக்க நரேந்திர பிரேமத்ன பண்டாவுக்கு எதிராக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் முன்னாள் இ.பி.ப.ஆ. இனால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு (MC/Fort/28831/24) பதிலளிக்கும் விதமாக குற்றஞ்சாட்டப்பட்டவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஏனையவற்றுக்கிடையில் நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் உள்ள நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு இ.பி.ப.ஆ. இற்கு எதிராக ஒரு பேராணை விண்ணப்பத்தினை தாக்கல் செய்துள்ளார்.

இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது

கலாநிதி. செனவிரத்ன முதியன்சலாகே தம்மிக்க நரேந்திர பிரேமத்ன பண்டா எதிர் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் ஏனையோர்

CA/Writ/293/2024

சந்தைக் கையாளுகைக்காக கலாநிதி. செனவிரத்ன முதியன்சலாகே தம்மிக்க நரேந்திர பிரேமத்ன பண்டாவுக்கு எதிராக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் முன்னாள் இ.பி.ப.ஆ. இனால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு (MC/Fort/28830/24) பதிலளிக்கும் விதமாக குற்றஞ்சாட்டப்பட்டவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஏனையவற்றுக்கிடையில் நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் உள்ள நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு இ.பி.ப.ஆ. இற்கு எதிராக ஒரு பேராணை விண்ணப்பத்தினை தாக்கல் செய்துள்ளார்.

இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

கலாநிதி. செனவிரத்ன முதியன்சலாகே தம்மிக்க நரேந்திர பிரேமத்ன பண்டா எதிர் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் ஏனையோர்

CA/Writ/294/2024

சந்தைக் கையாளுகைக்காகவும் அதற்கு உதவியாயும் உடந்தையாயும் இருந்தமைக்காக கலாநிதி. செனவிரத்ன முதியன்சலாகே தம்மிக்க நரேந்திர பிரேமத்ன பண்டாவுக்கு எதிராக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் முன்னாள் இ.பி.ப.ஆ. இனால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு (MC/Fort/28830/24) பதிலளிக்கும் விதமாக குற்றஞ்சாட்டப்பட்டவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஏனையவற்றுக்கிடையில் நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் உள்ள நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு இ.பி.ப.ஆ. இற்கு எதிராக ஒரு பேராணை விண்ணப்பத்தினை தாக்கல் செய்துள்ளார்.

இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது

ஜி. ரமணன் எதிர் அறிவுபடைத்த நீதிவான், கொழும்பு கோட்டை, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, சிந்தக்க மென்டிஸ் மற்றும் ஏனையோர்

CA/Writ/111/2024

விண்ணப்பதாரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பின்வருவனவற்றை வேண்டி ஒரு பேராணை விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார். இ.பி.ப.ஆ. இனால் விண்ணப்பதாரிக்கும் மற்றுமொருவருக்கும் எதிராக கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் கூறப்பட்ட சதி மற்றும் சந்தை கையாளுகைக்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் விண்ணப்பதாரிக்கு எதிராக வழங்கப்பட்ட அழைப்பாணைகள் மற்றும் நீதிவானின் கட்டளையினை நீக்குமாறு ஒரு உறுதிகேள் பேராணையினையும் வாதாடப்பட்ட தீர்மானங்கள் மற்றும் வழங்கப்பட்ட வழக்கறிவித்தலின் அடிப்படையில் விண்ணப்பதாரிக்கு எதிராக மேலதிக நடவடிக்கை எடுப்பதிலிருந்து இ.பி.ப.ஆ. மற்றும் ஏனைய பிரதிவாதிகளை தடுப்பதற்காக ஒரு தடைப்பேராணையினையும் வேண்டுகின்றார். நீதிமன்றமானது அறிவித்தலையும் பிரதிவாதிகளுக்கு எதிராக நீதிவான் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு இடைக்கால கட்டளையினையும் வழங்கியது. அதன்பின்னர், இ.பி.ப.ஆ., பணிப்பாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபர் மற்றும் ஏனைய இரண்டு பிரதிவாதிகள் வழங்கப்பட்ட இடைக்கால கட்டளைகளை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்கள். பேராணை விண்ணப்பமும் மேன்முறையீடும் அவற்றின் உரிய நீதிமன்றங்களின் முன்னால் தற்போது நிலுவையிலுள்ளன.

ஜி. ரமணன் எதிர் அறிவுபடைத்த நீதிவான், கொழும்பு கோட்டை, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, சிந்தக்க மென்டிஸ் மற்றும் ஏனையோர்

CA/Writ/115/2024

விண்ணப்பதாரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பின்வருவனவற்றை வேண்டி ஒரு பேராணை விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார். இ.பி.ப.ஆ. இனால் விண்ணப்பதாரிக்கு எதிராக கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் சந்தை கையாளுகைக்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் விண்ணப்பதாரிக்கு எதிராக வழங்கப்பட்ட அழைப்பாணைகள் மற்றும் நீதிவானின் கட்டளையினை நீக்குமாறு ஒரு ஒரு உறுதிகேள் பேராணையினையும் வாதாடப்பட்ட தீர்மானங்கள் மற்றும் வழங்கப்பட்ட வழக்கறிவித்தலின் அடிப்படையில் விண்ணப்பதாரிக்கு எதிராக மேலதிக நடவடிக்கை எடுப்பதிலிருந்து இ.பி.ப.ஆ. மற்றும் ஏனைய பிரதிவாதிகளை தடுப்பதற்காக ஒரு தடைப்பேராணையினையும் வேண்டுகின்றார். நீதிமன்றமானது அறிவித்தலையும் பிரதிவாதிகளுக்கு எதிராக நீதிவான் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு இடைக்கால கட்டளையினையும் வழங்கியது. அதன்பின்னர், இ.பி.ப.ஆ., பணிப்பாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபர் மற்றும் ஏனைய இரண்டு பிரதிவாதிகள் வழங்கப்பட்ட இடைக்கால கட்டளைகளை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்கள். பேராணை விண்ணப்பமும் மேன்முறையீடும் அவற்றின் உரிய நீதிமன்றங்களின் முன்னால் தற்போது நிலுவையிலுள்ளன.

கெப்பிட்டல் எலாயன்ஸ் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் எதிர் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் ஏனையோா;

CA/Writ/789/24

விண்ணப்பதாரி பங்குத் தரகு நிறுவனத்திற்கு எதிராக ஒரு வாடிக்கையாளரினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கு கொழும்பு பங்குப் பரிவர்த்தனையினை ஒரு நேரடியான கேட்டலை நடத்துமாறு இ.பி.ப.ஆ. இன் பணிப்புரையினை ஏனையவற்றுக்கிடையில் நீக்குமாறு வேண்டி விண்ணப்பதாரி இ.பி.ப.ஆ. இற்கு எதிராக இந்த பேராணை விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார். இவ்விடயமானது வருட இறுதியியல் நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

ஜி.சி.எஸ். ராமநாயக்க மற்றும் மற்றுமோர் எதிர் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் ஏனையோர்

CA/Writ/411/2024

விண்ணப்பதாரிகள் LOLC செக்கியூரிட்டீஸ் லிமிட்டட்டினால் அவர்களது மத்திய வைப்புத் திட்டக் (ம.வை.தி.) கணக்கிற்கு அங்கீகரிக்கப்படாத பங்குக் கொள்வனவுகளை மேற்கொண்டதாகவும் இதன் விளைவாக விண்ணப்பதாரிக்கு நிதியியல் நட்டம் ஏற்பட்டுள்ளதாக சாட்டியுரைத்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு பேராணை விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார்கள். இ.பி.ப.ஆ., கொழும்பு பங்குப் பரிவர்த்தனை (கொ.ப.ப.), கொ.ப.ப. இன் பிரதம நிறைவேற்று அதிகாரி, வரையறுக்கப்பட்ட

(தனியார்) மத்திய வைப்புத் திட்டம், LOLC செக்கியூரிட்டீஸ் மற்றும் அதன் மூன்று அதிகாரிகள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டார்கள். விண்ணப்பதாரியினால் வேண்டப்படும் நிவாரணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன. அவர்களது ம.வை.தி. கணக்கினை மீட்டெடுப்பதற்கு சில பிரகடனங்கள் மற்றும் ஆணையீட்டெழுத்தாணையினை வழங்குதல், கட்டாயப்படுத்தப்பட்ட விற்பனை மற்றும் வட்டிக் கட்டணத்தினை திருப்புதல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கையினை முன்னெடுத்தல் என்பனவாகும். நீதிமன்றமானது பங்குகள் / சொத்துக்களின் கட்டாயப்படுத்தப்பட்ட விற்பனை மற்றும் மீட்பு நடவடிக்கையினை தடைசெய்யும், ம.வை.தி. கணக்கினை அங்கீகரிக்கப்படாத கொள்வனவுகளுக்கு முன்னர் காணப்பட்ட நிலவும் நிலையினை மீட்டமைக்கும் மற்றும் மேற்பார்வையின் கீழ் பிணையங்களது மாற்றலை அனுமதிப்பதற்கும் இடைக்கால கட்டளைகளை வழங்கியது. எவ்வாறாயினும், LOLC செக்கியூரிட்டீஸ் லிமிட்டட் மற்றும் ஏனைய இரண்டு பிரதிவாதிகள் வழங்கப்பட்ட இடைக்கால கட்டளைகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்ததுடன், உயர் நீதிமன்றமானது வழங்கப்பட்ட இடைக்கால கட்டளைகளை நிறுத்திவைத்து வழங்கப்பட்ட அறிவித்தல் (கீழே SC Spl LA 40/2024 இனை பார்வையிடவும்) குறுக்கிடப்படாது உள்ளவாறு விடயத்தினை மேன் முறையீட்டு நீதிமன்றத்திற்கு திருப்பியனுப்பியது. இவ்விடயமானது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

எம்.டி.எம். சுஹேப், டபிள்யு.கே.ஜி. அபேசிங்க மற்றும் பி.கே.ஆர். தேசப்பிரிய எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனையோர்

CA/Writ/189/24

எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி இன் மூன்று பங்குதாரர்கள் கம்பனியினை பட்டியலிலிருந்து அகற்றும் செயன்முறைக்கு எதிராக மற்றும் ஏனையவற்றுக்கிடையில் எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி இன் பட்டியலிலிருந்து அகற்றுதலை தடைசெய்யுமாறு வேண்டி ஒரு வழக்கினை தாக்கல் செய்தார்கள். வழக்கானது ஆதரிக்கப்பட்டதுடன் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பமானது நிராகரிக்கப்பட்டது.

ஏ.கே. அமுனுகம மற்றும் 9 ஏனையோர் எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனையோர்

CA/Writ/312/24

பாதிக்கப்பட்ட பங்குதாரர்களாக கூறப்படும் விண்ணப்பதாரிகளினால் எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி இனால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிலிருந்து நீக்குவதற்கான அங்கீகாரத்தினை வழங்குவதிலிருந்து இ.பி.ப.ஆ. இனை தடைசெய்யக் கோரி ஒரு போராணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது

எல். டீ. பரணாமன மற்றும் ஏழு ஏனையோர் எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனையோர்

CA/Writ/339/24

பாதிக்கப்பட்ட பங்குதாரர்களாக கூறப்படும் விண்ணப்பதாரிகளினால் எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி இனால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிலிருந்து நீக்குவதற்கான அங்கீகாரத்தினை வழங்குவதிலிருந்து இ.பி.ப.ஆ. இனை தடைசெய்யக் கோரி ஒரு போராணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

கே.சி. விக்னராஜா எதிர் இ.பி.ப.ஆ., கொ.ப.ப. மற்றும் ஏனையோர்

SC CHC Appeal 70/2018

ஸ்டான்டர்ட் கெப்பிட்டல் பிஎல்சி மற்றும் அதன் பணிப்பாளர்களுக்கு எதிராக கே.சி. விக்னராஜாவினால் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழிவந்த வழக்கில் CHC/CO/09/2016 வேண்டப்பட்ட நிவாரணங்களை வழங்குவதற்கு கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தின் நிராகரிப்பினை தொடர்ந்து விண்ணப்பதாரி இந்த விண்ணப்பத்தினை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். விண்ணப்பதாரி கம்பனியின் ஒரு பணிப்பாளராகவும் கணக்காய்வுக் குழுவின் தலைவராகவும் முறையற்ற விதத்தில் நீக்கப்பட்டுள்ளார் என கோருகின்றார்.

விண்ணப்பதாரி - மேன்முறையீட்டாளர் இ.பி.ப.ஆ. இனை 07ஆம் பிரதிவாதியாக குறிப்பிட்டுள்ளார். இது கொழும்பு பங்குப் பரிவர்த்தனை (கொ.ப.ப.) மற்றும் அதில் பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளின் நடத்தை மற்றும் அலுவல்களை மேற்பார்வை செய்யும் முறைமைப்படுத்தல் அதிகாரி என்ற அடிப்படையிலாகும். எவ்வாறாயினும், விண்ணப்பதார் - மேன்முறையீட்டாளர் இ.பி.ப.ஆ. இற்கு எதிராக எவ்விதமான நிவாரணத்தையும் வேண்டவில்லை.

விண்ணப்பதாரி - மேன்முறையீட்டாளரது இறப்பினைத் தொடர்ந்து இந்த விண்ணப்பமானது தள்ளுபடி செய்யப்பட்டது.

LOLC செக்கியூரிட்டீஸ் லிமிட்டட் எதிர் ஜீ.வி.எஸ் ராமநாயக்க மற்றும் ஏனையோர்

SC Spl LA Application No.40/2024

விண்ணப்பதாரிகள் LOLC செக்கியூரிட்டீஸ் லிமிட்டட்டினால் அவர்களது மத்திய வைப்புத் திட்டக் (ம.வை.தி.) கணக்கிற்கு அங்கீகரிக்கப்படாத பங்குக் கொள்வனவுகளை மேற்கொண்டதன் விளைவாக நிதியியல் நட்டம் ஏற்பட்டுள்ளதாக சாட்டியுரைத்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு பேராணை விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார்கள். இ.பி.ப.ஆ., கொழும்பு பங்குப் பரிவர்த்தனை (கொ.ப.ப.), கொ.ப.ப. இன் பிரதம நிறைவேற்று அதிகாரி, வரையறுக்கப்பட்ட (தனியார்) மத்திய வைப்புத் திட்டம், LOLC செக்கியூரிட்டீஸ் மற்றும் அதன் மூன்று அதிகாரிகள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டார்கள். விண்ணப்பதாரியினால் வேண்டப்படும் நிவாரணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன. அவர்களது ம.வை.தி. கணக்கினை மீட்டெடுப்பதற்கு சில பிரகடனங்கள் மற்றும் ஆணையீட்டெழுத்தாணையினை வழங்குதல், கட்டாயப்படுத்தப்பட்ட விற்பனை மற்றும் வட்டிக் கட்டணத்தினை திருப்புதல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கையினை முன்னெடுத்தல் என்பனவாகும். நீதிமன்றமானது பங்குகள் / சொத்துக்களின் கட்டாயப்படுத்தப்பட்ட விற்பனை மற்றும் மீட்பு நடவடிக்கையினை தடைசெய்யும், ம.வை.தி. கணக்கினை அங்கீகரிக்கப்படாத கொள்வனவுகளுக்கு முன்னர் காணப்பட்ட நிலவும் நிலையினை மீட்டமைக்கும் மற்றும் மேற்பார்வையின் கீழ் பிணையங்களது மாற்றலை அனுமதிப்பதற்கும் இடைக்கால கட்டளைகளை வழங்கியது. எவ்வாறாயினும், LOLC செக்கியூரிட்டீஸ் லிமிட்டட் மற்றும் ஏனைய இரண்டு பிரதிவாதிகள் வழங்கப்பட்ட இடைக்கால கட்டளைகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்ததுடன், உயர் நீதிமன்றமானது வழங்கப்பட்ட இடைக்கால கட்டளைகளை நிறுத்திவைத்து வழங்கப்பட்ட அறிவித்தல் (கீழே SC Spl LA 40/2024 இனை பார்வையிடவும்) குறுக்கிடப்படாது உள்ளவாறு விடயத்தினை மேன் முறையீட்டு நீதிமன்றத்திற்கு திருப்பியனுப்பியது.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் எதிர் கெப்பிட்டல் ட்ரஸ்ட் ஹோல்டிங்ஸ் மற்றும் துஷான் விக்கிரமசிங்க

SC Spl LA 21/2024 (Appeal from CA/Writ/465/2022)

இந்த மேன்முறையீட்டிற்கான அனுமதி விண்ணப்பமானது 2ஆவது விண்ணப்பதாரி - பிரதிவாதிக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை தாக்கல் செய்வதற்காக இ.பி.ப.ஆ. இனால் எடுக்கப்பட்ட தீர்மானத்தினை நீக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக மற்றும் அதன் வழக்கறிவித்தலில் பிந்தையவரால் தாக்கல் செய்யப்பட்ட பேராணை விண்ணப்பத்திற்கும் (CA/Writ/465/22) எதிராகவும் இ.பி.ப.ஆ. ஆல் தாக்கல் செய்யப்பட்டது.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு எதிர் வி. ஜீ. ரமனண் மற்றும் ஏனையோர்

SC Spl LA Application No.117/2024 (Appeal from CA/Writ/111/2024)

விண்ணப்பதாரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஏனையவற்றுக்கிடையில் நீதிவானது கட்டளையினையும் இ.பி.ப.ஆ. இனால் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில்

மூலோபாய இலக்கு 2

முதலீட்டாளர் நலனை பாதுகாத்தல்

சாட்டியுரைக்கப்பட்ட சதி மற்றும் சந்தை கையாளுகைக்காக தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கில் விண்ணப்பதாரிக்கும் மற்றுமொருவருக்கும் எதிராக வழங்கப்பட்ட அழைப்பாணைகளை நீக்குமாறு உறுதிகேள் பேராணையினை வேண்டியும் பிரதிவாதிகளுக்கு எதிராக வாதாடப்பட்ட தீர்மானங்கள் மற்றும் வழக்கறிவித்தலின் அடிப்படையில் விண்ணப்பதாரிக்கு எதிராக மேலதிக நடவடிக்கையினை எடுப்பதிலிருந்து இ.பி.ப.ஆ. மற்றும் ஏனைய பிரதிவாதிகளை தடைசெய்யும் ஒரு தடைப்பேராணையினையும் வேண்டி ஒரு பேராணை விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார். இ.பி.ப.ஆ., பணிப்பாளர் நாயகம், சட்டமா அதிபர் மற்றும் ஏனைய இரண்டு பிரதிவாதிகள் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு விண்ணப்பத்திற்கான ஒரு விசேட அனுமதியினை தாக்கல் செய்தார்கள் இவ்விடயமானது இன்னமும் ஆதரவளிக்கப்படவுள்ளது.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு எதிர் வி. ஜி. ரமனண் மற்றும் ஏனையோர்

No.118/2024 (Appeal from CA/Writ/115/2024)

விண்ணப்பதாரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஏனையவற்றுக்கிடையில் நீதிவானது கட்டளையினையும் இ.பி.ப.ஆ. இனால் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் சாட்டியுரைக்கப்பட்ட சந்தை கையாளுகைக்காக தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கில் விண்ணப்பதாரிக்கு எதிராக வழங்கப்பட்ட அழைப்பாணைகளை நீக்குமாறு உறுதிகேள் பேராணையினை வேண்டியும் பிரதிவாதிகளுக்கு எதிராக வாதாடப்பட்ட தீர்மானங்கள் மற்றும் வழக்கறிவித்தலின் அடிப்படையில் விண்ணப்பதாரிக்கு எதிராக மேலதிக நடவடிக்கையினை எடுப்பதிலிருந்து இ.பி.ப.ஆ. மற்றும் ஏனைய பிரதிவாதிகளை தடைசெய்யும் ஒரு தடைப்பேராணையினையும் வேண்டி ஒரு பேராணை விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார். நீதிமன்றமானது நீதிவான் நீதிமன்றத்தின் செயன்முறைகளை இடைநிறுத்தி பிரதிவாதிகளுக்க எதிராக அறிவித்தல் மற்றும் இடைக்கால கட்டளைகளை வழங்கியது. இ.பி.ப.ஆ., பணிப்பாளர் நாயகம், சட்டமா அதிபர் மற்றும் ஏனைய இரண்டு பிரதிவாதிகள் வழங்கப்பட்ட இடைக்கால கட்டளைகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்கள். இவ்விடயமானது இன்னமும் ஆதரவளிக்கப்படவுள்ளது.

பஞ்சலிங்கம் எசோசியேட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனையோர்

SC Spl LA Application No.177/2020 now SC Appeal 50/2024

விண்ணப்பதாரி கம்பனி பஞ்சலிங்கம் எசோசியேட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டுள்ள சில பணிப்புரைகளுக்கு எதிராக உறுதிகேள் பேராணைக்காக ஒரு விண்ணப்பத்தினை தாக்கல் செய்துள்ளது. இது HNB பிஎல்சி இல் கம்பனியினால் வைத்திருக்கப்படும் பங்குகள் தொடர்பானது என்பதுடன் இ.ம.வ. இன் குறித்த பணிப்புரையினை நிறுத்திவைக்குமாறு வேண்டியுள்ளது. நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், வங்கி மேற்பார்வை திணைக்களத்தின் இரண்டு பணிப்பாளர்கள் இ.பி.ப.ஆ. உள்ளடங்கலாக நான்கு ஏனையோரும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். மேன்முறையீட்டு நீதிமன்றமானது ஒரு ஆணையினை வழங்குவதற்கு மறுத்ததனால், விண்ணப்பதாரி கம்பனி உயர் நீதி மன்றத்தில் மேன்முறையிடுவதற்கான விசேட அனுமதிக்காக ஒரு விண்ணப்பத்தினை தாக்கல் செய்துள்ளது. இ.பி.ப.ஆ. இடமிருந்து எந்தவிதமான நிவாரணமும் வேண்டப்படவில்லை. இவ்விடயமானது உயர் நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

பொறியிலாளர் ஜி. கபில ரேணுக்க பெரேரா எதிர் மதிப்பிற்குரிய சட்டமா அதிபர் மற்றும் ஏனையோர்

SC/FR/182/2021

விண்ணப்பதாரி செலென்திவா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட் மற்றும் இ.பி.ப.ஆ. (07ஆவது பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளது) உள்ளடங்கலாக 32 ஏனையோருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் விண்ணப்பத்தினை தாக்கல் செய்துள்ளார். இவர் ஏனையவற்றுக்கிடையில் அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட விண்ணப்பதாரியின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அடிப்படை உரிமைகளில் நிகழவுள்ள ஒரு மீறலினை பிரகடனம் செய்யுமாறு வேண்டுகின்றார். விண்ணப்பதாரி செலந்திவா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட் (பொருத்தமான மீள்கட்டமைப்பினூடாக உச்சநிலை செயற்திறன் மட்டத்திற்கு அரச உடைமை விருந்தோம்பல் தேக்கங்களை உருமாற்றும் பிரதான குறிக்கோளைக் கொண்ட ஒரு புதிய அரச உடைமை ஆதன அபிவிருத்திக் கம்பனியாகும்) அரசு நிறுவிய 06 மார்ச் 2020 திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானமானத்தினை வெற்றும் வறிதுமாக்குமாறு ஒரு பிரகடனத்தையும் விண்ணப்பதாரி வேண்டியுள்ளார். கம்பனியின் உரித்துவத்தில் 100 சதவீதத்தினை திறைசேரி வைத்துள்ளது. செலந்திவா இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டட்டினை கொ.ப.ப. இல் பட்டியலிடுவதனை அனுமதிப்பதிலிருந்து இ.பி.ப.ஆ. இனை தடைசெய்யுமாறு இ.பி.ப.ஆ. இல் ஒரு இடைக்கால கட்டளையினை வேண்டியுள்ளார். இவ்விடயமானது உயர் நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

வஜிர விஜேகுணவர்தன எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனையோர்

SC/FR/62/2024

விண்ணப்பதாரி, இ.பி.ப.ஆ. இன் ஒரு முன்னாள் பணிப்பாளர் நாயகம் பெப்ரவரி 2024 இல் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனையோரை குறிப்பிட்டு ஒரு அடிப்படை உரிமைகள் விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார். இதில் ஏனையவற்றுக்கிடையில், அரசியலமைப்பின் உறுப்புரை 12 (1) மற்றும் /அல்லது 14 (1) (ஜி) இல் அவர் சாட்டியுரைத்த தலையீட்டிற்கு நிவாரணத்தினை வேண்டியுள்ளார்.

இவ்விடயமானது 24 ஜுன் 2024 இல் உயர் நீதிமன்றத்தின் முன்னால் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, நீதிமன்றமானது விண்ணப்பதாரிக்கு தொடர்வதற்கான அனுமதியினை வழங்குவதற்கு மறுப்பு தெரிவித்தது.

டி.எச். எதிரிதிலக்க எதிர் எல்டிஎல் ஹோல்டிங்கள், இ.பி.ப.ஆ. மற்றும் 17 ஏனையோர்

SC/FR/263/2024

ஒரு பொது நல வழக்காடியான விண்ணப்பதாரி ஏனையவற்றுக்கிடையில் கணக்காய்வாளர் அதிபதி அவர்களை எல்டிஎல் ஹோல்டிங்ஸ 'ில் கணக்காய்வினை மேற்கொள்ளுமாறு பணிக்கும் ஒரு கட்டளையினை வேண்டி வழக்கினை தாக்கல் செய்தார். கணக்காய்வினை நடத்துவதனைத் தொடர்ந்து ஒரு அறிக்கையினை சமர்ப்பிக்குமாறும், அதுவரைக்கும் எல்டிஎல் ஹோல்டிங்ஸில் ஆரம்ப பொது வழங்கலை நடத்துவதனை தவிர்க்கமாறும் வேண்டியுள்ளார். இதனைத் தொடர்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டதுடன் விடயமானது தள்ளுபடி செய்யப்பட்டது.

ரியாஷ் மொஹமட் சங்கானி எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனையோர்

SC Spl LA 319/2024 (Appeal from CA/Writ/797/2023)

ரியாஷ் சங்கானி CA/Writ/797/2023 தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட கட்டளைக்கு எதிராக மேற்குறிப்பிட்ட விண்ணப்பத்தினை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். இதில் இ.பி.ப.ஆ. மற்றும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

இவ்விடயமானது இன்னமும் ஆதரவளிக்கப்படவேண்டியுள்ளது.

ரியாஷ் மொஹமட் சங்கானி எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனையோா

Spl LA 318/2024 (Appeal from CA/Writ/301/2023)

ரியாஷ் சங்கானி CA/Writ/301/2023 தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட கட்டளைக்கு எதிராக மேற்குறிப்பிட்ட விண்ணப்பத்தினை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். இதில் இ.பி.ப.ஆ. மற்றும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

இவ்விடயமானது இன்னமும் ஆதரவளிக்கப்படவேண்டியுள்ளது.

சென்வின் செக்கியூரிட்டீஸ் லிமிட்டட் எதிர் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

RTIC/Appeal/529/2024

2016 இன் 12 ஆம் இலக்க தகவலறிவதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் மேன்முறையீட்டுக் கம்பனியின் விண்ணப்பமானது சில தகவல்களை சமர்ப்பிப்பதற்கு இ.பி.ப.ஆ. மறுத்ததன் அடிப்படையில், மேன்முறையீட்டாளர் தகவலறிவதற்கான உரிமை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்தார். விசாரணையானது நிலுவையிலுள்ளது

முறையீடுகள் குறைதீர்த்தல் முறைமை

பட்டியலிடப்பட்ட கம்பனிகள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறையீடுகளது நிலவரம் மற்றும் அவற்றுக்கான குறைதீர்த்தல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன: (உருவம் 16:)

உருவம் 16 :பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் தொடர்பான முறையீடுகள் மற்றும் விடயங்களை கையாண்டமை

முறையீட்டின் தன்மை	கையாண்ட முறையீடுகளின் எண்ணிக்கை	மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை
பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பணிப்பாளர்கள் சபையின் நடத்தை	3	03 விடயங்கள் பொருத்தமானவாறு நிறைவு செய்யப்பட்டன.
பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் நடத்தை	8	05 விடயங்கள் பொருத்தமானவாறு நிறைவு செய்யப்பட்டன.
		01 விடயம் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் கவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.
		01 விடயம் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் (உரிய முறைமைப்படுத்தல் அங்கம்) கவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.
இ.பி.ப.ஆ. விதிகள் / கொ.ப.ப. பட்டியலிடல் விதிகளுடன் இணக்கப்பாடின்மை	5	05 விடயங்கள் பொருத்தமானவாறு நிறைவு செய்யப்பட்டன.
ஏனைய நிர்வாக விடயங்கள்	6	05 விடயங்கள் பொருத்தமானவாறு நிறைவு செய்யப்பட்டன.
		01 விடயம் கம்பனிச் செயலாளரின் கவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.
பொருத்தமான நிதியியல் அறிக்கையிடல் கட்டமைப்புடன் இணக்கப்பாடின்மை	1	01 விடயம் பொருத்தமானவாறு நிறைவு செய்யப்பட்டது.
மொத்தம்	23	

மூலோபாய இலக்கு 2

முதலீட்டாளர் நலனை பாதுகாத்தல்

சட்டரீதியான நிதியங்கள்

தீர்வை நிதியம்

தீர்வை நிதியமானது 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 14பி (1), 1991 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கத் திருத்தச்சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கத் திருத்தச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத் திருத்தச் சட்டம் (பழைய இ.பி.ப.ஆ. சட்டம்), என்பவற்றின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டதுடன் இவை 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 156 (1) இனால் நீக்கப்பட்டு மாற்றீடு செய்யப்பட்டது.

2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவுகள் 155 (1) மற்றும் (2), 156 (1), (2) மற்றும் (3) இன் பிரகாரம் தீர்வை நிதியத்தினை செயற்படுத்துவதற்கான செயல்முறை மற்றும் நோக்கங்கள் பின்வருமாறு.

155 (1) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினால் அமைச்சரினால் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய வீதத்தில், உரிமம் பெற்ற பங்குப் பரிமாற்றகமொன்றில் பதிவாகும் ஒவ்வொரு பிணையங்கள் கொள்வனவு மற்றும் விற்பனையிலும் அல்லது அதன் விதிகளுக்கேற்ப கொள்வனவாளராலும் விற்பனையாளராலும் ஓர் தீர்வை விதிக்கப்பட்டு, அறவிடப்பட்டு மற்றும் செலுத்தப்படல் வேண்டும். வெவ்வேறு வகைப்பட்ட பிணையங்களுக்கு வெவ்வேறு கட்டணங்கள் குறிப்பிடப்படலாம்.

(2) இப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையானது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் வேறு ஏதேனும் வரி அல்லது தீர்வைக்கு மேலாகச் செலுத்தப்படல்வேண்டும்.

156 (1) பிரிவு 155 இன் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையை வரவு வைப்பதற்காக தீர்வை நிதியம் எனப்படும் நிதியமொன்று நிருவப்படல்வேண்டும்.

(2) தீர்வை நிதியத்தின் வரவிலுள்ள பணமானது பின்வரும் நோக்கங்களுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படலாம் -

(அ) பிணையங்கள் சந்தையினை விருத்தி செய்வதற்கு;

(ஆ) இழப்பீட்டு நிதியத்தின் வரவிலுள்ள பணத்தை மேம்படுத்துவதற்கு அல்லது இந்த பகுதியின் கீழ் நிறுவப்பட்ட ஆணைக்குழுவின் நிதியத்திற்கு;

(இ) ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு, செயலாற்றுவதற்கு மற்றும் நிறைவேற்றுவதில் முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் செயற்பாடு என்பவற்றுக்கான ஆணைக்குழுவினால் ஆட்பட்ட அனைத்து செலவினங்களையும் சந்திப்பதற்கு;

(ஈ) ஆணைக்குழு பொருத்தமானது எனக் கருதும் பிரகாரம் ஆணைக்குழுவின் பணியாட்களுக்கு வீடமைத்தல், கல்வி, ஆரோக்கியம் மற்றும் போக்குவரத்து நோக்கங்களுக்கு கடன்கள் வழங்குவதற்கு;

(உ) பணிப்பாளர் நாயகம் மற்றும் அதன் அதிகாரிகள் மற்றும் சேவகர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போர் மற்றும் நியமிக்கப்பட்டோர் ஆகியோரது நலனுக்காக நிறுவப்பட்ட ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்கள் மற்றும் ஏனைய திட்டங்களுக்கு பங்களிப்புகளை மேற்கொள்வதற்கு; மற்றும்

(ஊ) ஆணைக்குழுவினால் தகுதியானவர்கள் என தீர்மானிக்கப்பட்டவாறு ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் சேவகர்களுக்கு இலங்கையில் அல்லது வெளிநாட்டில் கற்கைக்கான செலவினங்களுக்கு பணங்கொடுத்து தீர்ப்பதற்கு;

(3) தீர்வை நிதியத்தின் வரவிலுள்ள ஏதேனும் மேலதிக பணத்தை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய விதத்தில் தீர்வை நிதியத்தினை விருத்திசெய்யும் நோக்கத்திற்காக ஆணைக்குழு முதலீடு செய்யலாம்.

உரித்துவப் பிணையங்களுக்கான இ.பி.ப.ஆ. இன் தீர்வை

கொ.ப.ப. இன் வழிகாட்டல்களின் பிரகாரம், 1 ஆகஸ்ட் 2010 முதல் இ.பி.ப.ஆ. ஆல் விதிக்கப்பட்டுள்ள தீர்வை வீதமானது இரண்டாவது தடவையாக ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.09% இலிருந்து ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.072% ஆக குறைக்கப்பட்டுள்ளது. முன்னைய குறைப்பானது 1 டிசம்பர் 2003 முதல் பிரயோகத்திலுள்ள தீர்வைக் கட்டணம் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.1% இலிருந்து 0.09% ஆகக் குறைக்கப்பட்டது.

மேலும், மேற்குறிப்பிட்ட வீதங்களுக்கு பிரயோகிக்கப்படும் குறுமட்டமானது 27 ஜூன் 2017 முதல் ரூபா 100 மில்லியனாக மாற்றியமைக்கப்பட்டது. முன்னர், 1 ஜனவரி 2011 முதல், ரூபா 50 மில்லியன் வரைக்குமான மற்றும் ரூபா 50 மில்லியனுக்கு மேலான கொடுக்கல் வாங்கல்களுக்கு இ.பி.ப.ஆ. தீர்வையானது முறையே 0.072 % மற்றும் 0.045% ஆக அறவிடப்பட்டன. அதன் பின்னர் 27 ஜூன் 2017 தொடக்கம், மாற்றியமைக்கப்பட்ட குறுமட்டத்தின் பிரகாரம் ரூபா 100 மில்லியன் வரைக்குமான மற்றும் ரூபா 100 மில்லியனுக்கும் மேலான கொடுக்கல் வாங்கல்களுக்கு இ.பி.ப.ஆ. தீர்வையானது முறையே 0.072% மற்றும் 0.045% ஆக அறவிடப்பட்டன.

இதற்கும் மேலாக, ஒரே நாளிலான வர்த்தகங்களுக்கு, அதாவது ஒரு வாடிக்கையாளர் ஒரே தினத்தில் ஒரே தரகரூடாக ஒரே பிணையத்தினை வாங்கி விற்றால் (அல்லது நேர்மாறாக) இ.பி.ப.ஆ, க்கு சேரவேண்டிய கொடுக்கல் வாங்கல் கட்டணம் 15 பெப்ரவரி 2006 முதல் ஒரு பக்க கொடுக்கல் வாங்கலுக்கு விதிக்கப்படமாட்டாது.

கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை விற்பனை செய்த பங்குகளின் எண்ணிக்கைக்கு சமமாக இல்லாதவிடத்து மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு கொடுக்கல் வாங்கல் கட்டணம் குறைந்த எண்ணிக்கையிலான வாங்கிய அல்லது விற்ற பங்குகளுக்கு அறவிடப்படமாட்டாது. வாங்கிய பங்குகளின் மொத்த எண்ணிக்கை விற்ற பங்குகளின் மொத்த எண்ணிக்கைக்கு சமமாக உள்ளவிடத்து கொடுக்கல் வாங்கல் கட்டணம் விற்பனைக்கு அறவிடப்படமாட்டாது. ஒரு வாடிக்கையாளரின் ஒரே பிணையத்திலான மொத்த கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் இ.பி.ப.ஆ. கொடுக்கல் வாங்கல் கட்டணத்தின் விலக்களிப்பினை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக கருத்திலெடுக்கப்படும். இருப்பினும், அரசாங்க பங்குக் கொடுக்கல் வாங்கல் கட்டணமான 0.30% ஆனது கொடுக்கல் வாங்கலின் இரு பக்கங்களுக்கும் அறவிடப்படும்.

தீர்வை நிதியத்தின் செயற்பாடு

இழப்பீட்டு நிதியத்தினைப் பலப்படுத்தவதற்காக 2009 ஆம் ஆண்டில் தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டது. இதற்கும் மேலாக ரூபா 100 மில்லியன் தீர்வை நிதியத்திலிருந்து தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்திற்கு 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ரூபா 50 மில்லியன் வீதம் மாற்றல் செய்யப்பட்டது.

திரட்டிய நிதியத்திற்கு ஐந்து தடவைகள் மேற்கொண்ட மாற்றல்கள் முறையே ரூபா 276 மில்லியன், ரூபா 380 மில்லியன், ரூபா 94 மில்லியன், மற்றும் ரூபா 52 மில்லியன் மற்றும் 312 மில்லியன் என்பன முறையே 2010, 2012, 2013, 2019 மற்றும் 2020 இல் ஆகும்.

2024 ஆம் ஆண்டின் இறுதியில் இத்தீர்வை நிதியத்தின் வரவிலுள்ள தொகை ரூபா 5,711.3 மில்லியனை எட்டியது என்பதுடன் இதில் பன்னிரண்டு மாதங்களின் பின்னர் முதிர்வடைவதற்கு எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 725.6 மில்லியன் முதலீடு செய்யப்பட்டும், திறைசேரி உண்டியல்களில் ரூபா 4,386.3 மிலலியன் முதலீடு செய்யப்பட்டும், ரூபா 536 மில்லியன் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு செய்யப்பட்டும் உள்ளன.

2015 முதல் 2024 வரையான காலப்பகுதியில் நிதியத்தின் நடவடிக்கையின் பிரதிநிதித்துவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. (உருவம்: 17)

உருவம் **17:** தீர்வை நிதியம்



இழப்பீட்டு நிதியம்

1987 இல் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு நிறுவப்பட்டதோடு இழப்பீட்டு நிதியமும் செயற்பாட்டிற்கு வந்துள்ளது. 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 158 இன் கீழ், ஓர் இழப்பீட்டு நிதியத்தினை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் இ.பி.ப.ஆ. இன் சட்டரீதியான ஓர் பொறுப்பாகும். இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் பிரகாரம், இழப்பீட்டு நிதியத்தின் குறிக்கோள் மற்றும் அதனைப் பராமரிப்பதற்கான வழிகாட்டிகள் பின்வருமாறு:

158 (1) யாரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர் அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்கு வர்த்தகர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை சந்திப்பதற்கு ஆற்றலின்றி காணப்படுகின்றார் என்று கண்டறிவதன் விளைவாக யாரேனும் முதலீட்டாளர் பணவகையான நட்டத்தினை அடைந்தால் அவருக்கு இழப்பீடு வழங்கும் நோக்கத்திற்காக இழப்பீட்டு நிதியம் என்றழைக்கப்படும் ஓர் நிதியம் நிறுவப்படல் வேண்டும்.

(2) இழப்பீட்டு நிதியமானது பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்

(அ) பாராளுமன்றத்தினால் வாக்களிப்பு செய்யக்கூடிய அத்தகைய பணத்தொகைகள்.

(ஆ) இந்த சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்திற்கு வரவு வைக்கப்படக்கூடிய அத்தகைய பணத்தொகைகள்- மற்றும்

(இ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு தீர்வை நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படக்கூடிய அத்தகைய பணத்தொகைகள்.

(3) இழப்பீட்டு நிதியத்திற்கு சொந்தமான பணமானது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கும் அத்தகைய விதத்தில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 159 ஆனது ஆணைக்குழு ஆணைக்குழுவின் அங்கத்தவர்களிலிருந்து மூன்று அங்கத்தவர்களை உள்ளடக்கிய இழப்பீட்டு குழுவினை நியமித்தல் வேண்டும் என வேண்டுகின்றது.

இக்குழுவானது செய்யப்படும் எந்த விண்ணப்பத்தின் தொடர்பிலும் இழப்பீட்டை மதிப்பிடுவதற்கும் வழங்குவதற்கும் பொறுப்பாயிருப்பதோடு, அத்தகைய மதிப்பீட்டின் அல்லது அளிப்பின் மீதான இக்குழுவின் தீர்மானம் இச்சட்டத்தின் தேவைகளுக்காக இறுதியானதும் முடிவானதுமாக இருத்தல் வேண்டும்.

இச்சட்டமானது இழப்பீட்டிற்கு விண்ணப்பம் செய்வதற்கான வழிமுறையையும் கூட வழங்குகிறது. இச்சட்டத்தின் பிரகாரம் இக்குழுவானது விண்ணப்பதாரரொருவரினால் செய்யப்படும் உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவாகச் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களையும் பிற சான்றுகளையும் பரிசீலனை செய்த பின்னர், அல்லது எவ்வாறாயினும் விசாரணையொன்று நடத்தப்பட்டிருந்தால் அவ் விசாரணை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அந்த உரிமைக்கோரிக்கையை இழப்பீடு பெறுவதற்கு அனுமதிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம். இதுநாள்வரை இழப்பீட்டு நிதியத்திலிருந்து எவ்வித உரிமைக்கோரிக்கைகளும் செய்யப்படவில்லை.

இழப்பீட்டு நிதியத்தின் செயற்பாடு

இழப்பீட்டு நிதியத்தினை பலப்படுத்துவதற்காக 2009 ஆம் வருடத்தில் தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டது.

2024 ஆம் ஆண்டின் இறுதியில் இழப்பீட்டு நிதியத்தின் வரவிலுள்ள மீதி ரூபா 764.8 மில்லியனை எட்டியது. இதில் பன்னிரண்டு மாதங்களில் முதிர்வடைவதற்கு எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 254.3 மில்லியனும், திறைசேரி உண்டியல்களில் ரூபா 464.8 மில்லியனும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் ரூபா 53 மில்லியனும் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

மூலோபாய இலக்கு 2

முதலீட்டாளர் நலனை பாதுகாத்தல்

2015 முதல் 2024 வரையான காலப்பகுதியில் நிதியத்தின் செயற்பாடுகளின் பிரதிநிதித்துவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. (உருவம் 18:)

உருவம் **18:** இழப்பீட்டு நிதியம்



தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் (தீ.உ.நி.)

தீ.உ.நி. 1998 மே மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிதியம் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் (கொ.ப.ப.) மத்திய வைப்பக முறைமையில் பங்குபற்றுபவர்களுக்கிடையேயான வர்த்தகங்களின் தீர்ப்பனவை உத்தரவாதமிடும் நோக்கத்திற்காக தாபிக்கப்பட்டுள்ளது. தீ.உ.நி. இன் தொழிற்பாடு கீழே விளக்கப்பட்டுள்ளது.

- வர்த்தகமொன்று நிறைவேற்றப்பட்டவுடன் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் உடைமை மாற்றப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆந் திகதி கொ.ப.ப. ஆனது ஓரடுக்குத் தீர்வுச்சுற்றை அமுல்படுத்தியது. இதற்கமைய வாங்குபவர் ரி-3 மீது கொடுப்பனவு செய்யவேண்டும், அதாவது வர்த்தகம் செய்த நாள் உள்ளடங்களாக 4 ஆவது சந்தை தினத்தில் செலுத்தவேண்டும். விற்பனை செய்பவர் தீர்ப்பனவை ரி-3 ஆம் நாளன்று பெறுவார், அதாவது வர்த்தகம் செய்த நாளிலிருந்து 4ஆவது சந்தை நாளில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றது. உடைமையின் மாற்றத்திற்கும் வரும்படிகளின் பெறுகைகளுக்குமிடையிலான ஒப்பீட்டளவிலான நீண்ட இடைவெளி பாதுகாப்பற்ற தீர்ப்பனவு இடர்நேர்கைக்கு வழிவகுத்துள்ளது. இது தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் தாபிக்கப்படும் தேவையை ஏற்படுத்தியுள்ளது.
- இந்நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக கீழ் காண்பவர்கள் பதவி வழி நியமனம் பெற்றுள்ளார்கள். இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தலைவர், திறைசேரிப் பிரதிச் செயலாளர், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பணிப்பாளர் நாயகம்.
- இலங்கை அரசாங்கமானது இந்த நிதியத்தினை உருவாக்குவதற்கு 50 மில்லியன் ரூபாயைக் கொண்ட தொகையை வழங்கியுள்ளது. இப்பணத்தொகையானது அரசாங்கப் பிணையங்களிலும் நிலையான வைப்புகளிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளது. தீர்ப்பனவு உத்தரவாத நிதியமானது மீள் நிறைவாக்கல்களாக நன்கொடைகள், கொடைகள், தரும சாதனங்கள் போன்றவற்றைக்கூடப் பெற்றுக்கொள்ள முடியும். தற்போது தரகர்களும் காப்பக வங்கிகளும் இந்நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யுமாறு வேண்டப்படுவதில்லை.
- எவ்வாறாயினும் தீ.உ.நி. ஆனது தீர்ப்பனவு இடர்நேர்கையை முறையாகத் தீர்ப்பதற்கு போதாததாகக் காணப்படுவதனால் இத் தீர்ப்பனவு இடர்நேர்கையை பயனுள்ள விதத்தில் சந்திக்கத்தக்க ஒரு மத்திய எதிர்தரத்தவர் பொறிமுறையினை (ம.எ.பொ.) நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து தீ.உ.நி. இலிருந்து எவ்வித உரிமைகோரல்களும் இடம்பெறவில்லை.

நிதி மற்றும் நிர்வாக அணி

தீ.உ.நி. இன் செயற்பாடு

இந்நிதியத்தினைப் பலப்படுத்தும்பொருட்டு தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 100 மில்லியன் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் தலா ரூபா 50 மில்லியன் வீதம் இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்டது. கொ.ப.பரிவர்த்தனையும் ஜனவரி 2012 இல் இந்நிதியத்திற்கு ரூபா 100 மில்லியனை, தீ.உ.நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்புறுதியில் இத்தகைய பெறுகைகளுக்கு வசதியளிக்கும் திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர், மாற்றல் செய்தது.

2024 ஆம் ஆண்டின் இறுதியில் தீ.உ.நி. இன் வரவிலுள்ள மீதியானது ரூபா 1,389.5 மில்லியனை எட்டியது. இதில் பன்னிரண்டு மாதங்களினுள் முதிர்வடையும் என எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 7.76 மில்லியனும், திறைசேரி உண்டியல்களில் ரூபா 1,268.8 மில்லியனும், மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் ரூபா 98 மில்லியனும் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

2015 முதல் 2024 வரையுமான காலப்பகுதியில் நிதியத்தின் செயற்பாட்டின் பிரதிநிதித்துவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. (உருவம் 19:)

உருவம் **19:** தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்



மூலோபாய இலக்கு 3

மூலதனச் சந்தை அபிவிருத்தி

பிணையங்கள் முறைமைப்படுத்துபவராக இ.பி.ப.ஆ. ஒரு வலுவான மற்றும் வினைத்திறனான மூலதனச் சந்தையினை விருத்திசெய்வதில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கும்வேளை, அதன் போட்டித்தன்மை மற்றும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் சீரமைப்பதனை உறுதிசெய்கின்றது. இதன்மூலம் பொருளாதார வளர்ச்சிக்கும் சந்தை ஸ்திரத்தன்மைக்கும் பங்களிப்பு செய்கின்றது. இதனை அடைவதற்கு, இ.பி.ப.ஆ. சந்தை உட்கட்டமைப்பினால் துணையளிக்கப்பட்டு புதிய நிதியியல் கருவிகளின் அறிமுகத்திற்கு வசதியளித்தது மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தினை பெற்றுக்கொள்வதற்காக பலதரப்பட்ட கொடையளிப்பு முகவர்களுடன் ஒருங்கிணைந்து செயலாற்றியது.

சந்தைக்கு புதிய கருவிகளது அறிமுகத்திற்கு வசதியளித்தல்

ஷ’ரியா இணக்கப்பாடான கடன் பிணையங்கள் அல்லது சுக்குக்குஸ்

இஸ்லாமிய மூலதனச் சந்தை கருவிகள் (இ.மூ.ச.க.) இஸ்லாமிய சட்டத்திற்கு இணைய விருத்திசெய்யப்பட்ட பிணையங்களாகும். இ.மூ.ச.கருவிகள் மூலதனச் சந்தை மற்றும் பொருளாதாரத்தின் அபிவிருத்தியில் ஒரு முக்கிய பங்கினை வகிப்பதுடன், இது வெளிநாட்டு முதலீட்டுத்தேக்க முதலீடுகளுக்கும் நிதி திரட்டலுக்கும் பல வாய்ப்புக்களை திறக்கின்றது. ஷரியா இணக்கப்பாடான கடன் பிணையங்கள் அல்லது சுக்குக்குஸ் என்பது இ.மூ.ச.க. தொகுப்பில் மிகவும் பிரபல்யமான கருவியாகும். சுக்குக் என்பது பாரம்பரிய முறிகளுக்கு ஒத்ததாக செயற்படும்வேளை ஷரியா கொள்கைகளுடன் இணக்கப்பாடான நிதியியல் கருவிகளாகும். இவை நிறுவனங்கள் மதரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் மூலதனத்தைத் திரட்ட அனுமதிக்கும்வேளை, ஷரியா இணக்கப்பாடான தெரிவுகளை வேண்டும் முதலீட்டாளர்களுக்கு ஒரு கவர்ச்சிகரமான கடன் கருவியினை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது. இது சுக்குக் பின்னணியில் உள்ள உள்ளார்ந்த சொத்துக்களில் பகுதியளவு உரித்துடைமையினை முதலீட்டாளர்களுக்கு வழங்குகின்றது.

முன்னைய ஆண்டில் கொ.ப.ப. இல் சுக்குக் கருவிகளை அறிமுகப்படுத்துவதற்கு வசதியளித்தன் மூலம் இ.பி.ப.ஆ. கணிசமான பங்களிப்பினை மேற்கொண்டுள்ளது. இது சுக்குக் கருவிகளை ஆளுகை செய்யும் முறைமைப்படுத்தல் கட்டமைப்பிற்கான ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அக்கருவிகள் ஷரியா சட்டத்திற்கு இணக்கப்பாடு கண்டுள்ளன என சான்றளிப்பதற்கு பொறுப்பான அங்கீகரிக்கப்பட்ட ஷரியா அறிஞர்களுக்கான வழிகாட்டிகளை பிரசுரித்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. இந்த நடவடிக்கைகள் அத்தகைய கருவிகளை நாடும் முதலீட்டாளர்களது நலன்களை பாதுகாப்பதற்கும் உலகளாவிய அளவீட்டு நியமங்களுடன் அவை சீரமைக்கப்படுவதற்கும் ஆகும். இதன் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட ஷரியா அறிஞர்களுக்காக இ.பி.ப.ஆ. ஆல் பிரசுரிக்கப்பட்ட வழிகாட்டிகளுடன் தேவையான தகைமைகள், அனுபவம் மற்றும் வலிமையும் முறையானது அளவுகோள்களை குறிப்பிட்ட ஒரு விளம்பரத்தினை பிரசுரித்து தகைமையுடைய நபர்களை விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு வேண்டியதுடன், ஆறு விண்ணப்பங்கள் ஒரு முறையான தெரிவுச் செயன்முறையினூடாக தெரிவுசெய்யப்பட்டதுடன் இது ஒரு நேர்காணலையும் உள்ளடக்கியது.

இதற்கு இணையாக, இ.பி.ப.ஆ. பின்வருவனவற்றை மேற்கொள்ளுமாறு ஒரு பணிப்புரையினை கொ.ப.ப. இற்கு வழங்கியது. சுக்குக் கருவிகளின் யாரேனும் சாத்தியமான வழங்குனர்கள் இ.பி.ப.ஆ. இனால் அங்கீகரிக்கப்பட்ட மூன்று ஷரியா அறிஞர்களிடமிருந்து அவை வழங்கப்படுவதற்கு முன்னர் அவை ஷரியா இணக்கப்பாடானவை என்ற சான்றளிப்பினை பெறுதல் வேண்டும் என அறிவிக்குமாறு பணித்தது.

மூலதனச் சந்தை அபிவிருத்தி அணி

உயர் விளைவுடைய முறிகள்

உயர் விளைவுடைய முறிகள் என்பது முதலீட்டுத்தர தரப்படுத்தலிலும் பார்க்க குறைவான கடன் தரத்தைக் கொண்ட கடன் பிணையங்களாகும். உயர் விளைவுடைய முறிகள் என்பன ஏனைய பட்டியலிடப்பட்ட கடன் பிணையங்களுடன் ஒப்பிடும்போது உயர் விளைவினைக் கொண்டுள்ளதனால் இவை மூலதனச் சந்தையில் நன்கு பிரபல்யமான ஒரு கருவியாகும். மேலும், உயர் விளைவுடைய முறிகள் கொ.ப.ப. இல் கிடைக்கக்கூடிய முதலீட்டுச் சொத்து வகுப்புகளை விரிவாக்குவதற்கு உதவுவதுடன், மூலதனச் சந்தையூடாக நிதியினை திரட்டுவதற்கு கடுமையான பட்டியலிடல் தேவைப்பாடுகளைச் சந்திப்பதற்கு இயலாத கம்பனிகளுக்கு வாய்ப்பினையும் வழங்குகின்றது.

கொ.ப.ப. இனால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவினை அடுத்து, கொ.ப.ப. இல் உயர் விளைவுடைய முறிகளை அறிமுகப்படுத்துவதற்கு ஆணைக்குழுவின் கொள்கையளவு அங்கீகாரம் பெறப்பட்டது. அதன் பின்னர், புதிய கருவிகளிலான இ.பி.ப.ஆ. - கொ.ப.ப. கூட்டுக் குழுவின் வழிகாட்டலின் கீழ், உயர் விளைவுடைய முறிகளுக்கான முறைமைப்படுத்தல் கட்டமைப்பானது உருவாக்கப்பட்டு ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட முறைமைப்படுத்தல் கட்டமைப்பின் பிரகாரம், உயர் விளைவுடைய முறிகள் கொ.ப.ப. இன் சந்தை நிறுவனம் சாராத வர்த்தக மேடையில் பட்டியலிடப்பட்டு வர்த்தகம் மேற்கொள்ளப்படும்.

வரிசையிலுள்ள கருவிகள்

சந்தை வளர்ச்சியினை தூண்டுவதற்காகவும், மூலதனத்திற்கான அணுகுதலை மேம்படுத்தவும், மற்றும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் சீரமைப்பதற்காகவும் நாம் தற்போது பின்வரும் கருவிகளை விருத்திசெய்கின்றோம். இந்த முன்னெடுப்புகள் சந்தை உட்கட்டமைப்பினை பலப்படுத்தும், நிலைபேறுடைய நிதியளிப்பிற்கான சாத்தியத்தினை ஆழமாக்கும் மற்றும் முதலீட்டாளர்களுக்கு பன்முகமான முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒரு மூலாதார பரிவர்த்தனையினை நிறுவுதல்

2021 இன் 19 ஆம் இ.பி.ப.ஆ. சட்டத்தின் சட்டவாக்கதுடன், மூலாதார வர்த்தகத்திற்கு உரிமமளிப்பதற்கும் அதனை முறைமைப்படுத்துவதற்கும் இ.பி.ப.ஆ. இற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இந்த பொறுப்பாணையின் பிரகாரம், இ.பி.ப.ஆ. ஒரு பல் சொத்து வகுப்பு மூலாதார பரிமாற்றகத்தை நிறுவும் பொறுப்பினை பொறுப்பேற்றுள்ளது. இது பண்டங்கள் உள்ளடங்கலான பரவலான உள்ளார்ந்த சொத்து வகுப்புக்களை உள்ளடக்கியிருக்கும். இந்த முன்னெடுப்பானது மூலதனச் சந்தையின் வளர்ச்சியினை பேணும் என எதிர்பார்க்கப்படும்வேளை, நாட்டின் பொருளாதார மீட்டலுக்கும் நிலைபேறுடைய அபிவிருத்தி முயற்சிகளுக்கும் பங்களிப்பு செய்யும்.

இந்த குறிக்கோளுக்கு அமைவாக, மூலாதார பரிமாற்றகத்தினை நிறுவுவதற்காக ஒரு கருத்தீட்டு ஆவணமும் ஒரு வழிகாட்டல் வரைபடமும் உருவாக்கப்பட்டு பின்னர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. இந்த வழிகாட்டல் வரைபடம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், இ.பி.ப.ஆ. ஒரு பல் சொத்து வகுப்பு மூலாதார பரிமாற்றகத்தினை நிறுவி செயலாற்றுவதற்காக பொருத்தமான நிறுவனங்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாட்டிற்கான ஒரு பொது அழைப்பு விடுக்கப்பட்டது.

தற்போது, இ.பி.ப.ஆ. ஆறு ஆர்வ வெளிப்பாடுகளை பெற்றுள்ளதுடன், அப்பிரேரணைகளை மதிப்படும் செயன்முறையில் உள்ளது. இவை இலங்கையில் ஒரு முறைமைப்படுத்தப்பட்ட மூலாதாரச் சந்தையினை அறிமுகப்படுத்துவது நோக்கி ஒரு கணிசமான முன்னேற்றத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றன.

சமூக முறிகள்

சமூக முறிகள் என்பன அத்தியாவசியமான சேவைகளுக்கான அணுக்கத்தினை மேம்படுத்துதல், மலிவான வீடமைப்பிற்கு வசதியளித்தல் அல்லது பொருளாதார வலுவளிப்பினை ஊக்குவித்தல் போன்ற சாத்தியமான சமூக விளைவுகளை உருவாக்கும் திட்டங்களுக்கு நிதியினை திரட்டுவதற்காக வடிவமைக்கப்பட்ட நிதியியல் கருவிகளாகும். இந்த முறிகள் சூழல், சமூக மற்றும் ஆளுகை (சூ.ச.ஆ.) கொள்கைகளுடன் சீரமைவாக உள்ளதுடன், முக்கியமான சமூக சவால்களை விளித்துரைக்கும்வேளை நிலைபேறுடைய அபிவிருத்தியினை பேணுகின்றன.

இ.பி.ப.ஆ. பரந்த சூ.ச.ஆ. முன்னெடுப்புகளின் ஒரு பகுதியாக சமூக முறிகளை அறிமுகப்படுத்துவற்கு கொள்கையளவில் அங்கீகாரத்தினை வழங்கியுள்ளதுடன், இது நிலைபேறுடைய நிதியளித்தல் மற்றும் உள்ளடக்கமான பொருளாதார வளர்ச்சிக்கான இலங்கையின் கடப்பாட்டினை மீளுறுதி செய்கின்றது.

இ.பி.ப.ஆ., கொ.ப.ப. மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக பெறப்பட்ட ஆலோசகர்களுடன் கூட்டிணைந்து இலங்கையின் மூலதனச் சந்தையில் சமூக முறிகளை வழங்குவதற்கு வசதியளிக்கும் சாத்தியத்தினை ஆராய்கின்றது.

இ.பி.ப.ஆ. பரந்த சூ.ச.ஆ. முன்னெடுப்புகளின் ஒரு பகுதியாக சமூக முறிகளை அறிமுகப்படுத்துவற்கு கொள்கையளவில் அங்கீகாரத்தினை வழங்கியுள்ளதுடன், இது நிலைபேறுடைய நிதியளித்தல் மற்றும் உள்ளடக்கமான பொருளாதார வளர்ச்சிக்கான இலங்கையின் கடப்பாட்டினை மீளுறுதி செய்கின்றது.

சமூக முறிகளை வழங்குவதற்கான ஒழுங்குவிதிகளை உள்ளடக்குவதற்காக நடைமுறையிலுள்ள முறைமைப்படுத்தல் கட்டமைப்பினை திருத்தியமைப்பதில் இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இற்கு ஆலோசனை வழங்கும் அதேவேளை, ஆ.அ.வ. ஆலோசகர்கள் சாத்தியமான வழங்குனர்கள், நிதியியல் நிறுவனங்கள், துணையளிக்கும் சூழலமைப்பு சேவை வழங்குனர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார்கள். இவை திட்டத் தெரிவு மற்றும் வெளிவாரி மீளாய்வு செயன்முறை போன்றவற்றிற்கு வசதியளித்தல் போன்ற பிரிவுகளில் கொள்திறனை கட்டியெழுப்புவதற்கும் வழிகாட்டல் மற்றும் உறுதுணையினை வழங்குவதற்கும் ஆகும்.

நிலைபேறுடைமை இணைக்கப்பட்ட முறிகள்

நிலைபேறுடைமை இணைக்கப்பட்ட முறிகள் (நி.இ.மு.) என்பன சாத்தியமான காலநிலை மற்றும் சூழல் விளைவினை செயற்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட முன்னோக்கிய பார்வையினைக் கொண்ட, செயற்திறன் அடிப்படையிலான கருவிகளாகும். நி.இ.மு. என்பன முன்நிர்ணயிக்கப்பட்ட முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் (மு.செ.கு.) மற்றும் நிலைபேறுடைய செயற்திறன் இலக்குகள் (நி.செ.இ.) என்பவற்றுடன் நிதியியல் செயற்கூறுகளை இணைப்பதன் மூலம் அளவிடக்கூடிய மற்றும் லட்சியமிக்க நிலைபேறுடைமை குறிக்கோள்களை அடைவதற்கு வழங்குனர்களுக்கு ஊக்கமளிக்கின்றது.

நிலைபேறுடைமை இணைக்கப்பட்ட முறிகளின் அறிமுகத்தில் ஒரு கருத்தீட்டு ஆவணம் விருத்திசெய்யப்பட்டுள்ளது. மேலும், இ.பி.ப.ஆ., கொ.ப.ப. உடன் மற்றும் ஆ.அ.வ. தொழில்நுட்ப உறுதுணை திட்டத்தினூடாக ஈடுபடுத்தப்பட்ட ஆலோசகர்களுடன் கூட்டிணைந்து இலங்கையின் மூலதனச் சந்தையினுள் நி.இ.மு. இன் அறிமுகத்தினை செயலூக்கமாக ஆராய்கின்றன. இந்த முயற்சிகள் நிலைபேறுடைய முறிகள்

மூலோபாய இலக்கு 3

மூலதனச் சந்தை அபிவிருத்தி

என்ற பரந்த குடையின் கீழ் நி.இ.மு. இற்கு வசதியளிப்பதற்காக முறைமைப்படுத்தல் கட்டமைப்பினை திருத்தி மேம்படுத்த முனையும்வேளை நிலைபேறுடைய நிதியளித்தல் நிலத்தோற்றத்திற்கு துணையளிக்கும் ஒரு சூழலமைப்பினை பேணுவதற்கும் முனைகின்றது.

பரிமாற்றக வர்த்தகம் செய்யப்படும் நிதியங்கள் (ETFs)

ETF என்பது பலதரப்பட்ட உள்ளார்ந்த சொத்துக்களைக் கொண்டுள்ள முதலீட்டுத் தேக்கத்தின் பிணையங்களாகும் என்பதுடன், இவை முதலீட்டாளர்களுக்கு பன்முகமான மற்றும் நெகிழ்வான முதலீட்டுத் தெரிவுகளை வழங்குகின்றது.

இயக்காற்றலான முதலீட்டுத் தேக்க முகாமைப்படுத்தலுக்கு துணைபுரியும் புத்தாக்கமான நிதியியல் கருவிகளுக்கான முதலீட்டாளர்களது வளர்ந்து வருகின்ற கேள்வியினைக் கருத்திற்கொண்டும், 2021 இன் 19 ஆம் இலக்க புதிய இ.பி.ப.ஆ. சட்டம் மற்றும் 2022 இன் கூட்டு முதலீட்டுத் திட்டக் கோவை என்பவற்றூடாக இலங்கையின் சந்தைக்கு வழங்கப்பட்டுள்ளவாறு ETF களை அறிமுகப்படுத்துவதனை இயலுமையாக்கும் முறைமைப்படுத்தல் கட்டமைப்பினைக் கருத்திற்கொண்டும், இ.பி.ப.ஆ. இலங்கையில் மூலதனத் திரட்டலுக்கான ஒரு கருவியாக ETF இன் சாத்தியத்தினை ஆராய்வதற்கு ஒரு கருத்தீட்டு ஆவணத்தை விருத்தி செய்தது. இது முக்கிய கொள்கை பரிந்துரைகளுடன் ETF களுடன் இணைந்துள்ள நலன்கள் மற்றும் இடர்களை திட்டவரையறை செய்வதுடன் மூலதனச் சந்தையினை பலப்படுத்தி பொருளாதார வளர்ச்சிக்கு துணையளிப்பதற்கு முனைகின்றது.

ETF களின் அறிமுகமானது கொ.ப.ப. இல் கிடைக்கக்கூடிய பலதரப்பட்ட முதலீட்டு கருவிகளை விரிவாக்குவதுடன், சந்தை வளர்ச்சியினையும் பேணி பன்முகப்படுத்தும். மேலாக, சந்தை உருவாக்குனர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட பங்குபற்றுனர்கள் போன்ற புதிய சந்தை பங்குபற்றுனர்களை கொண்டுவருவதுடன், திரவத்தன்மை மற்றும் வினைத்திறனை மேம்படுத்தும்வேளை இலங்கையின் மூலதனச் சந்தையினை உலகளாவிய நியமங்களுடன் சீரமைக்கும்.

வெள்ளைப் பட்டியல் சுட்டிகளுக்கு முறைமைப்படுத்தல் பணிப்புரைகளை வழங்குதல்

ஷரியா இணக்கப்பாடான உரித்துவ முதலீடுகளை வேண்டுகின்ற முதலீட்டாளர்களது நலன்களை பாதுகாக்கும் குறிக்கோளுடன் மற்றும் மூலதனச் சந்தையில் ஷரியா இணக்கப்பாடான வெள்ளைப் பட்டியல் சுட்டிகளின் நிர்மாணம் மற்றும் பிரசுரித்தலை சீர்படுத்தும் நோக்குடனும், வெள்ளைப் பட்டியல் சுட்டிகளை செயலாற்றும் சந்தை நிறுவனங்கள் மற்றும் சந்தை இடையீட்டாளர்களுக்கு இ.பி.ப.ஆ. முறைமைப்படுத்தல் பணிப்புரைகளை வழங்கியது.

ஷரியா இணக்கப்பாடான உரித்துவங்கள் என்பது ஷரியா சட்டத்துடன் இணக்கப்பாடான உரித்துவப் பிணையங்களாகும். ஒரு வெள்ளைப் பட்டியல் சுட்டியின் ஷரியா சலித்தல் முறையானது ஒரு உரித்துவமானது ஷரியா இணக்கப்பாடுடையதா என்று தீர்மானிப்பதுடன், இது பண்புசார் மற்றும் அளவுசார் கூறுகளை உள்ளடக்குகின்றது. இ.பி.ப.ஆ. பல நியாயாதிக்கங்களிடையே, வெள்ளைப் பட்டியல் சுட்டிச் செயற்பாளர்கள் மற்றும் இஸ்லாமிய நிதியியல் நிறுவனங்களுக்கான கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு ஒழுங்கமைப்பு போன்ற ஏனைய முறைமைப்படுத்தல் அங்கங்களினால் கடைப்பிடிக்கப்படும் பிணையங்கள் சலித்தல் முறைகளில் ஆய்வினை நடாத்தியதுடன் சந்தையில் காணப்படுகின்ற நடைமுறையிலுள்ள வெள்ளைப்பட்டியல் சுட்டி செயற்பாட்டாளர்களுடன் கூட்டங்களையும் நடாத்தியது.

இதன் பிரகாரம், வெள்ளைப் பட்டியல் சுட்டிகள் வழங்குனர்களினால் பயன்படுத்தப்படும் பிணையங்கள் சலித்தல் முறைகளிடையெ பரந்த வித்தியாசங்கள் காணப்படுவது அவதானிக்கப்பட்டது. அதன் பின்னர். இலங்கையில் செயற்படுத்தப்படும் வெள்ளைப் பட்டியல் சுட்டிகள், ஷரியா கொள்கைகள் மற்றும் விதிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட உலகளாவிய நியமங்களுடன் பொருத்தியுள்ளன என முதலீட்டாளர்களுக்கு உறுதிமொழியினை வழங்குவதற்காகவும் பல்வேறு சுட்டி வழங்குனர்களினால சலிக்கப்படும் பிணையங்களிடையே ஒவ்வாமைகள் காணப்படாதிருப்பதனை உறுதிசெய்வதற்காக, இ.பி.ப.ஆ. சந்தையில் செயலாற்றப்படும் அனைத்து வெள்ளைப் பட்டியல் சுட்டிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஷரியா அறிஞர்களினால் விருத்திசெய்யப்பட்ட, நிலையான ஷரியா இணக்கப்பாடான பிணையங்கள் சலித்தல் முறை இனை கடைப்பிடிப்பதற்கு தீர்மானித்ததுடன் இம்முறையானது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது.

இதன் பிரகாரம், அனைத்து சந்தை நிறுவனங்களுக்கும் சந்தை இடையீட்டாளர்களுக்கும் பின்வருவனவற்றை கடைப்பிடிக்குமாறு ஒரு பணிப்புரை அனுப்பிவைக்கப்பட்டது. வாடிக்கையாளர்கள் அல்லது பொது மக்களிடையே ஒரு வெள்ளைப்பட்டியல் உரித்துவ

ETF களின் அறிமுகமானது கொ.ப.ப. இல் கிடைக்கக்கூடிய பலதரப்பட்ட முதலீட்டு கருவிகளை விரிவாக்குவதுடன், சந்தை வளர்ச்சியினையும் பேணி பன்முகப்படுத்தும்.

சுட்டியினை பிரசுரிப்பதற்கு அல்லது சுற்றறிக்கை செய்வதற்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட ஷரியா அறிஞர்களினால் விருத்திசெய்யப்பட்ட நிலையான ஷரியா இணக்கப்பாடான பிணையங்கள் சலித்தல் முறையினை கடைப்பிடித்தல், இ.பி.ப.ஆ. ஆல் அங்கீகரிக்கப்பட்ட ஷரியா அறிஞர்களின் பட்டியலிலிருந்து மூன்று ஷரியா அறிஞர்களிடமிருந்து நிறுவனம் பணிப்புரையுடன் இணக்கப்பாடு கண்டுள்ளதான ஒரு சான்றளிப்பு என்பனவாகும். மேலும், மேற்குறிப்பிட்ட பணிப்புரையானது ஒரு வெள்ளைப் பட்டியல் சுட்டிக்கு சேர்ந்துள்ள ஒரு சந்தை நிறுவனம் அல்லது சந்தை இடையீட்டாளர் இ.பி.ப.ஆ. இன் அங்கீகரிக்கப்பட்ட மூன்று ஷரியா அறிஞர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிசெய்யவேண்டும் எனவும் குறிப்பிடுகின்றது.

ஏனைய முன்னெடுப்புகள்

பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கு XBRL அறிக்கையிடலை அறிமுகப்படுத்தல்

மீளாய்வாண்டின்போது ஒரு XBRL அடிப்படையிலான நிதியியல் அறிக்கையிடல் அமைப்புமுறையின் அமுலாக்கலை விரைவாக்குவதற்காக இ.பி.ப.ஆ.,கொ.ப.ப. உடன் கூட்டிணைந்து செயலாற்றியது. இது அறிக்கையிடும் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களிலிருந்து நிதியியல் தகவல்களை இலத்திரனியல் ரீதியாக பெற்று செயன்முறையாக்குவதனை அனுமதிக்கின்றது.

இதன் பிரகாரம், பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கு XBRL அறிக்கையிடல் வடிவமைப்புகள் மற்றும் வகைப்பிரிப்புக்களை விருத்திசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் இவை இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்துடன் அவர்களது மீளாய்வு மற்றும் கருத்துக்களுக்காக பகிரப்பட்டன. மேலும், ஒரு போட்டித்தன்மையான விலைகோரல் செயன்முறையினூடாக கொ.ப.ப. அமைப்புமுறையினை கொள்வனவு செய்வதற்கு ஒரு தகைமையான XBRL விற்பனை நிறுவனத்தினை தெரிவுசெய்தது.

இந்த முன்னெடுப்பானது முன்னோக்கிச் செல்வதுடன் 2025 ஆம் ஆண்டின் இறுதியில் பட்டியலிடப்பட்ட கம்பனி XBRL சமர்ப்பிப்புகளுக்கான அமைப்புமுறையானது கிடைக்கப்பெறுவதற்கான திட்டம் காணப்படுகின்றது.

தேசிய அரசாங்க பாதீடு 2025 இற்கான முன்மொழிவுகள்

இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக்கக்கூடிய மூலதனத் திரட்டல் வழிகளை பரவலாக்கும் மற்றும் பொருளாதாரத்தின் அபிவிருத்தி நோக்கி ஒரு முக்கிய பங்களிப்பானாக மூலதனச் சந்தை நிலத்தோற்றத்திற்கு வலுவளிக்கு பிரதான குறிக்கோளுடன், இப்பிரிவானது தேசிய அரசாங்க பாதீடு 2025 இற்கான பாதீட்டு பிரேரணைகளை உருவாக்கி நிதி அமைச்சிற்கு அவர்கள் கருத்திலெடுப்பதற்காக சமர்ப்பித்தது.

12 முக்கிய சந்தை அபிவிருத்தித் திட்டங்கள்

இ.பி.ப.ஆ. இன் தலைவர், பேராசிரியர் டி. பி. பி. எச். திசாபண்டார அவர்களது வழிகாட்டலின் கீழ் செயலகமானது 12 முக்கிய திட்டங்களினுள் உள்ளடக்கிய அபிவிருத்தி முன்னெடுப்புகளை இனங்கண்டது. இது இலங்கையின் மூலதனச் சந்தையினை விருத்தியடைந்த சக நாடுகளுக்கு ஒத்ததாக தரமுயர்த்தும்வேளை இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்தி குறிக்கோள்களுடனும் சீரமைக்கும். இதன் பிரகாரம், இ.பி.ப.ஆ. தற்போது பொருத்தமான அபிவிருத்தி திட்டங்களுக்கு துணையளிப்பது நோக்கி செயலாற்றுவதில் ஈடுபட்டுக்கொண்டுள்ளது.

மூலோபாய இலக்கு 4

மூலதனச் சந்தையில் தகவலறிந்த முதலீட்டுத் தீர்மானம் மேற்கொள்வதனையும் ஆர்வத்தினையும் ஊக்குவித்தல்

தனிநபர்களுக்கும் வணிகங்களுக்கும் செல்வம் உருவாக்குதலையும் மூலதனம் உருவாக்குதலையும் இயலுமையாக்குவதற்கு அவசியமான நன்கு செயலாற்றும் ஒரு மூலதனச் சந்தையினை பேணுவதில் முதலீட்டாளர் கல்வியானது ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது. தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமான அறிவு மற்றும் திறன்களுடன் முதலீட்டாளர்களை தயார்படுத்துவதன் மூலம், முதலீட்டாளர் கல்வியானது சந்தை வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்தி, தவறான தகவல்களை குறைத்து பொறுப்பான முதலீட்டு நடைமுறைகளை ஊக்குவிக்கின்றது. இதனை அறிந்துகொண்டு இ.பி.ப.ஆ. இலக்குவைத்த விழிப்புணர்வு முன்னெடுப்புகளூடாக முதலீட்டாளர் நம்பகத்தன்மையினை பலப்படுத்தும் அதன் கடப்பாட்டில் உறுதியாய் உள்ளது.

வெளிக்கள நிகழ்வுகள் - கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

முதலீட்டாளர் கல்வியின் அணுகுதலை விரிவாக்குவதற்கு இ.பி.ப.ஆ. ஆல் ஒழுங்குசெய்யப்பட்ட வெளிக்கள நிகழ்வுகள் கவனமாக உருவாக்கப்பட்டன. இவை அனைத்து வயதினர் மற்றும் பின்னணியினரை உள்ளடக்கிய ஒரு பன்முகமான அவையோருக்கு வலுவளிக்கும் நோக்கினைக் கொண்டதாகும். அறிவுபடைத்த மற்றும் நம்பிக்கையுடனான முதலீட்டாளர்கள் சமூகத்தினை பேணுதல், நிதியியல் நிலத்தோற்றங்களை சமாளிப்பதற்கு தேவையான முக்கியமான அறிவுடன் தயார்படுத்தல் மற்றும் நீண்டகால நிதியியல் சுதந்திரம் மற்றும் வளர்ச்சியினை அடைதல் என்பன எமது இலக்காகும்.

வெளிவாரி உறவுகள் மற்றும் மூலதனச் சந்தைக் கல்வி அணி

நாம் வருடம் முழுவதும் டிஜிட்டல் மற்றும் நேருக்கு நேராக கற்றல் வாய்ப்புக்களை வழங்கியதுடன், இது ஆசிரியர்கள், முதலீட்டாளர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது மக்கள் மதிப்புமிக்க நிதியியல் நுண்ணறிவுகளை இலகுவாக அணுகக்கூடியதனை உறுதிசெய்கின்றது.

இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. பிராந்திய முதலீட்டாளர் கருத்துக்களங்கள்

இ.பி.ப.ஆ. கொ.ப.ப. உடன் கூட்டிணைந்து "නැණවත් ආයෝජනයට සවිමත් අත්වැලක්" என்ற கருப்பொருளின் கீழ் ஒரு தொடரான பிராந்திய முதலீட்டாளர் கருத்துக்களங்களை நடாத்தின.

இந்த முன்னெடுப்பானது அனைவருக்கும் மூலதனச் சந்தை அறிவு கிடைக்கப்பெறுவதனை நோக்காகக் கொண்டதுடன், இலங்கை முழுவதும் சிற்றளவு முதலீட்டாளர்களிடமிருந்து தகவலறிந்த பங்குபற்றலை ஊக்குவிக்கின்றது. நகர நிதியியல் மத்திய நிலையங்களுக்கு அப்பால் நீட்டப்படுவதன் மூலம், இந்த கருத்துக்களங்கள் பிராந்திய முதலீட்டு தடைகளை விளித்துரைத்தவேளை முன்னர் குறைசேவையாற்றப்பட்ட சமூகங்களில் நிதியியல் அறிவினை கட்டியெழுப்புகின்றன.

ஏழு முக்கிய இடங்களில் நேருக்கு நேராக கல்வி அமர்வுகள் நடாத்தப்பட்டன: வவுனியா, நுவரெலியா மற்றும் மாத்தளை, தம்புல்ல, மாத்தறை, கம்பஹா மற்றும் இரத்தினபுரி.

பாடசாலை வெளிக்கள நிகழ்ச்சித்திட்டங்கள்

வாழ்க்கை பூராவுமான பொருளாதார திறன்களை விருத்திசெய்வதற்கு நிதியியல் எண்ணக்கருக்களில் ஆரம்பகால வெளிப்பாடானது முக்கியமானதொன்றாகும். இதனை இனங்கண்டு, நாம் பல்வேறு பிராந்தியங்களிலுள்ள ஆறு பாடசாலைகளில் எட்டுகின்ற இலக்குவைத்த கல்வி முன்னெடுப்பினை அமுல்படுத்தினோம். இங்கு மாணவர்களுக்கு அடிப்படை நிதியியல் மற்றும் மூலதனச் சந்தை கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன

பல்கலைக்கழக வெளிக்கள திட்டங்கள்

பல்கலைக்கழக மாணவர்களிடையே நிதியியல் அறிவினை மேம்படுத்துவதற்கும் பிணையங்கள் சந்தையில் அவர்களது பங்குபற்றலை ஊக்குவிப்பதற்கும் வடிவமைக்கப்பட்ட விசேட விழிப்புணர்வு திட்டங்களை நடாத்துவதற்கு இலங்கை முழுவதுமுள்ள தேசிய பல்கலைக்கழகங்களுடன் நாம் செயலூக்கமாக ஈடுபடுகின்றோம்.

பல்கலைக்கழக மாணவர்களை அவசியமான நிதியியல் அறிவுடன் தயார்படுத்துவதிலான முன்னிறுத்தத்துடன் இந்த திட்டங்கள் மூலதனச் சந்தை கொள்கைகளில் அவர்களது புரிந்துணர்வினை ஆழமாக்கும் நோக்கைக் கொண்டிருந்தவேளை துறைக்கான ஒரு எதிர்கால திறன் தேக்கத்தையும் பேணும். வருடம் முழுவதும், ஐந்து பல்கலைக்கழக திட்டங்கள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டதுடன், இங்கு மாணவர்களுக்கு முதலீட்டு மூலோபாயங்கள், சந்தை இயக்கவியல் மற்றும் நிதியியல் தீர்மானம் மேற்கொள்வதில் மதிப்புமிக்க நுண்ணறிவானது வழங்கப்பட்டது.

இந்த முன்னெடுப்பானது நிதியியல் நிலத்தோற்றங்களை சமாளிப்பதற்கான திறன்களுடன் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வலுவளித்ததுடன் மூலதனச் சந்தைத் துறையில் தொழில் வாய்ப்புக்களை ஆராய்வதற்கு அவர்களை ஊக்கமளித்தது.

இ.பி.ப.ஆ. மற்றும் இலங்கை CFA சங்கத்தின் செயலமர்வுகள்

இ.பி.ப.ஆ. இலங்கையின் CFA சங்கத்துடன் கூட்டிணைந்து வளர்ந்துவரும் சந்தை இயக்காற்றல் மற்றும் முறைமைப்படுத்தல் கட்டமைப்பினை விளித்துரைப்பதற்காக வடிவமைக்கப்பட்ட இரண்டு உயர் தாக்கமுள்ள கல்வி முன்னெடுப்புகளை வெற்றிகரமாக வழங்கியது.

முதலாவது திட்டமான, உட்கட்டமைப்பு முறிகளில் முறைமைப்படுத்தல் கட்டமைப்பினை புரிந்துகொள்ளல் பங்குபற்றுனர்களுக்கு உட்கட்டமைப்பு முன்னிறுத்தமான கடன் கருவிகளை ஆளுகை செய்யும் விசேட முறைமைப்படுத்தல் சூழலினுள் விரிவான நுண்ணறிவினை வழங்கியது.

மீளாய்வாண்டின்போது, முதலீட்டு விளையாட்டு மற்றும் மூலதனச் சந்தையில் அதன் தாக்கங்கள் என்றழைக்கப்பட்ட ஒரு இயங்கலை நிகழ்ச்சியினை நாம் விருந்தோம்பினோம். இந்த முன்னோக்கிய அமர்வானது விளையாட்டுப் போக்குகள் எவ்வாறு முதலீட்டாளர் நடத்தையினை மாற்றுகின்றது, சந்தை பங்குபற்றுனர் போக்குகள் மற்றும் இன்றைய டிஜிட்டல் நிலத்தோற்றத்தில் முறைமைப்படுத்தல் சிந்தனை என்பவற்றை பரிசீலனை செய்தது.

இந்த கூட்டு முன்னெடுப்புகள் இலக்குவைத்த தொழில்சார் கல்வியினூடாக நிலைநாட்டப்பட்ட சந்தை கட்டமைப்புகள் மற்றும் வளர்ந்துவரும் போக்குகளை விளித்துரைப்பதற்கான எமது கடப்பாட்டினை பிரதிபலிக்கின்றன.

100 பாடசாலை கழகங்கள் முன்னெடுப்பு

இ.பி.ப.ஆ., கொ.ப.ப., கல்வி அமைச்சு மற்றும் ஜனாதிபதியின் செயலகத்துடன் ஒருங்கிணைந்து இலங்கையின் கல்வி முறைமையில் நிதியியல் அறிவினை ஊக்குவிப்பதற்கான ஒரு முக்கியமான படியாக 2023 இல் மூலதனச் சந்தை கழகங்கள் முன்னெடுப்பினை ஆரம்பித்தது. இந்த முன்னெடுப்பானது மூலதனச் சந்தை பற்றி அவசியமான அறிவினை மாணவர்களுக்கு வழங்கும் நோக்கத்தைக் கொண்டதுடன், அவர்கள் அறிவுபூர்வமான நிதியியல் தீர்மானங்கள் மேற்கொள்வதனை இயலுமையாக்குகின்றது. முதல் 100 பாடசாலைகள் வர்த்தகப் பிரிவில் Z புள்ளி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டதுடன், இந்த பாடசாலைகளுக்கு அவர்களது புதிதாக நிறுவப்பட்ட மூலதனச் சந்தை கழகங்களுக்கான பட்டயச் சான்றிதழ் மாகாண வைபவங்களில் வழங்கப்பட்டன.

புதிய கழகங்களுக்கு துணையளிப்பதற்கு, ஆசிரியர்களது நிதியியல் அறிவினை மேம்படுத்துவதற்கு ஆசிரியர் பயிற்சித் திட்டங்களை நாம் நடாத்தினோம். இந்த திட்டங்கள் ஆசிரியர்கள் அவர்களது பாடத்தில் மூலதனச் சந்தை கருத்துக்களை உள்ளடக்குவதற்கான சாதனங்களை வழங்கியுள்ளதுடன், மூலதனச் சந்தையினை புரிந்துகொண்டு அதனுடன் ஈடுபடுவதற்கு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு துணையளிக்கின்றது.

இந்த முன்னெடுப்பினை தொடர்வதற்காக, கெப்பிட்டல் மார்க்கட் மாஸ்டர்ஸ் என்றழைக்கப்பட்ட ஒரு புதிர் போட்டியானது தெரிவுசெய்யப்பட்ட 100 பாடசாலைகளிடையே இடம்பெற்றது. சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் நடாத்தப்பட்ட இப்புதிர் போட்டியானது மூலதனச் சந்தைகள், பொது அறிவு, இலங்கையின் பொருளாதாரம், நடப்பு விவகாரங்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு போன்ற தலைப்புகளை உள்ளடக்கியிருந்தது. போட்டியானது இரண்டு கட்டங்களில் இடம்பெற்றது: மட்டக்களப்பு, அநுராதபுரம், கண்டி மற்றும் கொழும்பு பிராந்திய வெற்றியாளர்களுடன் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியதுடன் இங்கு மூன்று இறுதி வெற்றியாளர்கள் மகுடம் சூட்டப்பட்டார்கள். இந்த முன்னெடுப்பின் வேகமானது மாணவர்களை ஒரு இயக்காற்றலான மற்றும் ஊடாட்டமான விதத்தில் ஈடுபடுத்தியதுடன், ஒரு போட்டி மனப்பான்மை பேணப்பட்டவேளை நிதியியல் கருத்தாக்கத்தில் அவர்களது புரிந்துணர்வினையும் மேம்படுத்தியது.

இ.பி.ப.ஆ. IOSCO இனது கொள்கை குழு 8 இன் கூட்டத்தினை விருந்தோம்பியது

இ.பி.ப.ஆ. அதன் சர்வதேச ஈடுபாட்டில் சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழுக்கள் ஒழுங்கமைப்பின் (IOSCO) சிற்றளவு முதலீட்டாளர்களிலான குழு (குழு 8) கூட்டத்தினை கொழும்பில் 2024 ஜூன் 26 முதல் 28 வரை வெற்றிகரமாக விருந்தோம்பியதுடன் ஒரு முக்கியமான மைல்கல்லினை அடைந்தது. இந்த மதிப்புமிக்க ஒன்றுகூடலானது அவுஸ்திரேலியா, பெல்ஜியம், பிரேசில், ஜேர்மனி, ஸ்பெயின், ஹொங்கொங், இந்தியா, சிங்கப்பூர் மற்றும் சவூதி அரேபியா உள்ளடங்கலான பன்முகமான பொருளாதாரங்களிலிருந்து முறைமைப்படுத்தல் அதிகாரிகளை பிரதிநிதித்துவம் செய்யும் 22 குழு அங்கத்தவர்களை ஒன்றுசேர்த்தது.

இந்த சர்வதேச கருத்துக்களத்தினை விருந்தோம்பியதன் மூலம், இ.பி.ப.ஆ. உலகளாவிய முறைமைப்படுத்தல் ஒத்துழைப்பு மற்றும் பிணையங்கள் முறைமைப்படுத்தலில் உலகளாவிய நியமங்களை வடிவமைப்பதற்கு அதன் செயலூக்கமான பங்களிப்பிற்கு இலங்கையின் கடப்பாட்டினை வெளிப்படுத்துகின்றது. இந்நிகழ்வின் வெற்றிகரமான ஒழுங்கமைத்தலானது சர்வதேச முறைமைப்படுத்துபவர் சமூகத்திடையே இலங்கையினை ஒரு ஈடுபாடுடைய பங்குபற்றுநராக நிலைப்படுத்துவதுடன், முதலீட்டாளர் பாதுகாப்பு மற்றும் கல்வியில் உலகளாவிய சிறந்த நடைமுறைகளை கடைப்பிடிப்பதற்காக இ.பி.ப.ஆ. இன் அர்ப்பணிப்பினை கோடிட்டுக் காண்பிக்கின்றது.

IOSCO' இனது உலக முதலீட்டாளர் வார பிரச்சாரம்

IOSCO உலக முதலீட்டாளர் வாரத்தின்போது நாம் இயங்கலை ஈடுபாடு மற்றும் ஊடாட்டமான கற்றல் நடவடிக்கைகளினூடாக நிதியியல் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக இத்திட்டத்தினை நடாத்தினோம்.

எமது சமூக ஊடக முன்னெடுப்பானது பன்முகமான மேடைகளிடையே முக்கியமான முதலீட்டாளர் கல்வி உள்ளடக்கங்களை வழங்கியதுடன், முதலீட்டாளர் மீளெழுச்சி, நிலைபேறுடைய நிதியளிப்பு மற்றும் முதலீட்டாளர் பாதுகாப்பு ஆகிய மூன்று முக்கிய கருப்பொருள்களில் முன்னிறுத்தம் செய்யப்பட்டது.

எமது பிரச்சாரத்தின் சிறப்பம்சம் என்னவெனில், பல்கலைக்கழகச் சமர் எனப்படும் பல்கலைக்கழகங்களிடையேயான புதிர் போட்டியாக காணப்பட்டதுடன் இது உலக முதலீட்டாளர் வாரத்துடன் ஒத்திருக்கின்றது. இப்போட்டியானது இலங்கையின் இளைஞர்களிடையே முதலீடு செய்தல் மற்றும் மூலதனச் சந்தையினை சமீபமாக கொண்டுவந்தது. இது புத்திசாலித்தனமான முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்வதற்கு மற்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்வதற்கு தயாரான நிதியியல் ரீதியாக மிகவும் விழிப்புணர்வுள்ள தலைமுறையினை உருவாக்குவதற்கு துணைபுரிகின்றது.

டிஜிட்டல் உள்ளடக்கம் மற்றும் நேரடியான கற்றல் ஆகிய கூட்டுசேர்ந்த அணுகுமுறையானது நிதியியல் அறிவினை கட்டியெழுப்புவதற்கான எமது கடப்பாட்டினை காண்பிப்பதுடன், சந்தை நேர்மை மற்றும் முதலீட்டாளர் பாதுகாப்பு என்பவற்றை புரிந்துகொள்ளும்வேளை புத்திசாலித்தனமான முதலீட்டுத் தீர்மானங்களை மக்கள் மேற்கொள்வதற்கும் உதவுகின்றது.

மூலோபாய டிஜிட்டல் ஈடுபாடு: டிஜிட்டல் யுகத்தில் நிதியியல் அறிவினை மேம்படுத்துதல்

டிஜிட்டல் ஈடுபாட்டினை பெருமமாக்குவதற்கு எமது முதலீட்டாளர் கல்வி முன்னெடுப்புகளை நாம் மூலோபாயமாக மீள்நிலைப்படுத்தியுள்ளோம். இவ்வருடத்தில், நாம் டுவிட்டர், முகப்புத்தகம் மற்றும் இன்ஸ்டகிராம் போன்ற நிலைநிறுத்தப்பட்ட மேடைகளுக்கு அப்பால் எமது சமூக ஊடக

மூலோபாய இலக்கு 4

மூலோபாய இலக்கு 4 - மூலதனச் சந்தையில் அறிவுபூர்வமான முதலீட்டுத் தீர்மானம் மேற்கொள்வதனையும் ஆர்வத்தினையும் ஊக்குவித்தல்

பிரசன்னத்தினை நாம் விரிவாக்கினோம். இது நிதியியில் கல்விக்கான ஒரு விரிவான டிஜிட்டல் சூழலமைப்பாக எமது லின்கடன் பக்கத்தின் மூலோபாய மென் ஆரம்பத்துடன் ஆகும்.

எமது டிஜிட்டல் மூலோபாயமானது சர்வதேச பெண்கள் தினம் மற்றும் உலக முதலீட்டாளர் வாரம் போன்ற முக்கிய நிதியியல் நாளேடு தினங்களுக்கமைய சமூக ஊடக பிரச்சாரங்களை பயன்படுத்துகின்றது. திட்டமிடப்பட்ட இந்த முன்னெடுப்புகள் பின்வரும் முக்கிய குறிக்கோள்களில் சீரான கல்வி உள்ளடக்கங்ளை வழங்குகின்றது.

- அதிநவீன முதலீட்டு மோசடி திட்டங்களை இனங்கண்டு தவிர்த்தல்
